# கல்கி



ALKI டிசம்பர் 6, 1953 **4** அணா



தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...
லைப்பாயின்
பாதுகாக்கும் நுரையினால்!
LIFEBUOY
SOAP
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவறாமல் ஸ்நானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது. உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
லைப்பாய் சோப்
L. 229-50 TM

கல்கி

# பொருளடக்கம்


மலர் 13
இதழ் 19

1953 டிசம்பர் 6


விஜய ஆண்டு
கார்த்திகை 21



| | | | |
|---|---|---|---|
| ஆரியர்-திராவிடர் என்னும் அறிவீனம்! | (தலையங்கம்) | ... | 3 |
| யாரை யார் விரட்டுவது? | ... | ... | 5 |
| மற்ற மாகாணங்களும் பின்பற்றியே தீரும்! | ... | ... | 6 |
| ஆந்திரத் தலைநகர்! | ... | ... | 7 |
| எங்கே எடுத்துச் செல்கிறாய்? (அட்டைப் படம்) | ... | ... | 7 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| மகா காவிய அரங்கேற்று விழா | ஸோமாஸ் | ... | 19 |
| கடலும் கரையும் | சோமு | ... | 22 |
| ஜிப்பியும் போப்பியும் | விஜயம் | ... | 29 |
| குளவிக் கூடு | ஆர். எஸ். மணி | ... | 33 |
| எதிரொலி | எஸ். டி. சீனிவாசன் | ... | 38 |
| இரகசியம் இல்லையாம்! | ரகு | ... | 40 |
| மனித மனம் | சம்பந்தம் | ... | 43 |
| மனோரமா | ரமண்லால் வஸந்தலால் தேசாய்-ரா வீ. | ... | 49 |
| இலங்கைத் தமிழரும் இன்பத் தமிழும் | பண்டிதர் கா. பொ. இரத்தினம் | ... | 59 |
| பழங் கதைதானா? | (கார்ட்டூன்) | ... | 61 |
| வட்ட மேஜை | ... | ... | 62 |
| மூவர் ரகசியம் | வசுமதி ராமசுவாமி | ... | 65 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 72 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

## மாரிகாலக் கூச்சல்!




ராஜாஜியை முதன் மந்திரிப் பொறுப்பிலிருந்து நீக்கும் முயற்சிக்கு மாரி காலத்தில் ஆதரவு பெருகி வருகிறதாம்!

# விளம்பர தாரர்களே....

## நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்!

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் என்ற ஸ்தாபனந்தான் சுருக்கமாக ஆங்கிலத்தில் ஏபிஸி என்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தாபனத்தில் இந்தியா, பாகிஸ்தான், ஸிலோன் ஆகிய நாடுகளில் 13 பாஷைகளில் நடத்தப்படும் 125க்கு மேற்பட்ட பிரதான பத்திரிகைகள் அங்கம் வகிக்கின்றன. இந்தப் பத்திரிகைகளின் விற்பனை கணக்கு எந்த சமயத்திலும் ஏபிஸி ஸ்தாபனத்தின் ஆடிட்டர்களால் பரிசோதிக்கப்படுகிறது. அத்துடன் அந்தந்த பத்திரிகையின் நிகர விற்பனை எண்ணிக்கை சர்டிபிகேட்டை ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஏபிஸி ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களுக்கு மட்டும் அந்தரங்கமாக அனுப்பப்படுகிறது. ஒரு விளம்பர தாரர் என்ற முறையில் நீங்கள் ஏபிஸி ஸ்தாபனத்தின் அங்கத்தினராக இருந்தால் உங்களுக்கும் அந்த சர்டிபிகேட் அனுப்பப்படும். அப்போது உங்கள் விளம்பரத்திற்கு நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையின் உண்மை நிகர விற்பனையை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

உங்கள் விளம்பரத்திற்காக நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் எவ்வளவு வாசகர்களைப் பெறுகிறீர்கள் என்ற உண்மையும் உங்களுக்குத் தெரியவரும்.

### ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லிட்.

முபாரக் மன்ஸில், அபோலோ தெரு

கோட்டை, பம்பாய்

கீழ்க்கண்ட விளம்பர தாரர்களும் விளம்பர ஏஜண்டுகளும் ஏற்கெனவே ABC யின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

**விளம்பர தாரர்கள்—**

அல்லேடு போட்டோகிராபிக்ஸ் லிட்., இ. எம். அல்காக் அண்டு மொஹாட்டா லிட்., ஆஸ்ப்ரோ லிட்., இங்லிலாந்து. அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட்., பாமர்லாரி கோ., லிட்., பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிட்., பூட்ஸ் ப்யூர் ட்ரக் கோ. (இந்தியா) லிட்., பர்மாஷெல் ஆயில் ஸ்டோரேஜ் டிஸ்ட்ரிபியூட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்., கால்டெக்ஸ் (இந்தியா) லிட்., ஸெண்ட்ரல் டீ போர்டு. கார்ன் ப்ரொடெக்ஸ் கோ. (இந்தியா) லிட். டன்லப் ரப்பர் கோ. (இந்தியா) லிட். கிளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) லிட். கோத்ரெஜ் ஸாப்ஸ் மானுபாக்சரிங் கோ., லிட்., இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிட்., இம்பீரியல் டுபாகோ கோ. ஆப் இந்தியா லிட்., இந்தியா டயர் அண்டு ரப்பர் கோ. (இந்தியா) லிட்., லீவர் பிரதர்ஸ் (இந்தியா) லிட்., லிப்டன் லிட்., நாஷனல் கார்பன் கோ. (இந்தியா) லிட்., பார்லி ப்ராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் கோ. லிட்., பஞ்சாபி சந்து ஹல்வாய் கராச்சிவாலா, ஷாலிமார் பெயிண்ட், கலர் அண்டு வார்னிஷ் கம்பெனி லிட்., டாடா ஆயில் மில்ஸ் கோ. லிட்., வால்கார்ட் பிரதர்ஸ்.

**விளம்பர ஏஜண்டுகள்—**

அட்வர்டைஸிங் ஸேல்ஸ் பிரமோஷன் கோ., எவரெஸ்ட் அட்வர்டைஸிங் லிட்., கிராண்ட் அட்வர்டைஸிங் இன்க். கீர்ன்ஸ் அட்வர்டைஸிங் ஸர்வீஸ் ஏஜன்ட்ஸ், டி. ஜே. கீமர் அண்டு கோ. லிட்., லின்டாஸ் லிட்., பி. எஸ். மணி அண்டு கம்பெனி, நேஷனல் அட்வர்டைஸிங் ஸர்வீஸ் லிட்., பிரஸ் ஸிண்டிகேட் லிட்., ஷில்பி லிட்., ஸிஸ்டாஸ் லிட்., எப். டி. ஸ்டூவர்ட் லிட்., எல். ஏ. ஸ்ட்ரோனக் அண்டு கோ. (இந்தியா) லிட்., ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனி (ஈஸ்டர்ன்) லிட்.

இதைப் பிரசுரித்தவர்கள் :

ABC ஸ்தாபனத்தின் அங்கத்தினரான 'கல்கி' பத்திரிகை சொந்தக்காரர்கள்

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 19

# ஆரியர் – திராவிடர் என்னும் அறிவீனம்!

நீண்ட காலத்துக்குப் பிறகு இவ்வாண்டில் தமிழ்நாடு தனி அரசியல் பகுதியாகியிருக்கிறது. இதனால் ஊக்கம் கொண்டு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேற்றப் பாதையில் செல்லப் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டும். இச்சமயத்தில் பிரிவினைகளையும் வேற்றுமைகளையும் கற்பனை செய்து வளர்த்து வருவோர் தமிழர்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள்; ஆதலின் தமிழ் நாட்டுக்கே பெருந் துரோகம் செய்கிறார்கள்.

தமிழகத்தின் முன்னேற்றத்துக்குத் தற்சமயம் முட்டுக்கட்டைகளில் ஒன்றாக இருப்பது ஆரியர் - திராவிடர் என்று பிரிக்கும் அறிவீனமாகும். சரித்திர ஆதாரங்களுக்கும் பிரத்யட்சப் பிரமாணங்களுக்கும் சிறிதும் ஒவ்வாத இந்த வேற்றுமையை இந்நாட்டில் சில குறுகிய உள்ளம் படைத்த சுயநலக் கும்பல்கள் வற்புறுத்திப் பிரசாரம் செய்து வருகின்றன. இந்தப் பிரசாரம் எவ்வளவு அபத்தமானது என்பது பற்றிச் சென்ற வாரத்தில் ராஜாஜியும், ஸ்ரீ சிவஞான கிராமணியும், ஸ்ரீ சி. பி. ராமஸ்வாமி ஐயரும், ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளையும், ஸ்ரீ ஜீவானந்தமும் வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள்.

ஆரியர்களும் சரி, திராவிடர்களும் சரி, பாரத நாட்டுக்கு வெளியிலுள்ள நாடுகளிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டுக்கு வந்தவர்கள் என்று மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சியாளர் சிலர் கூறினார்கள். அதை இந்நாட்டு ஆங்கிலப் படிப்பாளர் சிலரும் ஆராயாமலே ஒப்புக் கொண்டார்கள்.

ஆரியரும் திராவிடரும் தனித்தனி இனத்தினர் என்றும் இந்தியாவுக்கு வெளியிலிருந்து இங்கே போந்தவர்கள் என்று வைத்துக் கொண்டாலும், அப்படி அவர்கள் இந்நாட்டுக்கு வந்தது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் என்று அதே ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். குறைந்தபட்சம் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் வந்திருக்க வேண்டும். வந்தவர்கள் இமயமலையிலிருந்து குமரி முனை வரையில் பரவியிருக்கிறார்கள். இரு இனத்தார்களும் ஒருவரோடொருவர் பிரிக்க முடியாதபடி கலந்து போயிருக்கிறார்கள். இரு இனங்களின் சமயக் கோட்பாடுகளும், சமூக வழக்க பழக்கங்களும், கலைகளும், பண்பாடுகளும் பிரித்துக் காட்ட முடியாதபடி கலந்து போயிருக்கின்றன.

இமயமலையிலுள்ள நேப்பாள நாட்டிலிருந்து தெற்கே ஈழ நாட்டிலுள்ள திரிகோண மலை வரையில் சைவ சமயமும் சிவலிங்க வழிபாடும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து நிலை பெற்றிருக்கின்றன. சைவ சமயிகள் அணியும் புறச் சின்னங்களில் ஒன்றான ருத்திராட்சமணிகள் பல்லாயிரம் ஆண்டுகளாக நேப்பாளத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

வேத முறைப்படி யாகங்கள் நடந்து கொண்டிருந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நாட்களிலும் வடநாடும் தென்னாடும் ஆசாரத்திலும் பண்பாட்டிலும் ஒன்றுபட்டிருந்தன. அதன் பின்னர், வடநாட்டில் தோன்றிய புத்தமும் சமணமும் தென்னாட்டில் பரவி ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பெரும் செல்வாக்கு அடைந்திருந்தன.

இவற்றுக்கெல்லாம் பழந் தமிழ் நூல்களிலும் கல் வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் ஒன்றல்ல, இரண்டல்ல, — ஆயிரக் கணக்கான சான்றுகள் இருக்கின்றன.

ஆராய்ச்சி அறிவீனத்தின் சிகரமான ஒரு கொள்கையை, இந்நாளில் ஆரியர்—திராவிடர் பிரிவினையை வற்புறுத்தும் கூட்டத்தார் பரப்பி வருகிறார்கள். வடநாட்டார் ஆரியர் என்றும், தென்னாட்டார் திராவிடர் என்றும், தென்னாட்டில் உள்ள பிராமணர்கள் மட்டும் ஆரியர்கள் என்றும் இவர்கள் கூறி வருகின்றனர். இதை எவ்வித ஆதாரமும் அற்ற, அறிவுக்கு முற்றும் புறம்பான பிதற்றல் என்றுதான் கூறவேண்டும்.

வடமொழியாகிய சமஸ்கிருதமும், வடமொழியிலுள்ள நாலு வேதங்களும், வேதங்களைப் பயின்ற பிராமணர்களும், அவர்கள் நடத்திய யாகங்களும் ஆரியர்களுக் குரியனவென்று பிரிவினை வாதிகள் கூறுகிறார்கள்.

ஆனால் தமிழ் நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுளிருந்து வேதங்கள் ஓதி, யாகங்கள் நடத்தி வந்திருக்கிறார்கள். அவர்களைத் தமிழ் நாட்டு மன்னர்களும் மற்றக் குடிமக்களும் ஆதரித்து வந்திருக்கிறார்கள். வேதங்களையோ யாகங்களையோ அயல்நாட்டுக்குரியன வென்றும், பிராமணர்களை வேற்று நாட்டார் என்றும் அந்நாளில் தமிழர்கள் கருதவில்லை.

செய்வத் தமிழ் மொழியில் உள்ள நூல்களில் மிகப் பழமையானது ஒன்று, புறநானூறு என்னும் தொகுப்பு நூல்.

'பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே நம் தமிழகத்தில் விளங்கிய புலவர் பெருமக்கள் அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பு இத்தொகை நூல்' என்று தமிழாராய்ச்சியாளர் சிலர் கருதுகிறார்கள். புறநானூற்றிலுள்ள பாடல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கடைச்சங்க காலத்தவை என்று ஆராய்ச்சிக்காரர் அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

அத்தகைய பழம்பெரும் நூலிலேயே ஆரியச் சமயக் கொள்கைகளும் பண்பாடுகளும் தமிழர் வாழ்க்கையோடு ஒன்றுபட்டிருந்தன என்பதற்கு எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன.

புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றில் புகழ்ந்து பாடப் பெற்றிருக்கும் பாண்டிய மன்னன் ஒருவனுக்குப் 'பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்று பெயர். இவனைப் புலவர் "பஃறுளியாற்று மணலினும் பல யாண்டு வாழ்க!" என்று வாழ்த்தி யிருக்கிறார். ஆதலின் இப்பாண்டியன், குமரிக் கோடும் பஃறுளி ஆறும் கடல் கொள்ளப் படுவதற்கு முன்பு தமிழகத்தில் இருந்தவன் என்று அநுமானிக்கின்றனர்.

எப்படியிருப்பினும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுளிருந்த இப்பாண்டிய மன்னன், பற்பல யாகங்கள் செய்து அதையே தன் பெயருக்குப் புகழ் தரும் அடைமொழியாகப் பெற்றிருக்கிறான். அவனைப் பற்றிப் பாடிய பாடலில்,

"பணியியர் அத்தை நின்குடையே, முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே;
இறைஞ்சுக பெரும! நின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!"

"சிவபெருமானின் கோயிலை வலம் செய்து வரும்போது உன் வெண் கொற்றக் குடை தாழட்டும்; நான்மறை முனிவர் உன்னை ஆசீர்வதிக்கக் கையைத் தூக்கும்போது உன் சென்னி தாழட்டும்!" என்று புலவர் வாழ்த்தி யிருக்கிறார்.

இன்னொரு பாடலில்,

"நற்பனுவல் நால் வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம்நட்ட வியன்களம் பல கொல்!"

என்று அப் பாண்டியன் செய்த யாகங்களையும், யாகங்களில் ஆவுதி பொங்கிடுதலையும், யாகங்களை முடித்தபின் நட்ட யூபங்களையும் பற்றிப் புலவர் வியந்து பாடி யிருக்கிறார்.

சங்கப் புலவர் பாடிய சோழ மன்னர்களில் ஒருவனுக்குச் "சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற் கிள்ளி" என்று பெயர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பவனைப் பற்றிய பாடலில்,

"நான்மறை முதல்வர் சுற்றமாக
மன்னரேவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே!"

என்று புலவர் பெருமான் பாடி யிருக்கிறார்.

சேரமான் பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதன் என்பவனைப் பற்றிய பாடலில்,

"பால் புளிப்பினும் பகலிருளினும்
நால்வேதம் நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு"

விளங்குவோன் அம்மன்னன் என்று கூறி,

"அந்தி அந்தணர் அருங் கடனிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே!"

அச்சேரமன்னன் நிலைத்து வாழ வேண்டும் என்று வாழ்த்தி யிருக்கிறார்.

இமயமலையிலும் பொதிகை மலையிலும் அந்தணர்கள் முத்தீ வளர்த்து அருங்கடன் ஆற்றுவதைச் சேர்த்துப் பாடி யிருக்கிறார் புலவர்.

அந்நாளையத் தமிழர்கள் இமயமலை முதல் குமரி முனை வரையில் ஒரே நாடாகக் கருதி யிருக்கிறார்கள் என்பது,

"வடா அது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனா அது உருகெழு குமரியின் தெற்கும்"

என்னும் வரிகளிலிருந்தும் தெளிவாகிறது.

ஆரியரும் திராவிடரும் ஒரே இனமாகி, இரு இனங்களுக்கும் உரிய சமயக் கோட்பாடுகளும் வழக்க பழக்கங்களும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலந்து போய் விட்டன என்பதைத் திட்டமாக நிரூபிக்கும் இத்தகைய நூறு நூறு சான்றுகளை மிகப் பழமையான தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக் காட்டலாம்.

இன்னும் சிறிது பிற்காலத்துக்கு வந்தோமானால் கேட்கவே வேண்டியதில்லை.

வட நாட்டிலிருந்து வந்த பௌத்த சமயமும் சமண மதமும் தமிழர் வாழ்விலும் பண்பாட்டிலும் எவ்விதம் கலந்து விட்டன என்பதை எவரும் எளிதில் அறியலாம்.

காஞ்சியில் பல நூற்றாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்து பெரிய சாம்ராஜ்யம் நிலைநாட்டியிருந்த பல்லவ மன்னர்கள் மகேந்திரன் முதல் அபராஜிதன் வரையில் ஆரியர் தமிழர் என்ற வேற்றுமையையே அறியாதவர்களா யிருந்தார்கள் என்பது அவர்களுடைய பெயர்களைப் பார்த்தவுடனேயே தெரிய வரும்.

விஜயாலய சோழன் முதல் மூன்றாவது இராஜேந்திர சோழன் வரையில் முந்நூறு ஆண்டு காலம் சோழ சாம்ராஜ்யம் சிறப்புற்று விளங்கிய காலத்தில் தமிழகத்தில் ஆரியர்-திராவிடர் என்ற வேற்றுமையை மக்கள் கனவிலும் கருதியதில்லை என்று அக்காலத்திய கல் வெட்டுக்கள்—செப்புப் பட்டயங்கள் அனைத்திலிருந்தும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குலோத்துங்கனின் கலிங்கப் போரைப் பற்றிச் செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியில்,

"மறையவர் வேள்விகுன்றி மனுநெறி அனைத்து மாறித்
துறைகளோராறு மாறிச் சுருதியும் முழக்கம் ஓய்ந்தே"

என்பவை போன்ற எத்தனையோ வரிகள் இருக்கின்றன. இவற்றிலிருந்து அக்காலத்திலும் ஆரியர்-திராவிடர் என்ற வேற்றுமையை யாரும் அறிந்திருக்கவில்லை என்று அறியலாம்.

இப்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆரியர்-திராவிடர் என்னும் இனவேற்றுமை உணர்ச்சியின்றித் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த நாட்டில் இப்போது சில வெள்ளைக்காரச் சரித்திர ஆராய்ச்சியாளரின் கட்டுக்கதைகளை ஆதாரமாகக் கொண்டு இல்லாத வேற்றுமைகளைப் புதிதாக உண்டாக்கி வளர்க்கவும் பார்க்கிறார்கள்.

பொய்ம்மையை அடிப்படையாகக் கொண்ட இந்த வேற்றுமைக் கிளர்ச்சி தமிழகத்தில் ஒரு நாளும் வெற்றி பெறப் போவதில்லை.

புறநானூற்றில் உள்ள மற்றொரு அற்புதமான பாடலின் முதல் வரி பின்வருமாறு:—

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"*

எல்லா ஊரும் நம் ஊர்தான்; எல்லா மக்களும் நம் உறவினர்தான்.

பழந்தமிழ் மக்கள் பண்பாட்டின் ஜீவநாடி இந்த ஒரு வரியில் அடங்கியிருக்கிறது. இதற்குப் புறம்பாக வேற்றுமைகளைக் கற்பித்துப் பகைமையை வளர்ப்பவர்கள் தமிழர்கள் ஆகமாட்டார்கள். "அவர்களை விரட்டி விடுவோம், இவர்களை ஓட்டிவிடுவோம்" என்று பிதற்றிக் கொண்டு வெறிபிடித்து அலைகிறவர்களுக்குத் தமிழ் மக்கள் ஒருகாலும் செவி சாய்க்கமாட்டார்கள். தமிழ்ப் பண்புக்கு முற்றும் மாறான கொள்கைகளை ஏதோ சுயநல காரணங் கொண்டு பரப்புகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

* கேளிர்: உறவினர்.

# யாரை யார் விரட்டுவது?

தமிழ் நாட்டிலிருந்து ஆரியரை விரட்டி விடுவோம் என்றும் வட இந்தியரைத் துரத்தி விடுவோம் என்றும் கூச்சல் போடுகிறவர்கள், "பொதிகை மலையைத் தூக்கிச் சிந்து நதியில் போட்டு விடுவோம்; திருவேங்கடமலையைத் தூக்கி இலங்கைக்கு அனுப்பி விடுவோம்" என்பவை போன்ற வகைக்குதவாத பேச்சுக்களைப் பேசுகிறார்கள்.

சுதந்திர பாரத தேசத்தில் வாழும் யாரையும் எவரும் விரட்டிவிட முடியாது.

இந்த நாட்டில் இமயம் முதல் குமரிவரையில் யாரும் எங்கேயும் போகலாம், வசிக்கலாம், தொழில் செய்து பிழைக்கலாம் என்று இந்திய சுதந்திர சாஸனம் உரிமை அளித்திருக்கிறது.

தமிழகத்தில் இன்று வாழ்வோர் சிலர் ஆரியர்கள்—வடநாட்டிலிருந்து வந்தவர்கள்—என்று விவாதத்துக்காக வைத்துக் கொண்டாலும், அவர்களை யார் விரட்ட முடியும்! எதற்காக, எப்படித் துரத்தி விட முடியும்!

நேற்று வந்து தமிழ் நாட்டில் குடியேறிய மார்வாரிகளையும், குஜராத்திகளையும், பஞ்சாபிகளையும் போகச் சொல்ல முடியாது.

சில நூறு வருஷங்களுக்கு முன்னால் தமிழ் நாட்டிற்கு வந்து குடியேறிய ரெட்டியார்களையும், நாயுடுமார்களையும், நாயக்கர்களையும், ராஜூக்களையும் போகச் சொல்ல முடியாது.

பல்லாயிரம் வருஷங்களாக இந்தத் தமிழ் நாட்டில் வாழ்ந்து வளப்படுத்தித் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு தமிழில் ஒப்பற்ற நூல்களை இயற்றித் தந்திருப்பவர்களை விரட்டி விடுகிறதென்பது வெறும் பேச்சுக்காரர்கள் காணும் பகற்கனவேயாகும். அவ்விதம் சொல்லுகிறவர்களுக்கே அதில் நம்பிக்கை இருக்க முடியாது. மக்களை ஏமாற்றித் தங்கள் காரியம் எதையோ சாதித்துக் கொள்வதற்காகவே அவ்விதம் அவர்கள் பேசுகிறார்கள். அறிவாளிகளான தமிழ் மக்கள் இந்தப் பேச்சுக்களை விரும்பவும் மாட்டார்கள்; ஒப்புக் கொள்ளவும் மாட்டார்கள். நெறி தவறிப் போகிறவர்களைத் திருத்தவும் நேர் வழிக்குக் கொண்டு வந்து காப்பாற்றுவார்கள்.

இலங்கைத் தீவில் சென்ற நூற்றைம்பது வருஷங்களுக்குள் சென்று குடியேறிய தமிழர்களுக்கு இலங்கை சர்க்கார் பூரண பிரஜா உரிமை தர வேண்டும் என்று நாம் கோருகிறோம்; வற்புறுத்துகிறோம்; போராடுகிறோம்.

இலங்கை சர்க்காரும் அத்தனை தமிழர்களை விரட்டி விடப் போகிறோம் என்று சொல்லவில்லை. "இங்கேயே நிரந்தரமாகக் குடியேறியவர்களுக்கு மட்டும் பூரண பிரஜா உரிமை தருவோம். தற்காலிகமாக வந்து பொருள் திரட்டிக் கொண்டு போகிறவர்களுக்குப் பிரஜா உரிமை தரமாட்டோம்" என்றுதான் கூறுகிறார்கள்.

தென்னாப்பிரிக்காவில் காட்டுமிராண்டி ஆட்சி நடத்தி உலகத்தின் அதிருப்தியையே சம்பாதித்துக் கொண்டு வரும் டாக்டர் மலான் சர்க்கார் கூட "இந்தியர்களையெல்லாம் விரட்டிவிடப் போகிறோம்" என்று சொல்லவில்லை.

அப்படி இருக்கும்போது, பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் வாழ்ந்து வருகிறவர்களை விரட்டி விடுவோம் என்ற கூச்சலைக் கிளப்புவதில் என்ன பொருள் இருக்கிறது! நேருஜி போன்றவர்கள் இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில் "காட்டுமிராண்டிகள் சிலரும் இருக்கிறார்கள் போலும்!" என்று கருதுவதற்கே அத்தகைய கூச்சல்கள் காரணமாகின்றன.

திராவிடர் என்றும் ஆரியர் என்றும் ஆதாரமற்ற பிரிவினையைச் செய்து கொண்டு, திராவிடருக்கு ஆரியர்கள் விரோதிகள் என்றும், திராவிடர்கள் ஆரியர்களிடமிருந்து தனித்து விட வேண்டும் என்றும் கூறுவதில் லாப நஷ்டம் என்ன என்பதையும் பார்க்க வேண்டும்.

இப்பிரிவினைக் கிளர்ச்சியினால் 'திராவிடர்கள்' என்று சொல்லிக் கொள்கிறவர்களுக்கு அளவில்லாத நஷ்டம் என்பதைத் தவிர, லாபம் என்பது அணுவளவும் இல்லை.

குமரி முதல் இமயம் வரையில் பரந்து விரிந்த பாரத தேசத்தின் மீது சம உரிமையைக் கைவிட்டு விட்டுப் பத்து ஜில்லாக்கள் கொண்ட பிரதேசத்தில் முடங்கிக் கிடக்க வேண்டியவர்களாகிறார்கள்.

இராமர், கிருஷ்ணர், புத்தர், மகாவீரர், அசோகர், ஹர்ஷவர்த்தனர், சிவாஜி, சைதன்யர், துகாராம், தயானந்தர், பரமஹம்ஸர், விவேகானந்தர், ரவீந்திரநாதர், லோகமான்யர், காந்தி மகாத்மா, சுபாஷ் போஸ் போன்ற மகா புருஷர்கள் அனை

வரும் தங்களுக்கு உரியவர்கள் அல்லவென்று தாங்களே கைவிடுகிறார்கள்.

இன்னும் குறுகிய திராவிட நோக்கங் கொண்டவர்கள், அகஸ்தியர், தொல்காப்பியர், கபிலர், சம்பந்தர், மாணிக்க வாசகர், பெரியாழ்வார், ஆண்டாள், சங்கரர், இராமானுஜர், பாரதியார், மகா மகோபாத்தியாய சாமிநாதய்யர், ஸி. வி. ராமன் ஆகியவர்களை யெல்லாம் தங்களுக்குச் சம்பந்த மில்லாதவர்கள் என்று கைவிட வேண்டியவர்களாகிறார்கள்.

இதுபோலவே இலக்கிய உலகில் எண்ணற்ற உவமை சொல்ல இயலாத அற்புதச் செல்வங்களை அவர்கள் தத்தம் செய்ய வேண்டியவர்களாகிறார்கள்.

எந்த விதத்திலும் நிரூபிக்க முடியாத பிரிவினையை,—சரித்திர ஆதாரமோ பிரத்யட்சப் பிரமாணமோ இல்லாத பிரிவினையை,—காமாகக் கற்பனை செய்துகொண்டு எல்லாத் துறைகளிலும் கஷ்டத்தை ஏன் தேடிக் கொள்ள வேண்டும்!

"விரட்டி விடுவோம்" "துரத்தி விடுவோம்" என்று நடக்காத காரியங்களைச் சொல்லிக் கொண்டு நாட்டில் மனக் கசப்பையும் ஆவேசத்தையும் ஏன் வளர்க்க வேண்டும்!

* * *

ஆரிய—திராவிட இனப் பிரிவினையை வளர்த்துத் துவேஷத்தை உண்டாக்குவது வேறு. சாதி வேற்றுமைப் பிரச்னை வேறு என்பதை அறிவாளிகளான தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

சாதி வேற்றுமை என்பது முற்காலத்திலும் இருந்தது; இக்காலத்திலும் இருக்கிறது.

வடநாட்டிலும் சாதி வேற்றுமை உண்டு; தென்னாட்டிலும் அது உண்டு.

முற்காலத்திலும் மகான்கள் பலர் சாதி வேற்றுமையைப் பழித்திருக்கிறார்கள்.

இக்காலத்திலும் விவேகானந்தர், காந்தி மகான், தாகூர், பாரதியார் முதலிய பெரியோர்கள் சாதி வேற்றுமைகளை ஒழிக்கப் பாடுபட்டிருக்கிறார்கள்.

ஆதிகாலத்தில் சாதிப் பிரிவினை எந்த நோக்கத்துடன், எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டதாயிருந்தாலும், இக்காலத்துக்கு அது பொருந்தாது என்பதை அறிவாளிகள் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக் கொள்கிறார்கள்.

நம்மிடையே வாழ்ந்து வரும் பெரியோர்களில் சாதி வேற்றுமையை ஒழிக்கப் பாடுபடுகிறவர்களில் நேருஜியையும் ராஜாஜியையும் மிஞ்சியவர்கள் யாரும் இல்லை.

சாதி வேற்றுமை ஒழிந்து கொண்டு வருகிறது; அடியோடு ஒழிந்து விடத்தான் போகிறது.

நிச்சயமாக நடக்கப் போகிற ஒரு காரியத்தை முன்னிட்டு ஆரியர் – திராவிடர் என்னும் இனப் பகைமையையோ, வடநாட்டார்–தென்னாட்டார் என்னும் பிரிவினை உணர்ச்சியையோ வளர்ப்பது சிறிதும் அவசியமில்லை; தீமை பயப்பதுமாகும்.

" எப்பதம் வாய்த்திடுமேனும்— நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் — வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் "

என்பதே சுதந்திர பாரத நாட்டின் தாரக மந்திரமாயிருக்க வேண்டும். அதுவே தெய்வத் தமிழ் நாட்டின் மறைமொழியாகவும் விளங்க வேண்டும்.

# மற்ற மாகாணங்களும் பின்பற்றியே தீரும்!

எதிர்ப்பாளர், குழப்படவாதிகள் இவர்களில் இரு சாரார் உண்டு. எந்த நல்ல காரியத்தையும் எதிர்த்துக் குட்டை குழப்புவதையே தங்கள் கடமையாகக் கொண்டவர்கள் ஒரு சாரார்.

மற்றொரு சாரார் ஆய்ந்தோய்ந்து பாராமல், விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு எதிர்ப்புப் படலத்தில் சேருபவர்கள். இந்த வகை அவசரவாதிகள் சென்னை சர்க்காரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை இனி எதிர்க்க மாட்டார்கள் என்று நம்பலாம்.

ஏனெனில் பேராசிரியர் ஆர். வி. பருலேகர் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிட்டியார், மேற்படி கல்வித் திட்டத்தை அலசி ஆராய்ந்து தங்களுடைய சிபார்சுகள் அடங்கிய அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்; அந்தத் திட்டத்தின் அடிப்படையான அம்சங்களை அப்படியே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்; அதைச் சரிவர நடத்துவதற்கான பல அரிய யோசனைகளையும் கூறியிருக்கிறார்கள்.

1. தற்போதுள்ள சாதனங்களைக் கொண்டே இன்னும் பெருவாரியான குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்க வேண்டும்.

2. ஏட்டுக் கல்வி முறை மூன்று மணி நேரத்துக்கு மேல் இருக்கக் கூடாது.

3. ஒரு வேளை பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் சிறுவர்கள் மறு வேளையில் ஏதாவது தொழில் துறையில் பயிற்சி பெற வேண்டும்.

இந்த மூன்றும் சென்னை சர்க்கார் கல்வித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். இவற்றைப் பருலேகர் கமிட்டி முற்றிலும் அங்கீகரித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தியாவில் பதினாறு வயதுக்கு உட்பட்ட சகல குழந்தைகளும் பத்து வருஷ காலத்துக்குள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகிவிட வேண்டும் என்று சுதந்திர இந்தியாவின் அரசியல் திட்டம் தெளிவாகக் கூறுகிறது.

மேற்படி அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து இப்போது மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. ஆனால் கல்வித் துறையில் இன்னும் யாதொரு அபிவிருத்தியும் ஏற்படவில்லை. இந்த நிலையில் இன்னும் ஏழு ஆண்டுகள் என்ன, பதினேழு ஆண்டுகள் ஆயினும் எத்தகைய முன்னேற்றமும் ஏற்படுவதற்கு இடமில்லை.

மாகாண சர்க்கார்கள் தங்கள் மொத்த வருமானத்தில் நூற்றுக்கு இருபது வீதம் கல்விக்காகச் செலவிட வேண்டும் என்று ஐந்து வருஷத் திட்டம் கூறுகிறது.

இப்போதே சென்னை மாகாண சர்க்கார் அவ்வளவு தொகை செலவு செய்து வருகிறார்கள். சர்க்கார் ஒதுக்கி வைக்கும் கல்வி மானியம்தான் வருஷத்துக்கு வருஷம் அதிகமாகிக் கொண்டிருக்கிறதே ஒழிய, அதற்குத் தகுந்தவாறு கல்வி கற்கும் குழந்தைகளின் தொகையில் யாதொரு அபிவிருத்தியும் ஏற்படவில்லை.

எனவே, இந்த முட்டுக் கட்டையைத் தகர்த்து எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி அளிப்பதற்குச் சிறந்த ஒரே வழி, சென்னை சர்க்காரின் புதிய கல்வித் திட்டமே யாகும்.

" சென்னை மாகாணத்திலே 1951 – ல் 6-லிருந்து 12 - வயது வரையில் உள்ள குழந்தைகளின் மொத்தத் தொகை 85 லட்சம் ஆகும். அவர்களில் 35½ லட்சம் குழந்தைகளே பள்ளிக் கூடங்

களுக்குச் சென்றனர். மீதியுள்ள சுமார் 50 லட்சம் 6-12 வயதுக் குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடம் செல்ல வசதி இல்லை. அதாவது 1951—ம் வருஷத்தில் 6-12 வயதுப் பிரிவைச் சேர்ந்த 40 சத விகிதக் குழந்தைகள் மாத்திரமே பள்ளிக் கூடம் செல்ல முடிந்தது.''

மேற்கூறிய விதம் புள்ளி விவரங்களுடன் விளக்கியுள்ள பருலேகர் கமிட்டியார் 1956-ம் வருஷம் நாலே மாதத்துக்குள் 6-12 வயதுக் குழந்தைகளில் 80 சத விகிதம் பேர் பள்ளிக் கூடங்களில் சேருவதற்கான தகுந்த யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். பருலேகர் கமிட்டியின் ஆராய்ச்சி பூர்வமான அறிக்கை, சென்னை சர்க்கார் கல்வித் திட்டத்தை அவசரப்பட்டு எதிர்த்தவர்களைத் திருப்தி செய்திருக்கும் என்று நம்புகிறோம்.

ராஜாஜிக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்வதற்கு ஏதேனும் ஒரு சாதனத்தைத் தேடி, அதற்காகவே மேற்படி திட்டத்தை எதிர்க்கத் தொடங்கியவர்களைப் பிரம்ம தேவனுங்கூடத் திருப்தி செய்ய முடியாதுதானே!

# ஆத்திரத் தலைநகர்!

ஆந்திர மாகாணப் பிரிவினை அமைக்கும் விஷயமாக ஆந்திரர்கள் அனுஷ்டித்த சத்தியாக்கிரக முறைகளை இப்போது அவர்கள் தங்களுக்குள்ளேயே பரீட்சை பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆந்திர மாகாணம் ஏற்பட்டு ஒரு மாதம்தான் பூர்த்தியாகியிருக்கிறது. அதற்குள் அங்கு தலைநகர்ப் பிரச்னையை ஒட்டிக் குழப்பம் ஏற்பட்டு விட்டது. கர்நூல் தலைநகராக இருக்க வேண்டும் என்ற கட்சிக்கும் தலைநகரை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்ற கட்சிக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டுள்ளது.

அவ்விஷயமாக ஆந்திர மாகாண சட்டசபையில் பல தீர்மானங்களும் திருத்தங்களும் பிரேரேபிக்கப்பட்டன: கர்நூலில் பலாத்கார ஆர்ப்பாட்டங்கள் தாண்டவமாடின; எம். எல். ஏ.க்கள் கல்மாரிக்கு இலக்காயினர்; ரயில்கள் நிறுத்தப்பட்டு, பார்சல்கள் ஆகாயத்தில் பறந்தன. தலைநகர் எங்கும் போலீஸ் பந்தோபஸ்து செய்யும்படியான நிலைமையும் ஏற்பட்டது.

கடைசியாக, ஆந்திர சட்டசபையில் தலைநகர் பற்றிய தீர்மானம் விவாதத்துக்கு வந்தது. தலைநகரை மாற்ற வேண்டும் என்னும் திருத்தம் சட்டசபையில் நிறைவேறி, திருத்தத்துடன் கூடிய அசல் தீர்மானம் தோற்றுப் போகும் விசித்திர நிலைமை ஏற்பட்டிருக்கிறது! தலைநகர் பற்றிக் கிளம்பிய புகை இத்துடன் அடங்கி விடுமா, மறுபடியும் ஜ்வாலை விட்டுச் சீறுமா என்பது பற்றிச் சொல்லுவதற்கில்லை. பற்பல ஆக்க வேலைகளிலும் கவனம் செலுத்த வேண்டிய ஆந்திரர்கள், எந்த இடம் தலைநகராக இருப்பது என்ற அற்ப விஷயத்தைக் குறித்து ஆரம்பத்திலேயே ஆத்திரம் கொண்டு தங்கள் நேரத்தையும் சக்தியையும் வீணாக்க முற்பட்டிருப்பது வருந்தத் தக்கது.

அட்டைப் பட விளக்கம்

# எங்கே எடுத்துச் செல்கிறாய்?

நதிக் கரையில் நாணல் அடர்த்தியாக வளர்ந்திருந்தது. அந்த நாணற் காட்டில் ஒருநாள் மாலை நேரத்தில் ஒரு மங்கை கையில் ஒரு சின்னஞ் சிறு விளக்கேந்திச் சென்று கொண்டிருந்தாள். நான் அவளைப் பார்த்து ''பெண்ணே! உன் முன்றானையினால் விளக்கை மறைத்து எடுத்துக் கொண்டு எங்கே போகிறாய்? என் வீட்டில் இருள் கவிந்திருக்கிறது. தயவு செய்து உன் விளக்கை எனக்குத் தந்து உதவுவாயாக!'' என்று கேட்டேன்.

அவள் அந்த மாலை நேரத்தில் தன் கரு விழிகளால் என்னை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்து, ''இந்த விளக்கை ஓடும் ஆற்றில் மிதக்க விடுவதற்கு அல்லவா அந்தி மயங்கும் இவ்வேளையில் கொண்டு வந்தேன்!'' என்றாள்.

எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அந்த நாணற் காட்டில் தன்னந் தனியனாக நின்றேன். ஆற்றில் அந்தச் சின்னஞ்சிறு தீபம் யாருக்கும் பயனின்றி 'மினுக்' 'மினுக்' கென்று ஒளி விட்டுக் கொண்டு செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

இருள் வேகமாகப் படர்ந்து வந்தது. அந்த நிசப்தமான நேரத்தில், மறுபடியும் அவள் ஒரு விளக்குடன் வந்தாள். ''பெண்ணே! மீண்டும் விளக்கை எடுத்துக் கொண்டு எங்கே போகிறாய்! என் வீட்டில் ஒரே இருளாக இருக்கிறது. துணைக்கும் யாருமில்லை. தயவு செய்து உன் விளக்கை எனக்குத் தந்து உதவுவாயாக!'' என்றேன்.

அவள் தன் தலையை நிமிர்த்தி என்னைத் தன் கரு விழிகளால் பார்த்த வண்ணம் சற்றுத் தயங்கியவாறே ஒரு கணம் நின்றாள். பின்னர், ''நான் என் விளக்கை அகன்ற வானத்துக்குச் சமர்ப்பணம் புரிய வந்தேன்'' என்றாள். அந்த விளக்கு வெட்ட வெளியில் யாருக்கும் பயனின்றி எரிந்து கொண்டிருப்பதை நான் பார்த்துக் கொண்டே நின்றேன்.

நட்ட நடு நிசி. வானில் சந்திரன் கூட இல்லை. ''பெண்ணே! உன் இதயத்தின் அருகில் தீபத்தை வைத்துக் கொண்டு என்னத்தைத் தேடுகிறாய்? என் வீட்டில் ஒரே இருள்; ஆள் அரவம் கூடக் கிடையாது. உன் விளக்கை எனக்குக் கொடு'' என்றேன்.

அவள் ஒரு நிமிஷம் நின்றாள்; ஏதோ யோசித்தாள். என் முகத்தை அந்தக் காரிருளில் உற்று நோக்கினாள். ''நான் இந்த வான மண்டலத்தில் ஒளி விட்டுப் பிரகாசிக்கும் லக்ஷக் கணக்கான விளக்குகளுடன் என் விளக்கையும் சேர்த்துவிடக் கொண்டு வந்தேன். இந்தத் தீபத் திருவிழாவில் கலந்து கொள்ள என் விளக்கைக் கொண்டு வந்தேன்'' என்றாள். அந்தத் தேஜோமயமான ஒளியில், அவளுடைய தீபத்தின் ஒளி மங்கு மறைவதைப் பார்த்துக் கொண்டே நின்றேன். (தாகூர் [illegible])

# ஏமாற்று வித்தைக்கு இடம் கொடாதீர்

ஒரு காலத்தில் நமது கைத்தறி நெசவாளர்கள் லங்காஷயரை எதிர்த்து வருஷக் கணக்கில் போராட வேண்டியிருந்தது; இப்போதோ அதைக் காட்டிலும் பெரிய ராட்சத விரோதி இந்தியாவுக்கு உள்ளேயே ஏற்பட்டிருக்கிறான் என்று சில மாதங்களுக்கு முன் ராஜாஜி குறிப்பிட்டது ஞாபகம் இருக்கலாம்.

அந்த விரோதியின் மாய வேலை இப்போது இந்திய சர்க்காரைத் திணற அடித்திருக்கிறது.

சென்னை மாகாணத்தில் கைத்தறி நெசவாளர் வாழும் பல இடங்களுக்கும் இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சென்று அவர்கள் படும் சொல்லொணாக் கஷ்டங்களை நேரில் கண்டறிந்தார்.

அதன் காரணமாக சிறிது பலன் ஏற்பட்டது. 1951 ஏப்ரல் மாதத்திலிருந்து 1952 மார்ச்சு வரையில் இந்தியாவில் உள்ள மில்களில் மாதா மாதம் சராசரி எத்தனை வேஷ்டிகள் உற்பத்தியாயினவோ, அதில் அறுபது சத விகிதம்தான் இனி உற்பத்தி செய்ய வேண்டும் என்று இந்திய சர்க்கார் உத்தரவிட்டார்கள்.

ஆனால் பல மில்களும் அந்த உத்தரவை மீறி வேஷ்டிகளை முன் போலவே அதிகமாக உற்பத்தி செய்து வந்தன.

அத்தகைய மில்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி இந்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களை வற்புறுத்தினர். எனினும் சில மாகாண சர்க்கார்கள் மில்களுக்காகப் பரிந்து பேச முற்பட்டதால், இந்திய சர்க்காரின் நிலைமை மிகவும் தர்ம சங்கடமாயிற்று.

எனவே, மில்களின் தகிடுதத்த வேலைக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக இப்போது இந்திய சர்க்கார் மில் வேஷ்டிகளுக்கு உபரி வரி விதித்துப் பார்லிமெண்டில் ஒரு மசோதாவை நிறைவேற்றும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது.

சர்க்கார் அனுமதித்துள்ள அறுபது சத விகிதத்துக்குமேல் உற்பத்தியாகும் வேஷ்டிகளுக்கு அதிகப்படியான கடும் வரி விதிப்பதே மசோதாவின் நோக்கம் ஆகும்.

பார்லிமெண்டில் அந்த மசோதாவைப் பற்றிய விவாதம் நடந்த போது ஸ்ரீ டி. டி. கே. சில புள்ளி விவரங்களை வெளியிட்டார்.

இந்திய சர்க்காரின் உத்தரவு காரணமாக சென்னைக்கு மில் வேஷ்டிகளின் வரத்து வெகுவாகக் குறைந்து விட்டது என்பதை எடுத்துக் காட்டினார். ஏற்கெனவே சென்னைக்கு மாதா மாதம் ஐயாயிரத்து நூறு பேல் மில் வேஷ்டிகள் வந்து கொண்டிருந்தனவாம்; இப்போது ஆயிரம் பேல்களாகக் குறைந்து விட்டனவாம்.

இந்தியாவில் கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்காகச் சர்க்கார் மூன்றரைக் கோடி ரூபாய் செலவில் திட்டம் தயாரித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ டி. டி. கே. குறிப்பிட்ட மேற்படி விவரங்கள் ஓரளவு திருப்தியைக் கொடுக்கக் கூடியவைதான்.

கைத்தறி நெசவாளர்களின் கஷ்டங்களைத் தீர்க்கும் விஷயத்தில் இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி இவ்வளவு தூரம் அக்கறை கொண்டு, தகுந்த முறைகளைக் கைக்கொண்டதற்காக அவரைப் பாராட்டுகிறோம்.

வேஷ்டிகள், வர்ணச் சேலைகள் இவற்றின் உற்பத்தி உரிமையைக் கைத்தறிகளுக்கு ஒதுக்கி விட வேண்டும் என்ற யோசனையை இந்திய சர்க்கார் மீண்டும் சிந்திக்க வேண்டும்.

வேஷ்டிகளின் உற்பத்தியை மாத்திரமாவது கைத்தறி நெசவாளர்களின் ஏகபோக உரிமையாக விட்டு விடலாம்.

சர்க்கார் தடுக்கின் நுழைந்தால் மில்கள் கோலத்துக்குள் நுழைந்து ஏமாற்றி விடுவார்கள் என்பது இந்திய சர்க்கார் உத்தரவை அவைகள் நிறைவேற்றத் தவறியதிலிருந்து தெரிகிறது.

கைத்தறி நெசவாளர்களின் விஷயத்தில் இவ்வளவு தூரம் அனுதாபம் கொண்டு காரியங்களைச் செய்து வரும் இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி, மில்கள் ஏமாற்ற முடியாத வகையில் தீவிரமான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

அவ்விதம் செய்தால்தான் கைத்தறி நெசவாளர்கள் உய்வதற்கான நிரந்தரமான பலன் ஏற்படுவது சாத்தியம் ஆகும்.

# நல்ல அறிகுறி

தமிழ் நாட்டில் கூடிய விரைவில் பிரஜா — சோஷலிஸ்ட் கட்சி வலுவடையப் போகிறது என்பதற்கு நல்ல அறிகுறி தென்பட்டிருக்கிறது. சேலத்தில் நவம்பர் 28உ, 29உ களில் நடைபெற்ற முதலாவது தமிழ்நாடு பிரஜா – சோஷலிஸ்ட் மகாநாடு மிகச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இரு நூறு பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். கட்சி அங்கத்தினர் இரண்டாயிரம் பேர் பார்வையாளர்களாக வந்திருந்தார்கள். 28உ காலை ஆயிரக்கணக்கான செங்கொடிக் குல்லாக்கள் அணிந்த குடியானத் தொண்டர்கள் அணிவகுத்துச் சேலம் வீதிகளில் ஊர்வலமாகச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. பல்லாயிரக் கணக்கான பொது மக்கள் மகாநாட்டு நடவடிக்கைகளைக் கவனித்து ஊர்வலம், பொதுக் கூட்டம் முதலியவற்றில் கலந்து கொண்டார்கள். தமிழ் நாட்டில் நடந்துள்ள மாகாண மகாநாடு எதுவும் இதைவிடச் சிறப்பாகவும் உற்சாகமாகவும் நடைபெறவில்லை என்று கூறலாம்.

மகாநாட்டின் வரவேற்பு சபைத் தலைவர் ஸ்ரீ செட்டிடாவின் பிரசங்கம் வருங் காலத்தில் தமிழகத்தில் பிரஜா – சோஷலிஸ்ட் கட்சிக்கு ஆக்கம் அளிக்கும் முறையில் அமைந்திருந்தது.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஆச்சாரிய கிருபளானி வழக்கத்தைக் காட்டிலும் நிதானமாகப் பேசியதுடன், நிர்மாணகரமான யோசனைகள் பலவும் தமது பிரசங்கத்தில் வெளியிட்டார். பிரஜா – சோஷலிஸ்டுகள் கிராமவாசிகளிடையே சென்று புது வாழ்வின் ஆர்வத்தையும் புதிய நம்பிக்கையையும் வளர்க்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர். சித்திரக் காட்சி கவிதை அரங்கு முதலியனவும் நல்ல முறையில் நடைபெற்றன.

சேலம் மகாநாட்டினால் ஏற்பட்ட உற்சாகத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு, பிரஜா–சோஷலிஸ்ட் கட்சிக்கு அங்கத்தினர்கள் சேர்க்கவும், நிதி திரட்டவும், ''ஜனதா'' பத்திரிகையை நல்ல முறையில் நடத்தவும் கட்சி நிர்வாகிகள் உற்சாகத்துடன் ஒரு பெரு முயற்சி தொடங்கி நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.




அத்தியாயம் 57

## விடுதலை

வந்தியத்தேவன் சிறிது நேரம் வாசற்படிக்கருகில் கவலையுடன் தயங்கி நின்றான். புலிகளைப் பார்த்த வண்ணம் மீசையில் கையை வைத்து முறுக்கிக் கொண்டு நின்ற காவலன் மீது பாய்ந்து அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டு மேலே போகலாமா என்று ஒரு கணம் யோசித்தான். ஆனால் புலிக் கூண்டுகளுக்கு அப்பால் அடுத்த வாசற்படிக் கருகில் மற்றும் இரு காவலர்கள் நிற்பது தெரிந்தது. அவர்களில் ஒருவன் இந்தக் காவலனுக்கு ஏதோ சமிக்ஞையினால் தெரிவித்து விட்டு அப்பால் போனான். ஒருவேளை தன்னைப் பற்றித்தான் அவர்கள் ஜாடையாகப் பேசிக்கொண்கிறார்களோ? இந்தக் காவலனைத் தாக்கி வீழ்த்தி விட்டுப் போனாலும், அப்பால் இது போன்ற பல வாசற்படிகளும் அவற்றில் காவலர்களும் இருப்பார்கள். அவர்களையெல்லாம் சமாளித்து விட்டுத் தப்பிச் செல்ல முடியுமா? அதைக் காட்டிலும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று புலிக் கூண்டுகளைத் திறந்து விட்டால் என்ன? அப்போது ஏற்படக் கூடிய குழப்பத்தில் தப்பிச் செல்வது எளிதாக இருக்கும் அல்லவா?......

இப்படி அவன் எண்ணியபோது, காவலன், "ஓகோ! தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறாயோ?" என்று கூறியதைக் கேட்டு வந்தியத் தேவன் ஒரு கணம் திடுக்கிட்டான்.

புலிகளில் ஒன்று உறுமியது.

"அட நாயே! சும்மாக் கிட!" என்று அதட்டினான் காவற்காரன்.

அவன் புலியுடன் பேசுகிறான் என்று அறிந்ததும் வந்தியத்தேவன் சிரித்தான்.

காவற்காரன் திரும்பிப் பார்த்தான்.

"பின்னே பாருங்க, ஐயா! இந்தப் புலி என்னை மிரட்டப் பார்க்கிறது. இதுமாதிரி எத்தனையோ புலிகளை நான் பார்த்திருக்கிறேன்! இந்தச் சிங்கத்திடம் அதன் ஜம்பம் சாயாது!" என்று கூறி மறுபடியும் மீசையை முறுக்கினான்.

வந்தியத்தேவன், "கூண்டுக்குள் இருக்கும் வரையில் புலியும் எலியும் ஒன்றுதான்! அதன் ஜம்பம் எப்படிச் சாயும்?" என்று சொல்லி விட்டுக் கையிலிருந்த பெரிய வேளாரின் இலச்சினையைக் காட்டினான்.

"போங்க, ஐயா, போங்க! முதன் மந்திரியின் ஆட்கள் வாசலிலே உங்களுக்காகக் காத்திருக்கிறார்களாம்! சீக்கிரம் போங்க!" என்று கூறிவிட்டு, அவர்கள் வந்த பக்கத்தை நோக்கி, "அடே பைத்தியக்காரா! சும்மா இருக்க மாட்டே!" என்று கூவினான்.

அச்சமயம் வந்தியத்தேவன் பைத்தியக்காரனின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் கை நடுங்குவதைத் தெரிந்து கொண்டு, கையை இறுக்கிப் பிடித்துத் தைரியப்படுத்தினான்.

பிறகு, காவற்காரனைத் தாண்டி இருவரும் முன்னால் சென்றார்கள்.

"விடுதலை வேண்டுமாம், விடுதலை! எல்லாரையும் விடுதலை செய்துவிட்டால், பிறகு எங்கள் பிழைப்பு என்ன ஆகிறது?" என்று அந்தக் காவலன் கூறியது அவர்கள் காதில் விழுந்தது.

வந்தியத் தேவன் எவ்வளவோ துணிவுள்ளவனாயினும், அச்சமயம் அவன் நெஞ்சம் பக், பக் என்று அடித்துக் கொண்டிருந்தது. வாசலில் முதன் மந்திரியின் ஆட்கள் காத்துக் கொண்டிருப்பதாகக் காவலன் சொன்னது அவன் மனத்தில் பதிந்திருந்தது. சிறைக்குள்ளே இருட்டாயிருக்கிறது; அதனால் இங்குள்ள காவலர்களை எளிதில் ஏமாற்றி விட்டுச் செல்லலாம். வெளியில் வெளிச்சமாயிருக்குமே? முதன் மந்திரியின் மனிதர்கள் இந்த ஆள் மாறாட்டத்தைக் கண்டுபிடித்துவிட்டால் என்ன செய்கிறது? ஆயினும் பார்க்கலாம் ஒரு கை! எதற்கும் தயாராயிருக்க வேண்டியதுதான்! நல்ல வேளையாக இந்தப் பைத்தியக்காரனும் கெட்டிக்காரப் பைத்தியக்காரனாயிருக்கிறான். சமயத்தில் கை கொடுப்பான்!......

பாதாளச் சிறையில் பல வாசல்களையும் கடந்து பிறகு தங்க நாணய வார்ப்படச் சாலையின் வாசல்களையும் கடந்து அவர்கள் விரைந்து சென்றார்கள். ஆங்காங்கேயிருந்த காவலர்கள் அவர்களிடமிருந்த வேளாரின் இலச்சினையைப் பார்த்ததும் ஒதுங்கி வழி விட்டார்கள். இவர்களை யாரும் சந்தேகிக்கவும் இல்லை; உற்றுப் பார்க்கவும் இல்லை.

போகும்போதே வந்தியத்தேவன் பரபரப்புடன் யோசித்து ஒரு திட்டம் போட்டுக் கொண்டான். நீண்ட அறை ஒன்றில் அவர்கள் போய்க்கொண்டிருந்தபோது அவனுடைய துணைவன் காதில், "நீ முதன் மந்திரி வீட்டுக்குப் போகப் போகிறாயா? என்னுடன் வருகிறாயா?" என்று கேட்டான்.

"முதன் மந்திரி வீட்டுக்குப் போனால் மீண்டும் பாதாளச் சிறைதான்! உன்னுடனே வருவேன்! நீ எங்கே போவதாக உத்தேசம்?" என்றான்.

"கடவுள் அருள் இருந்தால், ஈழ நாட்டுக்கே போய் விடலாம்! முதன் மந்திரியின் ஆட்களுக்கு முன்னால் நீ என்னைப் 'பினாகபாணி!' என்று கூப்பிடு!...... உன் பெயர் என்ன?"

"பைத்தியக்காரன்!"

"உண்மையான பெயர்? உன் பெற்றோர்கள் வைத்த பெயர்?"

"ஆ! அதுவா? பெற்றோர்கள் எனக்குக் 'கரிய திருமால்' என்று பெயரிட்டனர். சுற்றத்தாரும் ஊராரும் 'கருத்திருமன்' என்று அழைத்தார்கள்!"

"நல்ல பெயர்தான்! கருத்திருமா! தஞ்சை வீதிகளில் நாம் போகும்போது உன் தோளைத் தொடுவேன். உடனே நீ என்னுடன் ஓடிவரச் சித்தமாயிருக்க வேண்டும். நன்றாக ஓடுவாய் அல்லவா?"

"ஓ! ஓட்டத்தில் ஈழத்தரசன் மகிந்தன்கூட என்னுடன் போட்டியிட முடியாது!"

வந்தியத்தேவன் சிரித்தான்.

"நீ நல்ல பைத்தியக்காரன்!" என்றான்.

பொற்காசு வார்ப்படச் சாலையைக் கடந்து அவர்கள் வெளியில் வந்தார்கள்.

வந்தியத்தேவன் பயந்தபடி அங்கே முதன் மந்திரியின் ஆட்கள் ரொம்பப் பேர் இல்லை. இரண்டே இரண்டு பேர்தான் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் நல்ல குண்டன். வந்தியத் தேவனுக்கு அவனை எங்கேயோ எப்போதோ பார்த்த மாதிரி இருந்தது. தெளிவாக நினைவுக்கு வரவில்லை.

"நீங்கள்தானே முதன் மந்திரியின் ஆட்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

"என்ன தம்பி, அதற்குள்ளேயா மறந்து போய் விட்டாய்?" என்றான் அவர்களில் ஒருவன்.

"இல்லை, இல்லை! நீங்கள்தானே எங்களை முதன் மந்திரி வீட்டுக்கு அழைத்துப் போகப் போகிறீர்கள்?" என்றான் வந்தியத் தேவன்.

"ஆமாம்; நாங்கள்தான்! நீ முதன் மந்திரி வீட்டுக்குப் போகும் வழியைக் கூட மறந்துபோனாலும் போய்விடுவாய்!"

அப்போது கருத்திருமன், வந்தியத் தேவன் கூறியதை நினைவு கூர்ந்து, "அப்பா, பினாகபாணி! எனக்குப் பயமாயிருக்கிறது! முதன் மந்திரி மறுபடியும் என்னைப் பாதாளச் சிறையில் தள்ளிவிடுவாரோ, என்னமோ!" என்றான்.

"அதெல்லாம் மாட்டார், அப்பனே! உங்கள் முதன் மந்திரியின் சமாசாரம் எனக்குத் தெரியாது போலிருக்கிறது. ஆனால், தப்பித்துக் கொள்ள மட்டும் பார்க்காதே! அப்படி ஏதாவது செய்தால், நாங்கள் பாதாளச் சிறையில் இருக்க நேரிடும்!"

இவ்விதம் சொல்லி விட்டு அந்த ஆட்களில் குண்டனாயிருந்தவன் முன்னால் நடந்தான். இன்னொருவன் வந்தியத் தேவனுக்கும் கருத்திருமனுக்கும் பின்னால் காவலாக வந்தான்.

தஞ்சாவூர் வீதிகளில் கலகலப்பே இல்லை. ஜனசஞ்சாரமும் இல்லை. ஆதித்த கரிகாலரின் இறுதிச் சடங்குகளினால் ஏற்பட்ட கிளர்ச்சிகள் அடங்கி விட்ட பிறகு கோட்டைக்குள் வசித்தவர்கள் அவர்களுடைய அலுவல்களில் ஈடுபட்டிருந்தார்கள். கோட்டைக்கு வெளியில், கொடும்பாளூர்ப் படைகள் கடுமையாகக் காவல் புரிந்து வந்தன. கோட்டைக்கு வெளியிலிருந்து யாரும் உள்ளே வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

வந்தியத் தேவன் இருபுறமும் உற்றுப் பார்த்துக் கொண்டு நடந்தான். அந்த இரண்டு ஆட்களிடமிருந்து தப்பிச் செல்வது மிகவும் சுலபம். ஆனால், மறுபடியும் பிடிபடாமல் இருக்க வேண்டுமே! கோட்டைக்குள்ளிருந்து வெளியேறுவதற்கும் வசதியாக இருக்கவேண்டுமே? இந்த எண்ணத்தினால், வந்தியத் தேவன் வீதியின் இரு பக்கங்களையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டு நடந்தான்.

பெரிய பழுவேட்டரையருடைய அரண்மனை வாசலைத் தாண்டிச் சென்றதும், வந்தியத் தேவனுடைய பரபரப்பு அதிகமாயிற்று. அடுத்தாற்போல், அந்தச் சந்து வரப் போகிறது! முன்னொரு தடவை சின்னப் பழுவேட்டரையரின் ஆட்களிடமிருந்து தான் தப்பி ஓடிச் சென்ற சந்துதான்! அதைத்தான் அவனும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். வளைந்து வளைந்து சென்ற அச் சந்தில் மூலை முடுக்குகள் அதிகம் இருந்தன. இரண்டு புறமும் தோட்டச் சுவர்கள். சுவர்களின் மேலாக வெளியில் தாழ்ந்து தொங்கிய மரங்கள். அங்கேதான் இக் காவலர்களிடமிருந்து தப்பி ஓடினால் ஓடலாம். முன்போலவே பெரிய பழுவேட்டரையருடைய மாளிகைத் தோட்டத்துக்குள் குதிக்கலாம். அங்கே குதித்து விட்டால் அடர்ந்த மரங்களுக்கிடையே ஒளிந்து கொள்ள வசதியாயிருக்கும். முன்போலவே, பொக்கிஷ நிலவறைப் பாதை மூலமாக வெளியேறவும் இலகுவாயிருக்கும். வேறு வழியில் தப்புவது சாத்தியமில்லை......

இதோ அந்தச் சந்து வழி, அவன் முன் தப்பிச்சென்ற வழி, வந்துவிட்டது.

வந்தியத் தேவன் கருத்திருமனுடைய தோளைத் தொடலாமா என்று எண்ணினான்? ஆனால் இது என்ன? அங்கே யார் கூட்டமாக வருகிறார்கள்? சிவிகைகள்! குதிரைகள்! கையில் வேல் பிடித்த காவல் வீரர்கள்!

இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் வருகிறவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ, பெருந்தர அதிகாரிகளாகவோ இருக்க வேண்டும்.

இதை உணர்ந்து முதன் மந்திரியின் ஆட்கள் சுற்று முற்றும் பார்த்தார்கள். வந்தியத்தேவன் கவனத்தைக் கவர்ந்த சந்தை அவர்களும் கவனித்தார்கள். உடனே அவ்விடம் சென்று ஒதுங்கி நிற்கிறார்கள். தாங்கள் அழைத்து வந்த இருவரையும் தங்களுக்குப் பின்னால் நிறுத்திப் பிறர் அறியாவண்ணம் அவர்களை மறைத்துக் கொண்டு நின்றார்கள்.

எதிரில் கூட்டமாக வந்தவர்கள் விரைவில் அந்த இடத்தை அடைந்து அவர்களைத் தாண்டிச் சென்றார்கள்.

முன்னால் வேல் பிடித்த வீரர்கள் சிலர்.

பிறகு, மூன்று கம்பீரமான வெண் புரவிகளின் மேல் மலையமானும் கொடும்பாளூர் வேளாரும் அவர்களுக்கு நடுவில் ஒருவரும் வந்தனர். நடுவில் வந்தவர் பொன்னியின் செல்வர் என்பதை வந்தியத் தேவன் கண்டான்.

ஆகா! எவ்வளவு சமீபத்தில் இருக்கிறார்? ஆனாலும், எவ்வளவு தூரமாகப் போய் விட்டார்?

ஒரு கணம் வந்தியத் தேவன் எண்ணினான்: காவலர்களை மீறி ஓடிச் சென்று அவர் முன்னால் நிற்கலாமா என்று. உடனே அந்தக் கருத்தை மாற்றிக் கொண்டான். தமையனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவனுக்குப் பொன்னியின் செல்வர்தான் எப்படிக் கருணை காட்ட முடியும்?......அல்லது சிநேக உரிமை கொண்டாட முடியும்?... தன்னைப் பார்த்ததும் அவர் அருவருப்பு அடைந்தாலும் அடையலாம். பக்கத்திலுள்ள மலையமானும் வேளாரும் என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது.

இதற்குள், அவர்களுக்குப் பின்னால் வந்த சிவிகைகளின் மீது வந்தியத்தேவன் கவனம் சென்றது.

ஆகா! இளைய பிராட்டி குந்தவை! கொடும்பாளூர் இளவரசி வானதி! சம்புவரையர் மகள் மணிமேகலை!

வந்தியத்தேவனுடைய நெஞ்சு படாத பாடு பட்டு விம்மித் துடித்தது.

வேறு எந்தச் சந்தர்ப்பமாயிருந்தாலும், இந்த மூன்று பெண்மணிகளில் எவரையும் அணுகி உதவி கோரலாம். அவர்களும் மனமுவந்து உதவி செய்வார்கள். ஆனால், இப்போது? ஆதித்த கரிகாலனை வஞ்சகத் துரோகம் செய்து கொன்றவனைப் பார்த்தால் இளைய பிராட்டியும் இளவரசி வானதியும் எத்தனை அருவருப்புக் கொள்வார்கள்?

போகட்டும், இந்தப் பேதைப் பெண் மணிமேகலையை இவர்கள் தங்களுடன் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களே? அதற்காக மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான். மணிமேகலை இவர்களிடம் கடம்பூரில் நடந்ததையெல்லாம் சொல்லியிருப்பாளா? தன்னைத் தப்புவிப்பதற்காக 'நான்தான் கொன்றேன்' என்று சொன்னாளே, அம்மாதிரி இவர்களிடமும் சொல்லியிருப்பாளா? இல்லை. சொல்லியிருக்க மாட்டாள். அவ்விதம் சொல்லியிருந்தால் இவர்கள் அவளைத் தங்களுடன் இவ்வளவு ஆதரவாக அழைத்துப் போக மாட்டார்கள்.

சிவிகைகள் அவர்கள் நின்று கொண்டிருந்த சந்தைக் கடந்து சென்றன. பின்னால் வந்த காவலர்களும் போனார்கள்.

"சரி; வாருங்கள்! இனி நாம் போகலாம்" என்று சொல்லிவிட்டு முதன் மந்திரியின் ஆட்கள் முன்னால் நடந்தார்கள்.

வந்தியத்தேவன் ஒரு நொடியில் "இதுதான் சமயம்" என்ற முடிவுக்கு வந்தான். கருத்திருமனுடைய தோளைத் தொட்டு விட்டுச் சந்து வழியாக ஓட்டம் பிடித்தான். கருத்திருமனும் அவனைத் தொடர்ந்து ஓடினான்.

காவலர்கள் இருவரும் பின்னால் ஓடி வரும் சத்தம் கேட்டது. சிறிது நேரம் வரையில் திரும்பிக்கூடப் பார்க்காமல் இருவரும் ஓடினார்கள். முதலில், கருத்திருமன் திரும்பிப் பார்த்தான்.

"ஒருவன் பின் தங்கி விட்டான்; ஒருவன்தான் வருகிறான்!" என்றான்.

வந்தியத்தேவனும் திரும்பிப் பார்த்துக் குண்டன் பின் தங்கி விட்டதை அறிந்தான். ஒருவனாயிருந்தாலும், அவனுடன் நின்று சண்டை பிடிக்கப் பார்ப்பது அறிவுடைமை யாகாது. ஆகையால், கருத்திருமனுக்கும் சமிக்ஞை காட்டிவிட்டு மேலே ஓடினான்.

முன்னொரு தடவை அவன் மதில் சுவர் ஏறிக் குதித்த அதே இடத்தை அடைந்த பிறகுதான் நின்றான். முறிந்து வளைந்திருந்த கிளை அப்படியே இன்னும் இருந்தது. அதைப் பிடித்துத் தாவிச் சுவர் மீது ஏறிக் கொண்டான். கருத்திருமனையும் கையைப் பிடித்துத் தூக்கி ஏற்றி விட்டான்.

இருவருமாக, முறிந்து மடித்திருந்த அந்த மரக் கிளையைச் சிறிது ஆட்டித் துண்டித்தார்கள்.

பின் தொடர்ந்து வந்த ஆள் அருகில் வந்ததும் அவன் பேரில் தள்ளினார்கள்.

மரக்கிளை அவன் பேரில் விழுந்ததா என்பதைக் கூடக் கவனியாமல் சுவர் மேலிருந்து தோட்டத்தில் குதித்தார்கள். அடர்ந்த மரங்கள்—புதர்கள் இவற்றினிடையே புகுந்து சென்று, மறைந்து கொண்டு நின்று, சுவரைக் குறி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யாரும் தங்களைத் தொடர்ந்து பிடிப்பதற்குத் தோட்டத்துக்குள் குதிக்கவில்லை என்று தெரிந்து கொண்டு மேலே சென்றார்கள்.

"அப்பா! தப்பிப் பிழைத்தோம்!" என்றான் வந்தியத்தேவன்.

"இதற்குள் என்ன ஆகிவிட்டது? கோட்டைக்கு வெளியே போவது எப்படி?" என்றான் கருத்திருமன்.

"அதற்கு வழி இருக்கிறது கொஞ்சம் பொறுமையாயிரு!"

பழுவேட்டரையரின் மாளிகையை நெருங்கியதும் வந்தியத்தேவன் நின்றான். மாளிகையில் முன் போலக் கலகலப்பு இல்லைதான். ஆயினும் நடமாட்டம் இருந்தது. இருட்டும் நேரத்தில் பொக்கிஷ நிலவறையில் புகுவதுதான் உசிதமாயிருக்கும்.

இவ்விதம் தீர்மானித்து ஒரு மரக் கட்டையின் மீது உட்கார்ந்தான். கருத்திருமனையும் உட்காரச் செய்தான்.

"இனி இருட்டிய பிறகுதான் நம் பிரயாணத்தைத் தொடங்க வேண்டும். அதுவரையில் உன்னுடைய கதையைச் சொல்லு, கேட்கலாம்!" என்றான்.

" அதுதான் சொல்ல முடியாது என்று முன்னமே சொன்னேனே?"

" அப்படியானால், உன்னை வெளியே அழைத்துப் போகவும் முடியாது."

" நான் உண்மையைச் சொல்லாமல், ஏதாவது கற்பனை செய்து கூறினால் என்ன பண்ணுவாய்?" என்றான்.

"கதை—கற்பனை எதுவாயிருந்தாலும் சொல்லு! கொஞ்ச நேரம் பொழுது போக வேண்டும் அல்லவா?"

கருத்திருமன் சொல்லத் தொடங்கினான். உண்மையிலேயே அது அபூர்வமான பல சம்பவங்கள் நிறைந்த கற்பனைக் கதை போலவே இருந்தது.

## அத்தியாயம் 58

# கருத்திருமன் கதை

சூரியதிருமால் என்னும் கருத்திருமன் கோடிக் கரைக்குச் சிறிது வடக்கே கடற்கரை ஓரத்தில் உள்ள தோப்புத்துறை என்னும் ஊரினன். அங்கிருந்து ஈழத் தீவுக்குப் படகு செலுத்திப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தான். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவன் ஒரு முறை ஈழத்திலிருந்து தோப்புத்துறைக்கு வந்துகொண்டிருந்தபோது புயல் அடித்துக் கடல் கொந்தளித்தது. படகு கவிழாமல் கரையில் கொண்டு வருவதற்கு மிகவும் பிரயாசைப் பட்டான். கோடிக் கரைக் கலங்கரை விளக்கின் அருகில் வந்து அவன் கரையை நெருங்கியபோது ஒரு பெண் அக் கொந்தளித்த கடலில் மிதப்பதைக் கண்டான். அவள் பேரில் இரக்கம் கொண்டு படகில் ஏற்றிப் போட்டுக் கொண்டான். அவள் அப்பொழுது உணர்வற்ற நிலையில் இருந்தாள். உயிர் இருக்கிறதா, இல்லையா என்று கூடக் கண்டு பிடிக்க இயலவில்லை. அங் கயே படகைக் கரையேற்றப் பார்த்தும் முடியவில்லை. காற்று அடித்த திசையில் படகைச் செலுத்திக் கொண்டு போய்க் கடைசியில் திருமறைக்காடு என்னும் ஊர் அருகில் கரையை அடைந்தான். உணர்வற்ற அந்தப் பெண்ணைக் கரையில் தூக்கிக் கொண்டு வந்து போட்டுக் கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தபோது குதிரைகள் மேலேறிச் சில பெரிய மனிதர்கள் அப்பக்கம் வந்தார்கள். அவர்கள் உதவி செய்து அப்பெண்ணுக்கு உயிர் வருவித்தனர். ஆனால் அவள் பேசவும் இல்லை; மற்றவர்கள் பேசுவது அவள் காதில் விழுந்ததாகவும் தெரியவில்லை. "இவள் பிறவி ஊமைச் செவிடு" என்று அவர்களில் ஒருவர் கூறினார். அவர்களின் தலைவராகத் தோன்றியவர் கருத்திருமனைத் தனியே அழைத்து ஒரு விந்தையான செய்தியைக் கூறினார். புயல் அடங்கியதும் அந்தப் பெண்ணை ஈழ நாட்டுக்கு அழைத்துச் சென்று அந்த நாட்டிலோ அல்லது அருகில் உள்ள தீவு ஒன்றிலோ விட்டு விட்டு வந்துவிட வேண்டும் என்றும், அதற்காகப் பெரும் பணம் தருவதாகவும் அவர் சொன்னார். அதன்படியே கருத்திருமன் ஒப்புக் கொண்டு பணமும் பெற்றுக் கொண்டான். கடலில் கொந்தளிப்பு அடங்கியதும் அவளைப் படகில் ஏற்றி அழைத்துச் சென்றான். கடல் நடுவில் கட்டை ஒன்றைப் பிடித்துக் கொண்டு ஒருவன் மிதப்பதைக் கண்டான். மிகவும் களைத்துப் போயிருந்த அவனையும் படகில் ஏற்றிக்கொண்டான். முதலில் அந்தப் பெண் புதிய மனிதனைக் கண்டு மிரண்டாள். பிறகு, அவனைக் கவனியாமல் இருந்தாள். இருவரையும் அழைத்துக் கொண்டுபோய் அவன் ஈழ நாட்டுக்கு அருகில் உள்ள ஒரு தீவில் இறக்கி விட்டான்.

அந்தத் தீவில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் இந்தப் பெண்ணைத் தமது மகள் என்று கூறினார். முன்னமே அவள் ஊமை என்றும், இப்போது தம்மைக் கூட அவள் அறிந்து கொள்ளவில்லை யென்றும் கூறினார். பிறகு, அவளைக் கடலிலிருந்து காப்பாற்றியதைக் கருத்திருமன் சொன்னான்.

நடுக் கடலில் படகில் ஏறிய மனிதர் கருத்திருமனிடம் ஓர் ஓலை கொடுத்து அதை இலங்கை அரசனிடம் கொண்டு போய்க் கொடுக்கும்படி அனுப்பினார். அதிலிருந்து அவர் ரொம்பப் பெரிய மனிதரா யிருக்க வேண்டுமென்று கருத்திருமன் தீர்மானித்துக் கொண்டான். இலங்கை மன்னனிடம் ஓலையைக் கொடுத்த பிறகு அவனுடைய பேச்சிலிருந்து தன்னால் காப்பாற்றப்பட்டவர் பாண்டிய நாட்டு அரசர் என்பதைத் தெரிந்து கொண்டான். பாண்டிய மன்

னரை அழைத்து வருவதற்கு இலங்கை அரசர் பரிவாரங்களை அனுப்பினார். கருத்திருமன் மிக்க களைத்திருந்த படியால் அவர்களுடன் போகவில்லை. பாண்டிய அரசர் சில தினங்களுக்குப் பிறகு இலங்கை அரசரின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். இரு மன்னர்களும் சேர்ந்து இலங்கையின் தென் கோடியில் மலைகள் சூழ்ந்திருந்த ரோஹண நாட்டுக்குச் சென்றார்கள். அங்கே சில தினங்கள் தங்கியிருந்தார்கள். கருத்திருமன் பேரில் பிரியம் கொண்ட பாண்டிய மன்னர் அவனையும் தம்முடன் அழைத்துப் போனார். ரோஹண நாட்டில் பல இடங்களையும் இலங்கை அரசர் பாண்டிய மன்னருக்குக் காட்டினார். கடைசியாக, யாரும் எளிதில் நெருங்க முடியாத ஒரு பள்ளத் தாக்கிற்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு மலைக் குகையில் அளவில்லாத பொற்காசுகள், நவரத்தினங்கள், விலை மதிப்பில்லாத ஆபரணங்கள் முதலியவை வைக்கப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் பார்வையிட்ட பிறகு, இலங்கை அரசர் ஒரு தங்கப் பெட்டியை எடுத்துத் திறந்து காட்டினார். அதற்குள்ளே ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்த மணி மகுடம் ஒன்றும், இரத்தின ஹாரம் ஒன்றும் இருந்தன. அரசர்களுடைய சம்பாஷணையிலிருந்து அந்தக் கிரீடம் பாண்டிய வம்சத்து அரசர்களின் புராதனமான கிரீடம் என்றும், அந்த இரத்தின ஹாரம் பாண்டியகுல முதல்வனுக்குத் தேவேந்திரன் வழங்கியதாகச் சொல்லப்பட்ட ஹாரம் என்றும் தெரிந்து கொண்டான். அவற்றை எடுத்துக்கொண்டு போகும்படி இலங்கை அரசர் பாண்டியனை வற்புறுத்தினார். பாண்டிய மன்னர் மறுத்து விட்டார். சோழர்களை அடியோடு முறியடித்து விட்டு மதுரையில் தாம் முடி சூட்டிக் கொள்ளும் நாள் வரும்போது, இலங்கையின் அரசரே

## புது டில்லியில் சங்கீத வைபவம்



புது டில்லியில் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் புத்தகாலயத் திருப்பணிக்காகச் சென்ற நவம்பர் மீ 29உ நிகழ்ந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் சங்கீதக் கச்சேரி ஒரு மகத்தான வைபவமாக நடந்தேறியது. பெரும்பாலும் வட இந்திய ரஸிகர்களைக் கொண்ட சுமார் ஐயாயிரம் பேர் அடங்கிய மகா சபை நாலு மணி நேரத்துக்கு மேல் சங்கீதப் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்திருந்ததாகப் புது டில்லிப் பத்திரிகைகள் பரவச நடையில் கச்சேரி விமர்சனம் எழுதியிருக்கின்றன. இந்த வைபவத்துக்குத் தலைமை வகித்த பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு சில ஆண்டுகளுக்கு முன்னர் தாம் கூறியதை மறுபடியும் திருப்பக் கூறுவதாகச் சொல்லி, "ஸ்ரீமதி எம். எஸ். கலை அரசி — சங்கீத ராணி! அவரைப் பற்றி வெறும் பிரதம மந்திரியாகிய நான் என்ன பாராட்டுரை கூற முடியும்!" என்றார். கர்நாடக சங்கீத பாணியில் தோடி, சங்கராபரணம், கரஹரப்பிரியா ராக ஆலாபனைகளுடன் கீர்த்தனம், ஸ்வரம், நிரவல் ஆகியவற்றை வித்வத்துடன் விஸ்தாரமாகப் பாடியும், ஹிந்துஸ்தானி பாணியில் மீரா, கபீர், துளசிதாஸ், சூர்தாஸ் கீதங்களை மனமுருகப் பாடியும் ஸ்ரீமதி எம். எஸ். அந்த ரஸிகர் மகாசபையின் எல்லாப் பகுதிகளையும் மகிழ்வித்தார். இக் கச்சேரி மூலமாக, நன்கொடைகளையும் சேர்த்து, ரூ. 92,000 ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் திருப்பணிக்கு வசூலாயிற்று.

அவற்றை எடுத்துக் கொண்டு மதுரைக்கு வந்து உலகம் அறியத் தம்மிடம் அளிக்க வேண்டும் என்று கூறினார்.

பிறகு, பாண்டிய அரசர் கருத்திருமனிடம் அவன் எடுத்துப் போகக் கூடிய அளவு பொற்காசுகளைக் கொடுத்து அந்த ஊமைப் பெண்ணைப் பத்திரமாகப் பராமரிக்க ஏற்பாடு செய்து விட்டுத் திரும்பப் பாண்டிய நாட்டில் வந்து தம்முடன் சேர்ந்து கொள்ளும்படி அனுப்பினார்.

கருத்திருமன் பூதத்தீவுக்குச் சென்ற போது அங்கே அந்தப் பெண்ணைக் காணவில்லை. அவளுடைய தகப்பனையும் காணவில்லை. இருவரையும் தேடிக் கொண்டு கோடிக்கரைக்குப் போனான். அங்கே அந்த ஊமைப் பெண்ணைக் கண்டான். ஆனால் அவள் அவனைத் தெரிந்து கொள்ளவில்லை. அவளுடைய வீட்டாரிடமிருந்து சில விவரங்களைத் தெரிந்து கொண்டான். அவளுடைய தகப்பனார் உடல் நலிவுற்ற படியால் அவளை அழைத்துக் கொண்டு வந்து இங்கே விட்டு விட்டு உயிர் நீத்தார். கலங்கரை விளக்கின் காவலன் அவளுடைய சகோதரர் என்று தெரிந்தது. முதலில் அவளுக்குச் சகோதரன்-சகோதரி யாரையும் நினைவிருக்கவில்லை. மறுபடியும் ஒரு தடவை கால் தவறிக் கடலில் விழுந்து காப்பாற்றப்பட்ட பிறகு அவர்களையெல்லாம் அவளுக்கு நினைவு வந்தது. அவள் கர்ப்பவதியாயிருக்கிறாள் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொண்டார்கள். அதை அவளும் உணர்ந்து பெரும் பீதியில் ஆழ்ந்தாள். கோடிக்கரைக் குழகர் கோவிலுக்கு அடிக்கடி சென்று அங்கே கைங்கரியம் செய்து கொண்டிருந்தாள். கருத்திருமன் எவ்வளவுதான் முயன்றும் அவளை அவன் இப்போது கண்டு கொள்ளவில்லை.

கோடிக்கரையில் இருந்தபோது அந்த ஊமைப் பெண்ணின் தங்கையை அவன் சந்தித்தான். அவளும் ஊமை என்று அறிந்து அவள் பேரில் பரிதாபங்கொண்டான். அவளை மணந்து கொண்டு வாழவும் எண்ணினான். அதற்கு முன்னால் பாண்டிய மன்னரிடம் போய்த் தகவல் தெரிவித்து விட்டு வர விரும்பினான்.

இச் சமயத்தில் சோழ சக்கரவர்த்தி கண்டராதித்தரின் பட்டத்து அரசியும் சிவ பக்தியில் சிறந்தவருமான செம்பியன் மாதேவி கோடிக்கரைக் குழகர் கோவிலுக்குச் சுவாமி தரிசனத்துக்கு வந்தார்.

அங்கே அந்த ஊமைப் பெண் மந்தாகினியைக் கண்டு அவளைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அவளுடன் அவள் தங்கை வாணியும் போய் விட்டாள்.

கருத்திருமன் பாண்டிய நாடு சென்றான். அங்கே பாண்டிய மன்னர் போர்க்களம் சென்றிருப்பதாக அறிந்தான். போர்க்களத்தில் சென்று பாண்டிய மன்னரைச் சந்தித்தபோது, அவர் அவனை இலங்கைக்கு மீண்டும் போய் இலங்கை அரசனிடம் ஓலை கொடுத்து விட்டு வரும்படி கூறினார். திரும்பி வரும் போது மறுபடியும் அந்த ஊமைப் பெண்ணை அழைத்து வருவதற்கு ஒரு முயற்சி செய்யும்படியும் தெரிவித்தார்.

கருத்திருமன் இலங்கையிலிருந்து திரும்பிப் பழையாறைக்குச் சென்றான். வாணியின் நினைவு அவன் மனதை விட்டு அகலவில்லை. முக்கியமாக அவளைச் சந்திக்கும் ஆசையினாலே அவன் பழையாறைக்குப் போனான். ஆனால் அங்கே அவளைக் கண்டபோது அவன் திடுக்கிட்டுத் திகைத்துப் பிரமித்துப் பயங்கரமடையும்படி நேர்ந்தது. அருணோதய நேரத்தில் அவன் அரசலாற்றங்கரை வழியாகப் பழையாறையை நெருங்கிக் கொண்டிருந்தபோது, ஆற்றங்கரை ஓரத்தில் பெண் ஒருத்தி குனிந்து குழி தோண்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். அது கூட அவனுக்கு அவ்வளவு வியப்பளிக்கவில்லை. அவளுக்குப் பக்கத்தில் துணி மூட்டை ஒன்று கிடந்தது. அதற்குள்ளேயிருந்து ஒரு மிக மெல்லிய குரல்,—சின்னஞ் சிறு குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது!

எந்தச் சண்டாளப் பாதகி உயிரோடு குழந்தையைப் புதைப்பதற்கு ஏற்பாடு செய்கிறாள் என்ற ஆத்திர அருவருப்புடன் அவன் அருகில் நெருங்கியபோது, குழி தோண்டிய பெண் நிமிர்ந்தாள். அவள் தான் வாணி என்று கருத்திருமன் அறிந்து கொண்டான்.

* * *

"தம்பி! எனக்கு அப்போது எப்படி இருந்திருக்கும்? நீயே ஊகித்துக் கொள்!" என்றான் கரிய திருமால்.

"அதை ஊகித்துக் கொள்கிறேன். அப்புறம் கதையைச் சொல்!" என்றான் வந்தியத் தேவன்.

"அப்புறம் நடந்ததைச் சொல்ல இயலாது. அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் காதிலேதான் சொல்லலாம்! நான் மட்டும் அப்போது பழையாறைக்குப் போயிரா விட்டால் எனக்குப் பின்னால் நேர்ந்த கஷ்டங்கள் ஒன்றும் நேராமற் போயிருக்கும்!" என்றான் கருத்திருமன்.

"அப்படியானால், இளம்பு! நேரே அரச குலத்தைச் சேர்ந்தவர்களிடம் போய்ச் சொல்லலாம்!" என்று கூறி நகைத்துக் கொண்டே வந்தியத்தேவன் அங்கிருந்து எழுந்தான்.

கருத்திருமனையும் அழைத்துக்கொண்டு பொக்கிஷ நிலவறையை அணுகினான். அங்கே அப்போது யாரும் இல்லை. நிலவறைக் கதவு பெரிய பூட்டினால் பூட்டப் பட்டிருந்தது. ஆனால் தெரியாதவர்கள் கண்டு பிடிக்க முடியாதபடி அமைக்கப் பட்டிருந்த அதன் உட் கதவை வந்தியத் தேவன் அழுத்தியதும் திறந்து கொண்டது. இருவரும் உள்ளே புகுந்து உட்புறம் தாளிட்டுக் கொண்டார்கள்.


வழியில் பொன்னும், மணியும், முத்தும், நவரத்தினங்களும் குவித்து வைத்திருந்த இடத்தில் வந்தியத்தேவன் பிரவேசித்தான். கருத்திருமனிடம், "உன்னுடைய ரோஹண நாட்டு மலைக் குகையில் இவ்வளவு செல்வங்கள் உண்டா?" என்று கேட்டான். "இதை விட நூறு மடங்கு உண்டு!" என்று சொன்னான் கரியதிருமால்.

வந்தியத் தேவன் சில தங்கக் காசுகளை எடுத்து மடியில் வைத்துக் கட்டிக் கொண்டதும் மறுபடியும் கிளம்பினார்கள். நிலவறைப் பாதை வழியாக வந்தியத் தேவன் முன்னால் சென்றான். மதில் சுவரில் அமைந்திருந்த இரகசியக் கதவையும் திறந்தான். அங்கே இப்போது காவலன் யாரும் இருக்கவில்லை. வெளியிலே முதலில் தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தான். வடவாற்றில் வெள்ளம் இரு கரையும் தொட்டுக் கொண்டு சென்றது. வெகு தூரத்தில் தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அந்த இடத்தில் அருகாமையில் யாரும் இல்லை என்று தெரிந்து கொண்ட பிறகே வந்தியத் தேவன் வெளியே வந்தான். கருத்திருமனும் வந்த பிறகு கதவைச் சாத்தினான். வடவாற்றை எப்படிக் கடப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது பக்கத்தில் சாய்ந்திருந்த மரத்தடியில் படகு ஒன்று மரத்தின் வேர்களில் மாட்டிக் கொண்டு நின்றது தெரிந்தது.

(தொடரும்)

# வத்னி

## டாய்லட் சோப்




**உங்கள் இயற்கை எழிலுக்குத் திறவுகோல்**

தூய தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்பட்டது; அதன் மென்மையான நுரை களஞ்சியமும், இதமான நறுமணமும் உங்களுக்குப் புதுமை மற்றும் அழகு உணர்வையும் தோற்றத்தையும் அளிக்கும்.

*மிகச்சிறந்த சோப் — **5** அணா **9** பை

'வத்னி பேபி' — 2 அணா

கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.

அங்கத்தினர்:

**இந்தியன் சோப் அண்ட் டாய்லட்ரீஸ் மேக்கர்ஸ் அஸோஸியேஷன்**




“க்ருஷன்” உபயோகித்ததனால் நான் அடைந்துள்ள அத்யாச்சரியமான பலன்களை நான் அவசியம் உங்களுக்குச் சொல்ல வேண்டும். வருஷக் கணக்காகக் கீல் வாதத்தினால் முடங்கிக் கிடந்தேன். பலதரப்பட்ட சிகிச்சைகள் செய்தும் நிரந்தரமான பலன் ஒன்றும் ஏற்படாது போயிற்று. ஆனால் மூன்று மாதங்களுக்குத் தவறாமல் ஒழுங்காக “க்ருஷன்” உட்கொண்ட பின்னர் அதன் உண்மையான குணங்களை உணர்வதுடன் ஏறக்குறைய எனது வியாதிக்கு முன்னிருந்த தன்மையையும் பெற்றிருக்கிறேன்.—A. R.”

குடல்கள் நன்கு இயங்கி கழிவு பதார்த்தங்களைச் சரிவர வெளித்தள்ளத் தவறுவதால் விஷத் தன்மை வாய்ந்த அசுத்தங்கள் உள்ளேயே தங்கிவிடுகின்றன. இவைகளே கீல்வாய்வுக்குச் சாதாரணமான காரணம். க்ருஷனிலுள்ள ஆறு வித உப்புக்கள், இவ்விஷப் பொருள்கள் நன்கு வெளியேற்றப்படுமாறு உட்புற அவயவங்களைச் சரிவர இயங்கச் செய்ய உதவுகிறது. தினசரி க்ருஷன் உட்கொள்ளுவது உங்களது குடல்களை ஒரே நிதானத்துடன் இயங்கச் செய்கிறது. இதைத் தொடர்ந்து உட்கொள்ளுங்கள்; கீல் வாயு ஒருபோதும் திரும்பி வராது.

**“க்ருஷன்”** உங்களது ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

KSA—1

# மகா காவிய அரங்கேற்று விழா

கவிஞர்களுக்கும் காவியங்களுக்கும் நம் நாட்டில் இப்போது நல்ல காலம் பிறந்திருக்கிறது. கலா ரஸிகர்கள் ஏராளமாகக் கூடிக் காவியங்களைப் பாராட்டவும் கவிஞர்களைப் போற்றவும் தொடங்கியிருக்கின்றனர்.

இமயம் முதல் குமரி வரையில் உள்ள நம் பாரத நாட்டின் பழம் பெரும் பண்பின் சிறப்பை அறிந்து அதைக் கொண்டாடிக் குதூகலப் படவும் தொடங்கி விட்டார்கள்.

கவி யரங்கங்களும் காவியங்களின் அரங்கேற்றங்களும் தமிழகத்தில் இப்போது அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிகளாகி விட்டன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பட்ட பார காவியங்களுக் கெல்லாம் இப் போது யோகம் பிறந்திருக்கிறது.

நவம்பர் மாதம் 26-ந் தேதி யன்று மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் ஒரு மகா காவிய அரங்கேற்று விழா நடந்தது.

“சாகுந்தலம்”, “குமார சம்பவம்”, “மேக தூதம்” முதலான அமரத்தன்மை வாய்ந்த நூல்களை இயற்றிய மகாகவி காளிதாஸர், “ரகுவம்சம்” என்னும் மகா காவியத்தையும் பாரத மக்களுக்கு அழியா இலக்கியச் செல்வமாக அளித்திருக்கிறார்.

அந்த மகா காவியத்துக்கு விவேகானந்தா கல்லூரி ஸம்ஸ்கிருத இலாக்கா தலைவர் ஸ்ரீ வே. ஸ்ரீ. வேங்கட ராகவாச்சாரியார் அவர்கள் தெளிவான தமிழில் பதவுரையும், கருத்துரையும் எழுதியிருக்கிறார். இந்த மகா காவியப் பேருரையின் அரங்கேற்றத்துக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழக உப அத்தியட்சகர், டாக்டர் ஸர் ஸி. பி. ராமசுவாமி ஐயரவர்கள் தலைமை வகித்தார்கள்.


மேற்படி விழாவுக்குக் கல்வி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்ரமண்யமும், மற்றும் பல ரஸிகப் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், உத்தரப் பிரதேச கவர்னர் ஸ்ரீ கே. எம். முன்ஷி முதலியவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. ஸ்ரீ காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் ஆசியும் ஒரு சால்வையும் உரையாசிரியருக்கு அனுப்பியிருந்தார்கள்.

ராஜயோக ஆஸ்தான மகா கவியான காளிதாசருக்கு ஏற்ற முறையில் விழா பிரமாதமாகக் களை கட்டியிருந்தது. மேலும் இந்த விழாவுக்கு மற்றொரு தனி அந்தஸ்தும் இருந்தது. தமிழ் மொழியும் வட மொழியும் சேர்ந்து பாராட்டப்படும் தனிப்பெரும் விழா அல்லவா இந்த உரைநூல் அரங்கேற்று விழா?

“கண்ணால் காண முடியாததை, காதால் கேட்க முடியாததை மனக் கண்ணோட்டத்தால் அறிந்து எழுதுவது மகாகவியின் லட்சணம். இத்தகைய கவிதா விலாசம் நூற்றுக் கணக்கான இடங்களில் காளிதாசனின் காவியங்களில் காணக் கிடக்கின்

ரகுவம்ச மகா காவிய அரங்கேற்று விழாவில் விழாத் தலைவர் டாக்டர் ஸர் ஸி. பி. ராமசுவாமி ஐயர் அவர்கள் தலைமை உரை நிகழ்த்துகிறார்.



றன...'' என்று தமது தலைமையுரையில் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் குறிப்பிட்டார்.

''சிறந்த காவியமாக மட்டுமல்லாமல், அருமையான அரசியல் நீதி சாஸ்திரமாகவும் பயன் படுகிறது ரகுவம்சம். ரகு, அஜன் முதலிய அரசர்களின் குண விசேஷங்களை அழகாக ஆரம்பத்தில் வர்ணிக்கிறார். அந்த வம்சத்தின் புகழ் படிப்படியாக வளர்ந்து, ஸ்ரீ ராமன் அக்குலத்துக்கே மணிமகுடமாக விளங்கியதை எடுத்துரைத்த காளிதாசன், பிற்காலத்தில் அந்த வம்சம் க்ஷீணித்து அழிந்ததையும் கூறி, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தால் அழிவு எப்படி ஒருவரை நாடி வரும் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்...'' என்பதைக் கூறி அந்தக் காவியத்தின் தனிப் பெரும் சிறப்பை நன்கு விளக்கினார் தலைவர்.

பிறகு பேசிய ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், ''வடநாடு தென்னாடு என்று பிரிவினை பேசுவது தவறு. இமயம் முதல் இலங்கை வரையில் பரந்து கிடப்பது பாரதப் பண்பாடு. அதில் வேற்றுமைக்கு இடமில்லை''—என்று விரிவாகக் கூறினார்.

மாஜி ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யர், ''ஹிந்து'' பத்திரிகை துணையாசிரியர் ஸ்ரீ என். ரகுநாதய்யர், பச்சையப்பன் கல்லூரி ஸம்ஸ்கிருத ஆசிரியர் ஸ்ரீ சண்முக முதலியார் முதலிய பல அறிஞர்கள் ரகுவம்ச காவியத்தைப் பற்றியும் அதன் தமிழுரையைப் பற்றியும் அழகாகப் பேசினார்கள்

1,150 பக்கங்கள் கொண்ட இந்த மாபெரும் நூலை மிகவும் அழகியதோர் பதிப்பாக வெளியிட்ட லிட்டில் பிளவர் கம்பெனியின் உரிமையாளரான ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள், அரங்கேற்று விழாவுக்கு விஜயம் செய்திருந்த அனைவருக்கும் கனிவோடு தம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இனி நூலைப் பற்றிக் கவனிப்போம்.

பத்தொன்பது அத்தியாயங்கள் கொண்ட ரகுவம்ச காவியத்துக்கு ஆதி நூலாக இருந்தது வால்மீகி ராமாயணம்தான். முதல் எட்டு அத்தியாயங்கள் திலீபன், ரகு, அஜன் முதலிய சூரிய வம்சத்து அரசர்களின் வரலாற்றைக் கூறுகின்றன. பிற்பகுதியில் தசரதர், ராமர், ராமருக்குப் பின் ரகுவம்சத்தில் தோன்றிய அரசர்களின் வரலாற்றையும் கூறுகின்றது.

அழகு நிறைந்த அணிகள் அமைத்துக் கவி இயற்றுவதில் காளிதாஸர் இணையற்றவர். அவருடைய சொல்லில் காம்பீர்யம் ததும்பும்; அச்சொல்லின் பொருளில் ஆழமும் அழகும் காணக் கிடைக்கும். இத்தகைய அருமை பெருமைகள் வாய்ந்த ஒரு பழம் பெரும் இலக்கியத்துக்குத் தமிழில் உரை காணுவது சிரம சாத்தியமானது.

அந்தக் காரியத்தை உரையாசிரியர் ஸ்ரீ வே. ஸ்ரீ. வேங்கட ராகவாச்சாரியார் அவர்கள் நன்கு சாதித்திருக்கிறார்கள். பெரும்பாலும் வட மொழி நூலுக்குத் தமிழ் உரை எழுதல் அது நல்லபடியாக, எல்லோருக்கும் விளங்கும் படியாக அமைவது மிகவும் அருமை. இந்த உரை அந்த வகையில் சிறந்து நிற்கிறது

''சிறந்த அக் குழந்தையின் ஒளி அது படுத்திருந்த படுக்கையைச் சுற்றிலும் வீசியது. அவ்வொளியினால் அவ்வறையில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த விளக்குகளனைத்தும் ஒளி குன்றிச் சித்திரத்தில் எழுதப் பெற்றவை போலிருந்தன''—என்று ரகு பிறந்த சமயத்தில் இருந்த அந்த அறை வர்ணிக்கப்படுகிறது. இதைப் படித்தால், வட மொழி சுலோகத்தின் மொழி பெயர்ப்பாகவா தோன்றுகிறது? தமிழிலேயே எழுதிய வசன கவிதையாகத் தொனிக்கிறதன்றோ? இதே மாதிரி எல்லாச் சுலோகங்களின் மொழி பெயர்ப்பும் மிகவும் தெளிவாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றன.

இந்த மகா காவிய உரை நூலுக்கு இத்தகைய மாபெரும் அரங்கேற்று விழா நடத்தியது மிகவும் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை.

உரையாசிரியர்: வே. ஸ்ரீ. வேங்கடராகவாச்சாரியார்; பிரசுரம்: லிட்டில் பிளவர் கம்பெனி, தியாகராய நகர், சென்னை-17. விலை: ரூ. 12—8—0.

—ஸோமாஸ்

## அகில உலகச் சிறு கதைப் போட்டி

அகில உலகச் சிறு கதைப் போட்டிக்காக வந்துள்ள கதைகளைப் பரிசீலனை செய்து, பரிசுக்குரிய தமிழ்க் கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கீழ்க்கண்ட மூன்று பிரமுகர்களும் நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**1. ஸ்ரீ கே. சுவாமிநாதன்** **2. ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளை**
**3. ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி**

மேற்படி நீதிபதிகளின் முடிவு 1954 ஜனவரி மாதம் முதல் வாரத்துக்குள் வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

30 பஸ்களின் சொந்தக்காரர் கூறுகிறார்:

# 'எங்களுடைய செலவினங்கள் நிச்சயமாகக் குறைந்துவிட்டன'

## அதற்குக் காரணம்

## முச்செயல்-திறனுள்ள மோபிலாயில் தான்



என்னுடைய கம்பெனியில் 30 பஸ்கள் போக்குவரத்துக்காக இருக்கின்றன. 24 வருடங்களாக நாங்கள் இத்துறையில் ஈடுபட்டுள்ளோம். எங்கள் பஸ்கள் ஒவ்வொன்றும் பிரதி தினம் சராசரி 175 மைல்கள் ஓடுகின்றது. ஒருவிதமான தொந்தரவுமில்லை, ஏனெனில் நாங்கள் மோபிலாயிலைத்தான் உபயோகிக்கிறோம். ஓட்டச்செலவுகள் கூடுமானவரை குறைவாக இருப்பது எங்கள் தொழிலில் அத்யாவசியம். முச்செயல் திறனுள்ள மோபிலாயில் உபயோகிப்பதினால் செலவினங்கள் நிச்சயமாகக்குறைந்து விட்டதை அனுபவத்தில் அறிகிறோம்.

புரொப்ரைட்டர்
கே. ரதனு மோட்டார் ஸர்வீஸ், தர்மபுரி, சேலம் ஜில்லா.




அனுபவமிகுந்த போக்குவரத்து ஸ்தாபன முதலாளிகள் மோபிலாயிலையே தங்கள் வண்டிகளுக்கு உபயோகிக்கின்றனர்—நீங்களும் அதற்கு மட்டமான எண்ணெயை ஒப்புக்கொள்ளாதீர்கள்! ஸ்ரீ. அப்பாவு பிள்ளையைப் போல் நீங்களும் முச்செயல் திறனுள்ள மோபிலாயில், உங்கள் பராமரிப்புச் செலவுகளைக் குறைப்பதையும் என்ஜினை என்றும் புதியது போலவே வைத்துக்காப்பாற்றுவதையும் காண்பீர்கள்.

பறக்கும் செங்குதிரையின் சின்னம் காணப்படும் இடத்தில் இன்றே போய் இந்த எண்ணெயை நிரப்பிக்கொள்ளுங்கள்—முச்செயல் திறனுள்ள மோபிலாயில் அளிக்கும் அதிகபடி பாதுகாப்பைப் பெறுங்கள். இந்த ஹெவி ட்யூடி எண்ணெ மூன்றுவழிகளில் உங்கள் பணத்தை மிச்சப்படுத்துகிறது:—

**தேய்மானத்தைக் குறைக்கிறது**—எல்லா சீதோஷ்ண நிலைமைகளிலும் ஒழுங்காக லூப்ரிகேட் செய்கிறது.

**ரிப்பேர் செலவுகளைக் குறைக்கிறது**—என்ஜினில் ஹானிகரமான கரி படியவிடுவதில்லை.

**பெட்ரோல் செலவைக் குறைக்கிறது**—உலோக பாகங்களை ஆஸிட்டுகள் அரித்து விடாமல் தடுத்து, சக்தி வீண் போகாமல் பாதுகாக்கிறது.

## முச்செயல்-திறனுள்ள மோபிலாயில்

அநேகமான மோட்டார்க்காரர்கள் உலகில் வேறெந்த மோட்டார் ஆயிலையும்விட இதையே விசேஷமாக உபயோகித்து வருகின்றனர்

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி (கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

V. 8400

காவிரிப் பூம் பட்டினத்தின் விசாலமான கடற்கரையில், ஆனந்தமான நிலவு பொழிகிற அமுத வேளையில், ஒளி வீசுகிற வெள்ளி மணற் பரப்பில் சந்திர மித்திரனும் பானுமதியும் சந்தித்தார்கள் - ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, எதிர்பாராத விதமாக.

இதற்கு முன்பு எத்தனையோ முறை அதே கடற்கரையில், அதே பூரண நிலவில் அவர்கள் இருவரும் சந்தித்ததுண்டு. ஆனால் அதெல்லாம் முன் கூட்டியே பேசி வைத்து, ஒருவரை யொருவர் எதிர்பார்த்துச் சந்தித்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அது! இப்பொழுதோ?




இப்பொழுது — இத்தனை நாட்களுக்குப் பின்பு — மீண்டும் இப்படி ஒரு சந்திப்பு ஏற்படும் என்பதைப் பானுமதி எண்ணிக் கூடப் பார்க்கவில்லை. சந்திர மித்திரன் தான் எண்ணியதுண்டா? இல்லை.

நிலவின் ஒளி வெள்ளமும் கடலின் அலை வெள்ளமும் ஒன்றை யொன்று அணைகிற பௌர்ணமி அது.

சந்திர மித்திரன் இந்த ஐம்பது ஆண்டுகளுக் கிடையில் சோழ வள நாட்டின் எல்லை கண்ட இடமெல்லாம் எங்கெங்கோ சுற்றித் திரிந்து விட்டான். மனித குலத்தின் வாழ்வுப் போராட்டங்களை யெல்லாம் கண்டு கண்டு சலித்துப் போய், அதிலிருந்து உய்யும்வழியை உலக மாந்தருக்கு உபதேசிப்பதிலேயே இது வரை தனது நாட்களைக் கழித்து விட்டான் அவன்! இன்றைக்கு அந்த பௌத்தத் துறவி, சம்பாபதிக் கடற்கரையில் தன்னுடைய இளமையின் இன்ப நிகழ்ச்சிகளுக்கெல்லாம் நிலைக்களனாக இருந்த கடலின் கரையில் பௌர்ணமி நிலவில் ஒரு முறை நடந்து செல்லலாம் என்று நினைத்தே இந்தத் தள்ளாத வயதிலும் நெடுந் தூரத்திலிருந்து இரண்டு வார காலமாக நடந்து நடந்து வந்திருக்கிறான்.

பானுமதியோ எல்லை வாயிற் கோட்டத்தில் புத்த தேவனுடைய பாத கமலங்களில் அர்ப்பணம் செய்துவிட்ட தனது வாழ்வின் இந்த அந்தி வேளையில், உடல் என்ற கூட்டிலிருந்து உயிர்ப் பறவை பறந்து செல்லச் சிறகடித்து நிற்கும் இந்த முதுமைப் பருவத்தில், பழைய சந்திப்புக்களின் அரங்கமாக அமைந்த கடற்கரையில் ஒரு முறை பௌர்ணமி நிலவைப் பார்த்து விடுவோமே என்று கருதித்தான் தவச்சாலையிலிருந்து வெளியே வந்தாள். அவள் இந்தச் சந்திப்பைச் சிறிதும் எதிர்பார்க்கவே யில்லை!

பானுமதியின் கண்களில் மரணத்தின் ரேகை கீற்றுவிட ஆரம்பித்திருந்தது. என்றாலும், உள்ளத்தில் துறவு வேரூன்றி யிருந்த காரணத்தால் மரண பயமோ பதற்றமோ அந்த விழிகளில் காணப்படவில்லை.

அவன் நினைத்தான். "இந்தப் பௌர்ணமி கழிந்து விட்டால் இனி அடுத்த பௌர்ணமிக்கு இப் பூவுலகில் இருப்போம் என்பது என்ன உறுதி? மரணம் நம்மை ஆட்கொண்டு விட்டால் பிறகு காவிரிப் பூம்பட்டினத்தையும் இந்தக் கடற்கரையையும் மறுபடி பார்ப்பது எங்கே? புத்த தேவனைச் சரண் புகுந்த அந்த விநாடியே 'பஞ்ச கந்தமும்' அகன்று பிறப்பு என்னும் வேதனையை வென்றாய் விட்டது. என்றாலும் அப்படியே ஒரு வேளை மீண்டும் பிறக்க நேரிட்டாலும் இந்தக் காவிரிப்பூம் பட்டினத்திலே தான் பிறப்போம் என்று என்ன நிச்சயம்? அப்படியே தான் பிறந்தாலும் அந்த இளமை நினைவுகள் எல்லாம் மனத்தில் நிற்கவா செய்யும்? அடடா! மறக்க முடிகிற நினைவுகளா அவை!"

உலகப் பற்றை வேரோடு களைந்து எறிந்து விட்ட அத் தூய உள்ளத்திலுங் கூட, இந்த ஐம்பது ஆண்டுத் தவத்தின் இடையிலும் அந்த நினைவுகள் அலை அலையாகப் பொங்கு




வதை அவளால் தடுக்க முடியவில்லை. ஆனால் அவை வெள்ளமாகப் பெருகிக் கரையை உடைத்து வந்து துறவு நிலையை மூழ்கடிக்காமல் மட்டும் காப்பாற்ற முடிந்தது அவளால்!

சம்பாதிக் கடலின் அலைகளைப் போலப் பொங்கி வந்து சரிந்து சரிந்து எல்லைக்கு உள்ளேயே மீண்டு வருகிற அந்த நினைவுகளை மிதித்துக் கொண்டு மேலே நடப்பவள் போல, அலைகள் தவழும் மணற் பரப்பிலே நடந்தாள் பாநுமதி. அப்பொழுதுதான் சந்திர மித்திரன் எதிர்ப்பட்டான்.

"நீங்களா! ஆச்சரியமாக இருக்கிறதே!" என்று திகைத்தாள் பாநுமதி.

"நீ இங்கு வந்ததும் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இந்த நள்ளிரவில் தவச் சாலையிலிருந்து எப்படி வெளியே வந்தாய்?" என்று கேட்டான்.

பாநுமதி பதில் பேசவில்லை. திகைப்பிலிருந்து மீண்டு வர அவளுக்கு வெகு நேரம் ஆயிற்று.

"நீங்கள் என்னை எதிர்பார்த்தே இருக்க மாட்டீர்கள், இல்லையா?" என்று பாநுமதி கேட்டபோது மீண்டும் திகைப்பே ஒலித்தது அவளுடைய வார்த்தைகளில்.

சந்திர மித்திரன் சொன்னான்: "இல்லை. எதிர் பார்க்கவில்லை. ஆனால் மனசின் ஆழத்தில் எங்கோ ஒரு கோடியில் ஒரு சிறு எண்ணம். ஒரு விவரிக்க முடியாத ஆசை. இந்த இரவில் இந்த நிலவில் அழகான இந்தக் கடற்கரையில் பாநுமதியும் ஒரு வேளை வந்தால்...... என்று நினைத்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! நீ நிற்கிறாய்!"

"வாஸ்தவமாகவா! உண்மையிலேயே நீங்கள் அப்படி நினைத்தீர்களா? என்ன விந்தை! நானும் ஒரு க்ஷணம் அந்த மாதிரியே நினைத்தேன். ஆனால் அது நிறைவேறும் என்று எதிர்பார்க்கவே இல்லை!"

"பாநு! இந்தக் கடலுக்கு அலைகள் இருப்பது போல, மனித உள்ளத்துக்கும் நினைவின் அலைகள் உண்டு என்று ஞானிகள் சொல்லுகிறார்கள் அல்லவா? அது உண்மையானால், அப்படி நினைவு அலைகள் என்று இருக்குமானால், அவை போய்ச் சேர்ந்து சரிகிற கரை எது தெரியுமோ? பாசத்தினால் பிணிக்கப்பட்ட மற்றொரு உள்ளந்தான். இந்த இதயத்தில் புறப்படுகிற அலைகள் அந்த இதயத்திலே போய்த்தான் மோதி விழுகின்றன!" என்றான் சந்திர மித்திரன்.

மேகத் திட்டு ஒன்றைத் தாவிக் கொண்டே நிலவுக்கரங்களைக் கொட்டிய வண்ணம் வான வெளியிலே குதித்தான் ஒளிச் செல்வன். அந்தப் பிரகாசத்தில், சந்திர மித்திரன் நின்று பேசுவதைக் கேட்டுக் கொண்டே, அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் பாநுமதி.

தன்னைப் போல அவனுக்கும் துறவுக் கோலம். காஷாய உடை. உடம்பின் ஆதிக்கத்தை வென்று நின்ற அந்த பிரும்மசரியம், கண்களில் தீக் கங்கு போலக் கனன்று கொண்டிருந்தது. முகத்தில் எல்லையற்ற சாந்தமும் அந்த சாந்தத்திலிருந்து ஒளி பரப்பும் தேஜஸும் நிலவு போலக் குளுமை செய்தன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வாலிபத்தின் மிடுக்கு, இளமை பொங்கும் துடிப்பு — அதெல்லாம் எங்கே?

"இந்த ஐம்பது வருஷத்தில் எவ்வளவு மாறிப் போயிருக்கிறீர்!" என்றாள் பாநுமதி.

சந்திர மித்திரன் சொன்னான்: "நீ மட்டும் மாறுமலா இருக்கிறாய்! நிலவு வீசுகிற முகம் என்று சொல்வேனே, அப்படிப் பட்ட உன்னுடைய முகத்தில் கடுந் தவமும் இதயத்தின் வறட்சியும் சேர்ந்து எவ்வளவு பெரிய மாறுதலைச் செய்து விட்டன, தெரியுமா! இதிலும் ஒரு சோபை இருக்கவே செய்கிறது. ஆனால் இது வேறு விதம். இது தெய்விகம்!"

## 2

அகத்திய முனிவரின் கட்டளைக்கு இணங்கச் சோழ நாட்டில் தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன் என்ற அரசன் ஆரம்பித்த இந்திர விழா அவனுக்குப் பின்னரும், ஆண்டு தோறும் காவிரிப் பூம் பட்டினத்தில் சிறப்பாக நடந்து வந்த காலம் அது. இந்த ஆண்டில், நெடுமுடிக் கிள்ளி இந்திர விழாவுக்குக் கூறிய நியமங்கள் அனைத்தும் இம்மியும் வழுவாமல் இருபத்து எட்டு நாட்கள் நடைபெற வேண்டும் என்று முரசு அறைவித்திருந்தான். எனவே கோலாகலமான களிப்புக்களோடு நாடக மகளிர் அனைவரும் கடற்கரையிலே ஒருமித்தனர். ஆனால் அந்தப் பெண் மான்களின் மத்தியில் மாதவியும் அவளுடைய பொன்மான் மணிமேகலையும் காணப்படவில்லை!

மதுரைமா நகரில் கோவலன் கொலை செய்யப்பட்டான் என்று கேட்டதும், மாதவி இந்த உலக வாழ்வையே வெறுத்தவளாகி, துறவு தாங்கி, பௌத்த சங்கம் சார்ந்து, அறவண அடிகளிடம் 'நால்வகை வாய்மையும் ஐவகைச் சீலமும்' கேட்டுத் தெளிவடைந்து, அந்த தர்மத்தையே மேற்கொண்டு விட்டாள். அவளுடைய மகள் மணிமேகலையும் அதே வண்ணம், அந்த தூய தவநெறியில் தலைப்பட்டாள்! இந்திர விழாவில் இவர்கள் இருவரும் கலந்து கொள்ளவில்லை. இது நாடக மகளிரிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியிருந்தது!

இந்தச் சந்தர்ப்பத்திலே தான், அந்தி நேரத்தில் நாகமாலை என்ற நாடகத் தாய் வேகமாகக் கடற்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது மணிமேகலையைப் பார்த்து விட்டாள். அது தான் ஊழ் வினையாக முடிந்தது.

நாகமாலையின் மகள் பானுமதி, சந்திர மித்திரன் என்ற பாணனோடு யாழும் கையுமாக ஏற்கெனவே கடற்கரைக்குச் சென்றிருந்தாள். அவர்களைத் தொடர்ந்து வயோதிகப் பருவத்தின் தள்ளாமையையும் மீறி, வேகமாக நடந்தாள் நாகமாலை.

வழியில், மணிமேகலை தனது மேனி முழுதும் காவியும் போர்த்துக் கையிலே பூ மாலையுடன் அறச்சாலை நோக்கிச் செல்வதைப் பிரத்யட்சமாய்க் கண்டதும் அவள் திடுக்கிட்டாள். இளம் மேனியின் அழகையெல்லாம் தவம் என்ற மகத்தான நெருப்பில் பொசுக்குவதற்கு ஒரு தாய், அதுவும் மாதவி போன்ற அபார எழில் படைத்த ஒரு தாய், எப்படி மனம் துணிந்தாள் என்று தனக்குள்ளேயே எண்ணமிட்டாள் நாகமாலை. அவளுடைய தாயுள்ளத்துக்கு உண்மையாகவே அது ஒப்பவில்லை. இந்தத் திகைப்பிலும் அனுதாபத்திலும் நாகமாலையின் நடை தளர்ந்தது; நின்று விட்டாள். இதை மணிமேகலை கவனித்தாள்.

"ஏனம்மா! இந்தத் தள்ளாத வயதையும் தள்ளிக் கொண்டு, வேகமாக இந்திர விழாவுக்கு நடந்து போனவள் என்னைப் பார்த்ததும் தளர்ந்து விட்டாய்?" என்று கேட்டாள் மணிமேகலை.

"ஒன்றுமில்லை. பெற்ற மனசுக்கு இப்படி ஒரு துணிச்சல் எப்படி வந்தது என்று நினைத்தேன். இந்த அழகான இளம் மேனியைத் தீயிலே கொண்டு தள்ளி விட்டாளே உன்னைப் பெற்ற தாய்."

நாகமாலையின் குரலில் மனப் பூர்வமான அனுதாபம் இருந்தது. மணிமேகலைக்கு மாதவி ஒரு பெரிய கொடுமை இழைத்து விட்டாள் என்றே அவள் எண்ணினாள். மணிமேகலையோ இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சிரித்தாள்.

"ஏனம்மா சிரிக்கிறாய்?" என்று நாகமாலை கேட்டாள். அவளுக்கு அந்தச் சிரிப்பு ஒரு புதிராக இருந்தது.

"இளம் மேனியை நெருப்பிலே, நரகக் கொடுந் தீயிலே, கொண்டு தள்ளுவது என்னுடைய தாயா அல்லது பானுமதியின் தாயாராகிய நீங்களா? நிம்மதியாக இருந்து யோசித்துப் பாருங்கள்!" என்று சொல்லி விட்டு மேலே நடக்க ஆரம்பித்த மணிமேகலை, நாகமாலையின் சூதில்லாத திகைப்பைக் கண்டு மறுபடியும் சொல்லுவாள்: "அம்மா தான் பட்ட வேதனையை மகளுக்கும் வழங்குவது கொடுமையா, அல்லது, அந்த வேதனையிலிருந்து மகளைக் காப்பாற்றுவது கொடுமையா? என்னுடைய அன்னை என்னைத் தவம் என்ற கனலில் ஸ்புடம் செய்து மாற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றாள். அவளா கொடுமைக்காரி? இல்லை. சிந்தித்துப் பார்த்தால் கொடுமைக்காரி நீங்கள் தான். உங்களோடு சேர்ந்த ஆயிரக் கணக்கான பானுமதிகளின் தாய்மார்கள் கொடுமைக்காரிகள்."

நாகமாலையின் மனசுக்கு இந்தத் தத்துவம் அந்த நேரத்தில் பிடிபடவில்லை. அவள் சொன்னாள்: "ஆனாலும் மாதவிக்குத் தானும் ஒருகாலத்தில் இளமையாக இருந்த நினைப்பே இல்லாமல் தான் போய் விட்டது!"

"இல்லை! அந்த நினைவு மனத்தில் இன்னும் பூரணமாக இருப்பதினால் தான் என்னைக் காப்பாற்றத் துணிந்தாள். அது தான் அறிவோடு கூடிய அன்பு."

நாகமாலை பதில் பேசவில்லை. நிதானித்தாள். மணிமேகலை மேலும் சொல்வாள்:

"அம்மா! உலகம் என்பது ஒரு துன்பக் கேணி. இன்பம் என்று இறங்கி ஏமாந்த உள்ளம், இதைத் துன்பம் என்று கண்ட

பின்பும் கூட ஒப்புக் கொள்ள மறுக்கிறது. கூசுகிறது! வாழையடி வாழையாக அந்தத் துன்பத்தை வழங்கிக் கொண்டே போகிறது. இதுதான் மாயை. இதை வெல்லக் கூடிய ஒரு தாய் அபூர்வமானவள்தான். அவளைக் கொடுமைக்காரி என்றுதான் உலகம் சொல்லும். ஏனென்றால் கொடுமைக்காரிகளான தாயார்கள்தான் இந்த உலகில் அதிகம்; — உங்களைப்போல."

இவ்வாறு சொல்லி விட்டு விறு விறு வென்று நடந்தாள் மணிமேகலை.

நாகமாலைக்கு ஒன்றும் ஓடவில்லை. அந்த இடத்திலேயே இறங்கிப் போய் நின்றாள். புத்தி குழம்பியது.

"நீங்கள் கொடுமைக்காரி. உங்களோடு சேர்ந்த ஆயிரக் கணக்கான பாநுமதிகளின் தாய்மார்கள் அத்தனை பேரும் கொடுமைக்காரிகள்" என்று மணிமேகலை சொன்ன வார்த்தைகள் நாகமாலையின் மனசில் இப்பொழுது உறுத்த ஆரம்பித்தன. அவளுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருந்தது. பாவம்! அது அவளை வேதனைப் படுத்தத் தொடங்கி விட்டது! கடற்கரையை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தவள் இப்பொழுது மறு பக்கம் திரும்பி வீடு நோக்கி விரைந்தாள்!

அன்று கோலாகலமாக நடந்த இந்திர விழாவுக்குப் போகாதவர்கள் மாதவியும் மணிமேகலையும் மட்டுந் தானா? இல்லை. நாகமாலையுங் கூடத்தான்!

## 3

பாநுமதி அன்றிரவு மூன்று ஜாமத்துக்குப் பிறகு தான் வீடு திரும்பினாள். உள்ளே வந்த போது தன்னுடைய அருமைத் தாய் சால்வையை இழுத்து மூடிக்கொண்டு படுத்திருப்பதைப் பார்த்தாள்.

"என்னம்மா உடம்பு?" என்று கேட்டாள் பாநுமதி.

"இன்று சாயந்திரத்திலிருந்து ஒரு மாதிரியாக இருக்கிறது" என்றாள் நாகமாலை.

"அதனால்தான் கடற்கரைக்கு நீ வரவில்லையோ?"

"வந்தேன். மருவூர்ப் பாக்கத்தோடு நடந்த போதுதான் உடம்புக்கு இன்னும் அதிகமாகி விட்டது."

"இந்த வயதில் கடற் காற்று உடம்புக்குப் பிடிக்கவில்லை" என்றாள் பாநுமதி.

நாகமாலை சிரித்தாள்.

"ஏனம்மா சிரிக்கிறாய்?" என்று பாநுமதி திகைப்போடு கேட்டாள்.

"ஒன்றுமில்லை, உன்னிடத்தில் எனக்கு எவ்வளவு பிரியம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தேன். சிரிப்புத் தான் வந்தது" என்று சொன்னாள் அவள்.

"இதென்ன விசித்திர நினைப்பாக இருக்கிறது!" என்றாள் பாநுமதி.

"விசித்திரந்தான். நீயே சொல்லேன், உன்னிடத்தில் எனக்கு எவ்வளவு பிரியம் இருக்கிறது?" என்றாள் நாகமாலை.

பாநுமதி பதில் சொல்லவில்லை. இத்தனை நாளும் இல்லாத இந்த நூதனக் கேள்வி அவளுக்குத் திகைப்பையே கொடுத்தது.

"சொல்லம்மா! நான் ஒரு கொடுமைக் காரி என்றுதான் எனக்குப் படுகிறது. நீ சொல். உன்னிடம் எனக்கு எத்தனை பிரியம் இருக்கிறது என்று?"

"என்ன கேள்வி இது. இந்தச் சம்பாபதிக் கடலில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்று ஒருவர் கேட்டால் என்ன பதில் சொல்வது? அது போலத்தான் உன் கேள்வியும். அந்தக் கடலுக்கும் உன் அன்புக்கும் எல்லை ஏது?"

நாகமாலை எழுந்து உட்கார்ந்தாள்.

"இல்லை, யோசித்துப் பார்த்தால் நான் கொடுமைக் காரிதான்: நான் உன்னைத் துன்பப் பெரும் நரகத்திலே தான் தள்ளுகிறேன்: தடுக்க வேண்டியவளே ஊக்கம் ஊட்டுகிறேன் என்றுதான் தோன்றுகிறது!"

நாகமாலை இப்படிச் சொல்லும்போது அந்த வார்த்தைகள் ஏதோ ஒரு ஜன்னியின் பேச்சுப் போல இருந்தன. பாநுமதிக்கு உடம்பு பதறியது.

## 4

மறுநாள் காலை நாகமாலை கண் விழித்த போது ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாக மகளைக் கூப்பிட்டாள்.

"பாநு! என்னுடைய உடம்பு சரியாகி நான் எழுந்திருக்க வேண்டும் என்றால், நீ எனக்கு ஒரு வாக்குறுதி தர வேண்டும். இல்லையென்றால் நான் மடிந்தாலும் அது நிம்மதியான மரணமாக இராது" என்றாள்.


"அம்மா என்னிடம் வாக்குறுதி கூடக் கேட்க வேண்டுமா! நீ சொல்லி நான் செய்யாதது ஏது உண்டு?" என்றாள் பாநுமதி.

நாகமாலையின் குரல் கம்மிற்று. சிரமப் பட்டுத் தன்னுடைய உடம்பிலிருந்த பலம் அனைத்தையும் ஒருமிக்கிறவளைப் போல ஒரு தரம் குரலைச் சரிப்படுத்திக் கொண்டு சொன்னாள்: "பாநு! இன்றிலிருந்து நீ சந்திரமித்திரனை மறந்து விட வேண்டும்."

"என்ன சொல்லுகிறாய் அம்மா!"—அதற்கு மேல் பாநுமதிக்கு வார்த்தை வரவில்லை. அப்படியே தரையில் தடால் என்று உட்கார்ந்தாள். தாயின் கால்களில் தலையைச் சாய்த்தவாறு அவளுடைய இரு பாதங்களையும் கைகளில் பற்றிக் கொண்டாள். கண்ணீர் உதிர்த்த வண்ணமாக இருந்தாள்.

"பாநு! இனி நாம் இருவரும் புத்த தேவனுக்கு அடிமைகள். உன்னை நான் அறவண அடிகளின் தவச் சாலையில் சேர்க்கத் தீர்மானித்து விட்டேன்" என்றாள் நாகமாலை.

"அம்மா! நீயா இந்த வார்த்தை சொல்கிறாய்? அந்தக் கொடுமைக்கார மாதவியா நீ! உன்னுடைய மனசுமா கல்லாகிவிட்டது!"



**சென்னை யுனைடெட் கமர்ஷியல் பாங்கியின் சென்னை நகர சபையின் புதிய கணக்கு ஆரம்ப விழாவை மேற்படி பாங்கியின் டெபுடி ஜெனரல் மானேஜர் ஸ்ரீ எஸ். டி. சதாசிவன் அவர்கள் நடத்தி வைத்துவிட்டுக் கல்கத்தாவுக்குத் திரும்பிச் சென்ற போது விமான நிலையத்தில் எடுத்த படம்.**

பானுமதி தேம்பித் தேம்பி அழுதாள். நாகமாலை அளவு கடந்த பரிவுடன் மகளை வாரி அணைத்து ஆறுதல் சொன்னாள்.

"கண்ணே, ஈரமற்ற மலம் என்று நாம் நினைக்கிற மனந்தான் அன்புக் கடலாக இருக்கிறது. நேற்று வரை கரையற்ற கடல் என்று என் மனம் மூட இருளில் மூடிக் கிடந்த கல்லாம்பாறை யாகத்தான் இருந்தது!"

பெற்ற அன்னையிடமிருந்து வந்த இந்த வார்த்தைகள் பானுமதியின் செவிகளைத் துளைத்தன. ஆனாலும் அவளால் வேறு என்ன சொல்லக் கூடும்?

"அம்மா, அப்படியானால் நிச்சயம் அவரை மறக்கும்படியேதான் சொல்கிறாயா என்னை?" என்று கேட்டாள்.

தன் பார்வையை மறுபக்கம் திருப்பிக் கொண்டு "ஆமாம்" என்று உறுதியோடு சொன்னாள் நாகமாலை!

## 5

"என்ன பேசாமல் நிற்கிறாய்?" என்று கேட்டான் சந்திர மித்திரன்.

"நீங்கள் மட்டும்? நீங்கள் ஏன் பேசாமல் நிற்கிறீர்கள்?" என்று கேட்டாள் பானுமதி.

"அந்தப் பழைய சம்பவங்களை யெல்லாம் அப்படியே ஒரு ஓட்டம் மனத்தில் ஓட விட்டேன்."

"நானுந்தான்-நினைவுகளின் சுழற்சிதானே வாழ்க்கையும் அதன் சம்பவங்களும்!" என்றாள் பானுமதி.

தவச் சாலையிலிருந்து வைகறை மணியின் நாதம் காற்றிலே வந்தது. அந்த மணியோசை, நினைவின் அலைகளிலே மிதந்து சென்ற உள்ளங்களைப் பிடித்துக் கொணர்ந்து கரையிலே சேர்த்தது.

"அப்படியானால் நான் புறப்படட்டுமா?" என்று பானுமதி சொல்லி முடிப்பதற்கு முன், சந்திர மித்திரனும் கை கூப்பியவாறு மறுபக்கம் திரும்பிச் செல்லுவதற்குச் சித்தமா யிருந்தான்.

ஓயாமல் அலை புரளும் கடலுக்கு மேலே நிலவு நலிந்து விட்டது. கரையில் தெற்கும் வடக்குமாக இருவரும் பிரிந்தனர். சற்றே நடந்தனர். உடனே சொல்லி வைத்தாற் போல், ஏதோ நினைப்பில், இருவரும் ஒரே சமயம் திரும்பிப் பார்த்துக் கொண்டனர்!

"என்ன திரும்புகிறாய்?" என்று கேட்டான் சந்திர மித்திரன்.

"நீங்கள் ஏன் திரும்பிப் பார்த்தீர்கள்?" என்று கேட்டாள் பானுமதி.

"அன்பு என்பது அவ்வளவு கடினமான பாசக் கயிறாக இருக்கிறது!" என்றான் மெல்ல.

இருவரும் மீண்டும் பழைய இடத்திற்கே திரும்பி நடந்து வந்தனர்.

"உடல் என்ற ஸ்தூலம் அற்று விடுமானால், உள்ளம் என்ற உலகில் தூய அன்பு உறவுக்குப் பாபம் ஏது? களங்கம் ஏது?" என்று கேட்டான் சந்திரமித்திரன்.


"இல்லைதான். ஆனாலும் பாசம் என்பது எப்பொழுதுமே......"

"இல்லை. புத்த தேவனிடத்து நாம் செலுத்தும் அன்பையும் பாசம் என்ற பொருளிலே சேர்த்துக் கூறிவிட முடியுமா? அந்த அன்பு, அந்தப் பாசம், வேறுதானே? அது போல மனித உள்ளங்களுக்கு மத்தியிலும் தெய்வீக அன்பு என்று ஒன்று இருக்கிறதல்லவா?" என்றான்.

கிழக்கிலே வானம் வெண்மை அடைந்து தெளிந்து வந்தது. சூரிய உதயத்தை வரவேற்பதற்காகக் கடலின் அலைகள் பக்தி சிரத்தையுடன் தலை தாழ்த்தி ஆயத்தமாகிக் கொண்டு வந்தன.

"புத்த தேவனுடைய சரண கமலங்களை அடைகிற உள்ளங்கள் அனைத்துமே, ஸ்தூலப் பிடிப்பிலிருந்து விடுபட்டு, கலந்து ஏகோபித்த ஐக்கியமே ஆகின்றன. அது தானே மஹா சங்கமம்!" என்று சொல்லியவாறு இருவரும் ஒருமித்து நடந்தார்கள்.

மனித உள்ளத்தின் ஆசா பாசச் சுழல் களைப் போல அந்த நீலக் கடல் அதனுடைய கரையின் வட்டத்துக் குள்ளேயே குமைந்து கொண்டிருந்தது. சந்திரமித்திரனும் பானுமதியும் அந்தக் குமைவையெல்லாம் கடந்து கரையின் மேட்டிலே ஏறித் தவச் சாலையை நோக்கி நடந்தார்கள்.


4 நக்ஷத்திரங்கள்: எந்த ரஸ்தாவிலும் சுமுகமாக ஓடக்கூடியவை
குட் இயர்
சைக்கிள் டயர்கள்



# ஜிம்மியும் பொம்மியும்

## விஜயம்

கண்ணனுக்கு நாய் வளர்ப்பதில் ரொம்பப் பிரியம். அவன் தகப்பனுக்கு நாய் வளர்ப்பதில் பிரியமே கிடையாது. ஆகையினால் கண்ணன் தன் வீட்டிலேயே நாய் வளர்க்க முடியவில்லை. யார் வீட்டில் நாய் இருந்தாலும் அதனுடன் விளையாடப் போய் விடுவான்.

கண்ணனுக்கு நாய்க் குட்டிகளிடத்தில் இருந்த பிரியத்தைப் பார்த்த ஒரு பெரிய மனிதர் அவனுக்கு ஒரு நாய்க் குட்டியைப் பரிசாக அளித்தார். பரிசாக வந்த நாயை விரட்ட அப்பாவுக்கு மனம் வரவில்லை. அதை வளர்க்க அனுமதி வழங்கினார்.

கண்ணன் சதா காலமும் அந்த நாய்க் குட்டியோடேயே விளையாட ஆரம்பித்தான்.

அந்த நாய்க் குட்டியும் அவனிடம் ரொம்ப அன்பா யிருந்தது; மிகவும் விசுவாசத்துடன் நடந்து கொண்டது. கொஞ்ச நேரம் கண்ணனைக் காணோம் என்றாலும் போதும். அந்த நாய்க் குட்டி 'வள், வள்' என்று குரைக்க ஆரம்பித்து விடும். அவனைப் பார்த்தால்தான் குரைப்பதை நிறுத்தும். வர வர இந்தத் தொந்தரவு அதிகமாகவே, கண்ணனுடைய அப்பாவுக்கு அந்த நாய்க் குட்டியைக் கண்டாலே கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை

கண்ணன் வளர்ந்து பெரியவனானான். பள்ளிக்கூடத்துக்குப் போக ஆரம்பித்தான். நாய்க் குட்டியும் நன்றாய் வளர்ந்து பெரிய நாயாகி விட்டது. ஆனால் இன்னும் கண்ணனைக் காணவிட்டால் குரைக்கும் சுபாவம் மட்டும் அதனிடம் மாறவேயில்லை. கண்ணன் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்து விட்ட படியால், அவன் அதிக நேரம் நாயை விட்டுப் பிரிந்திருக்க நேர்ந்தது. ஆகவே, நாயின் குரைப்பும் தாங்க முடியாதபடி அதிகமாயிற்று.

அப்பாவினால் அந்தத் தொந்தரவைச் சகிக்க முடியவில்லை. அவர் என்னென்னவோ செய்து பார்த்தார்; நாய்க்குப் பிஸ்கோத்து கொடுத்தார்; தடவிக் கொடுத்தார். ஒன்றும் பயனில்லை.

கண்ணன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், "கண்ணா, இந்த நாயை உடனே எங்கேயாவது கொண்டு போய் விட்டு விடு. இனி அது ஒரு நிமிஷம்கூட இந்த வீட்டில் இருக்கக் கூடாது, தெரிந்ததா?" என்று அப்பா மிகவும் கடுமையான குரலில் எச்சரித்தார். கண்ணன் பயந்து போய் விட்டான். உடனே அந்த நாயைப் பிடித்துக் கொண்டு வெளியே புறப்பட்டு விட்டான்.

காலையில் போன கண்ணன் சாப்பாட்டு வேளை தாண்டியும் வராமற் போகவே, அப்பாவுக்குக் கவலை பிடித்துக் கொண்டது.

கடைசியில் கண்ணன் வெகு நேரங் கழித்து வந்தான். தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தான்.

அப்பா, "எங்கேயடா போயிருந்தாய்? ரொம்ப நேரம் ஆகி விட்டதே! நாயை எங்கே விட்டு விட்டு வந்தாய்?" என்று அவனிடம் அன்பாகவே கேட்டார்.

"நாயை அந்தப் பெரிய மனிதர் வீட்டிலேயே விட்டு விட்டேன். அவர்கள் வீட்டு வேலைக்காரன் அதை வாங்கிக் கொண்டான். ஆனால்..." என்று கண்ணன் தயங்கியபடியே நிறுத்தினான்.

அப்பா, "ஆனால் என்னடா?" என்றார்.

"... இல்லை, அப்பா! அவர்கள் வீட்டில் உயர்ந்த இனத்தைச் சேர்ந்த நாய்க் குட்டிகள் இருக்கின்றன ... அவைகளில் இரண்டு நாய்க்குட்டிகள் ரொம்ப அழகாய் இருக்கின்றன, அப்பா...!" என்றான்.

"அழகா யிருந்தால் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்றார் அப்பா.

"அந்த இரண்டு நாய்க் குட்டிகளையும் நாம் வளர்க்கலாம் என்று இங்கே கொண்டு வந்திருக்கிறேன், அப்பா!" என்று சொல்லி விட்டுக் கண்ணன் ஓடிப் போய், வாசலில் தான் விட்டிருந்த இரண்டு நாய்க் குட்டிகளையும் கொண்டு வந்தான்.

துளிக்கூட வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாதபடி ஒரே மாதிரியாயிருந்த அந்த இரண்டு நாய்க் குட்டிகளையும் கண்ட அப்பா, அவற்றின் அழகில் சொக்கிப் போனார். அவைகளும் அவரைக் கண்டதும் தங்களுடைய சின்ன வாலை ஆட்டிக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தன. அப்பாவுக்குச் சந்தோஷம் வந்து விட்டது.

மகிழ்வு ததும்பும் அப்பாவின் முகத்தைக் கண்டதும் கண்ணனுக்குத் தைரியம் வந்து விட்டது.

"அப்பா, இந்த நாய்க் குட்டிகள் அதிகமாகக் குரைப்பதில்லையாம். உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவையாம்!"

"சரி, சரி, போ. தலைவலி போய்த் திருகு வலி வந்த மாதிரி அந்த நாயை விட்டு விட்டு, இரண்டு நாய்க் குட்டிகளைக் கொண்டு வந்திருக்கிறாயே!"

ஜிம்மியும் பொம்மியும் இரட்டையாய்ப் பிறந்தவை. ரொம்ப ரொம்பப் பொல்லாதவை. சதா துருதுருவென்று ஏதாவது விஷமம் செய்து கொண்டே இருக்கும்; ஆனால் அந்த நாயைப் போல் சதா குரைத்துத் தொந்தரவு செய்வதில்லை.

அப்பாவின் செருப்பைக் கடித்து அறுத்து விடும்; மேஜை மேல் ஏறி இங்கிப் புட்டியைக் கவிழ்த்து விடும்; பெரிய வாளியில் நிறைய ஜலம் நிரப்பி வைத்திருப்பான் வேலைக்கார ராமன். நாய்க் குட்டிகள் அந்த ஜலத்தில் குதித்து நீந்தி விளையாடும். ஜலத்தில் நீந்திய ஈரத்தோடு போய் ஜமக்காளம், துப்பட்டி முதலிய துணிகளின் மீதெல்லாம் புரண்டு அவைகளை நனைத்து விடும்.

நாய்க்குட்டிகள் விஷமம் செய்தால் அப்பாவுக்கு ரொம்பக் கோபம் வரும். சின்னப் பிரம்பு வைத்துக் கொண்டு அவைகளுக்கு அடி கொடுத்துத் தண்டிப்பார்.

ஆனால் இரண்டு நாய்க்குட்டிகளும் மகா போக்கிரிகள். இரண்டும் தனித் தனியாகவே விஷமம் செய்யும்; எது ஜிம்மி, எது பொம்மி என்று தெரியாமல் அப்பா திண்டாடிப் போவார். ஒரு நாய்க் குட்டி செய்த தப்புக்காக இன்னொரு நாய்க் குட்டியைத் தண்டிக்க அவருக்கு மனம் வராது. விஷமம் செய்த நாயை மாத்திரம் அப்பா தண்டிக்க நினைத்தால் அது நடப்பதில்லை; அவைகள்தான் பிரிந்து நின்று விஷமம் செய்தாலும்கூட ஒரு விநாடியில் ஒன்றுமே நடக்காதது போல் சேர்ந்து விடுகின்றனவே! அதுவும் அப்பாவைக் கண்டதும் அவை யிரண்டும் வாலைக் குழைத்துக் கொண்டு அவரைச் சுற்றிச் சுற்றி வரும். உடனே அப்பாவுக்குச் சந்தோஷம் வந்துவிடும். தாமும் அவைகளுடன் விளையாட ஆரம்பித்து விடுவார்.

இப்போதெல்லாம் கண்ணனை விட, அப்பாதான் நாய்க் குட்டிகளை அதிகமாகக் கொஞ்சி விளையாடுகிறார்.




நல்வாழ்வு பெற
துள்ளி எழும்
சேய் . . .
உங்களுக்காகவும்
உமது குழந்தைகளுக்காகவும்
சேமித்து முதலீடு செய்யுங்கள்
நேஷனல்
ஸேவிங்ஸ்
ஸர்டிபிகேட்டுகள்
குழந்தையின் எதிர்காலத்தை வலுப்படுத்துங்கள்
இந்தியாவின் க்ஷேமத்திட்டத்திற்கும்
உதவி புரியுங்கள்

# குளவிக் கூடு

ஆர். எஸ். மணி

காமாட்சி காரியங்களை முடித்துக் கொண்டு முன் கட்டுக்கு வருவதற்கும் சுவரில் மாட்டப் பட்டிருந்த கடிகாரம் சரியாகப் பன்னிரண்டு அடித்து ஓய்வதற்கும் சரியாக இருந்தது. சற்று நேரத்திற்கு முன்பு சாப்பாட்டை முடித்துக் கொண்டு முன் கட்டுக்கு வந்திருந்த காமாட்சியின் மாமியார் ஊஞ்சலில் அமர்ந்து சாவதானமாக வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தாள்.

"காமாட்சி, பம்பாயிலிருந்து ஏதாவது கடுதாசி வந்ததோ? உன் பெண் லக்ஷ்மிக்கு இது தானே பிரசவத்துக்கு மாசம்?" என்று கேட்டாள் அலமேலு அம்மாள்.

"ஆமாம்! அவள் ஒன்றும் எழுதவில்லை. அதைத்தான் நான் தினமும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றாள் காமாட்சி.

"நல்ல பொண்ணு இவள். என்னடா தூர தேசத்திலே இருக்கோமே, நம்மைப் பத்தி அம்மா அப்பா எவ்வளவு கவலைப் பட்டுண்டு இருப்பா, அப்படின்னு இரண்டு வரி எழுதிப் போடக் கூடாது. இந்தக் காலத்துப் பசங்களுக்கு ஒண்ணுமே தெரிய மாட்டேங்கிறது. தலைச்சன் குழந்தை! அதனாலே எனக்கு என்னமோ ஒரே கவலையாக இருக்கு; மனசிலே நிம்மதியே இல்லை."

"நீங்கள் ஏன் வீணாகக் கவலைப் படுகிறீர்கள்? அப்படி அவசரமாக இருந்தால் மாப்பிள்ளை உடனே கொண்டு வந்து விட்டு விட மாட்டாரா?"

"போதுமே! உன் மாப்பிள்ளையின் சமத்தை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். சீமந்தம் ஆன கையோடு லக்ஷ்மியை அழைத்துக் கொண்டு வந்து விடுங்கள் என்று முட்டிக் கொண்டேன். என் பேச்சை யாராவது கேட்டீர்களா?"

"என்ன செய்யறது? ஓட்டல் சாப்பாடு மாப்பிள்ளை உடம்புக்கு ஒத்துக்காதுன்னு லக்ஷ்மி சொன்னாள்."

"என்னமோம்மா, நீங்க செய்வதெல்லாம் எனக்கு ஒன்றும் பிடிக்கல்லே. வீட்டிலே பெரியவள் ஒருத்தி இருக்காளேன்னு யாராவது மதித்தால்தானே" என்று சலிப்புடன் கூறிக் கொண்டே தலைக்குக் கட்டையை எடுத்து வைத்துக் கொண்டு படுக்க முயன்றாள் அலமேலு அம்மாள்.

அப்போது 'போஸ்டு' என்ற குரலைக் கேட்டு வாசலுக்கு வந்தாள் காமாட்சி. தபால்காரர் ஒரு கவரைக் காமாட்சியிடம் கொடுத்து விட்டுச் சென்றார். காமாட்சிக்கு அதிகமாக எழுதப் படிக்கத் தெரியாது. கொஞ்சம் எழுத்துக் கூட்டிப் படிப்பாள். ஆகவே கவரின் மீதிருந்த முத்திரையிலிருந்து அது பம்பாயிலிருந்து வந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள் காமாட்சி.

அப்போது 'அம்மா, சாதம் போடு' என்று கேட்டுக் கொண்டே, பள்ளிக் கூடத்திலிருந்து மத்தியானச் சாப்பாட்டுக்கு வீடு திரும்பிய காமாட்சியின் கடைக் குட்டிப் பிள்ளை, வீட்டினுள் பிரவேசித்தான். எட்டுவயது நிரம்பாத ரகு மிகுந்த துஷ்டனாக இருந்தான். ஆனால் அவன் சூடிகையாகவும், மகா புத்திசாலியாகவும் இருந்தபடியால் காமாட்சி அவன் மீது உயிராக இருந்தாள்.

"ரகு! இந்தக் கடுதாசியை உங்க பாட்டிக்குக் கொஞ்சம் படிச்சுக் காட்டுடா" என்று சொன்னாள் காமாட்சி.

மாதுஸ்ரீ அம்மா அவர்களுக்கு அநேக நமஸ்காரம் செய்து எழுதிக் கொண்டது.

இங்கு நாங்கள் க்ஷேமம். எனக்குச் சதா உங்களைப் பற்றியே நினைவாக இருக்கிறது. நீயும் பாட்டியும் என்னைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் இக் கடிதத்தை எழுதுகிறேன். மாப்பிள்ளைக்கு இப்போதுதான் ஒரு மாத 'லீவு' கிடைத்திருக்கிறது. ஆகவே நாங்கள் நாளை இரவு புறப்பட்டு வருகின்றோம். அப்பாவுக்கு இந்த விஷயத்தைச் சொல்லவும். ரகு நன்றாய்ப் படிக்கிறானா? துஷ்டத்தனம் செய்யாமல் இருக்கிறானா? அவனுக்கு என் ஆசி. இப்படிக்கு,

லக்ஷ்மி.

மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கக் கடிதத்தைப் படித்து முடித்த ரகு 'அக்கா வராளே! அக்கா வராளே!' என்று உற்சாகமாகக் குதிக்க ஆரம்பித்து விட்டான்.

காமாட்சியின் முகம் மலர்ந்தது

"பார்த்தீர்களா, நான் அப்போதே சொன்னேனே!" என்றாள்.

"இப்போது என்ன? இன்னும் குறை காலமும் கழிந்து. நல்ல படியாய்த் தாயும் குழந்தையும் வேறே யாகணும். அம்மனுக்கு அபிஷேகம் செய்யறேன்னு வேண்டிக்கோ" என்றாள் அலமேலு அம்மாள்.

## 2

காமாட்சியின் பெண் லக்ஷ்மிக்குக் கலியாணமாகிச் சுமார் ஐந்து வருஷங்களுக்கு மேலாகியும், அவளுக்குக் குழந்தை பிறக்காதது எல்லோரையும் விட அலமேலு அம்மாளைத்தான் அதிகமாக வாட்டியது. தன் பேத்திக்குக் குழந்தை பிறக்க வேண்டுமென்று அலமேலு அம்மாள், பிரார்த்தனைகளும் வேண்டுதல்களும் செய்து கொண்டே இருந்தாள். ஆகவே லக்ஷ்மி கர்ப்பவதியாக இருக்கும் செய்தியைக் கேட்டு அவள் தான் அதிகச் சந்தோஷமடைந்தாள்.

லக்ஷ்மிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு பம்பாயில் சீமந்தமாகியது. அலமேலு அம்மாள் உள்பட எல்லோருமே பம்பாய்க்குப் போய் விட்டு வந்தனர். இதற்குப் பிறகு தான், 'லக்ஷ்மி இவ்வளவு தூரதேசத்தில்



இருக்கிறேனே. தலையைக் காலை வலித்தால் உதவி செய்யக் கூட ஆள் இல்லையே' என்று மிகுந்த துயரமடைய ஆரம்பித்து விட்டாள் அலமேலு அம்மாள்.

''ஏம்மா, இப்படிக் கவலைப்படறே? நினைத்தால் நாலு மணி நேரத்திலே விமானத்தில் இங்கே வந்து சேர்ந்து விடலாம்!'' என்று அலமேலு அம்மாளின் பிள்ளை சங்கரய்யர் எத்தனை தேற்றியும் அவள் சமாதானமடையவில்லை. ஆனால் இப்போது லக்ஷ்மி வரப்போகிறாள் என்ற செய்தியைக் கேட்ட பிறகு அவள் மனம் சற்று நிம்மதி அடைந்தது.

லக்ஷ்மியின் கணவன் கொஞ்சம் சொத்துக்காரன். பம்பாயில் ஒரு பெரிய உத்தியோகத்தில் இருந்தான். அவன் வாயைத் திறந்து ஒன்றும் பேசமாட்டான். 'கடு கடு' வென்று இருப்பான். அவனிடம் சங்கரய்யருக்குக் கொஞ்சம் பயம் தான். ஆகவே 'பம்பாயிலிருந்து மாப்பிள்ளையும் பெண்ணும் வருவதற்கு முன்பே ஒரு அறையை ஒழித்துச் சுத்தப் படுத்தி வைத்து விட்டார் அவர்.

பம்பாயிலிருந்து மாப்பிள்ளையும் பெண்ணும் வந்த அன்று வீடு திமிலோகப் பட்டது. முன்பெல்லாம் ரகுவுக்கு ராகவனைக் கண்டால் பயம். ஆனால் இப்போது பள்ளிக்கூடம் கூடப் போகாமல் சதா அத்திம்பேரின் காலையே சுற்றிக் கொண்டிருந்தான். ராகவனும் அவனிடம் அன்பாக இருந்தான். ராகவன் இதற்கு முன்பு இரண்டு மூன்று முறை மாமனார் வீட்டுக்கு வந்திருக்கிறான். ஆனால் இந்தத் தடவை மாப்பிள்ளை கடுகடுப்புடன் இருப்பது எல்லோருக்கும் ஆச்சர்யமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது.

ராகவன் வேளைக்குச் சாப்பிடுவதும் வெளியே சென்று சிநேகிதர்களைப் பார்த்து விட்டு வருவதுமாக இருந்தான். லக்ஷ்மி ஊரிலிருந்துவந்த இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு ஒரு மருத்துவச்சியை வர வழைத்துப் பார்த்தாள். அவள் பயம் ஒன்றுமில்லை என்று சொன்ன பிறகுதான் அலமேலுஅம்மாளுக்குச் சற்று சமாதான மாயிற்று.

அன்று மத்தியானம் ராகவன் வெளியேசென்று இருந்தான். லக்ஷ்மி காமிரா அறையைச் சுத்தம் செய்து கொண்டும் அலங்கோலமாய் இருந்த சாமான்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தாள். காமாட்சியும் அலமேலு அம்மாளும் முன் கட்டில் உட்கார்ந்து லக்ஷ்மியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''எனக்கு என்னவோ லக்ஷ்மிக்குப் பெண் தான் பிறக்கும் என்று தோன்றுகிறது. நம் குடும்பத்திலே சிமந்த புத்திரிதானே வழக்கமாய் இருந்துகொண்டு வருகிறது'' என்றாள் அலமேலு அம்மாள்.

''உங்க பேத்திக்குத்தான் பெண் குழந்தை என்றாலே கோபம் வருகிறதே!'' என்று சொன்னாள் காமாட்சி.

''தெய்வ சங்கல்பம் எப்படி இருக்கோ யாருக்குத் தெரியும்? எங்க குடும்பத்துக்கு நான் சிமந்த புத்திரியாகத்தான் பிறந்தேன். என் பிள்ளைக்கும் பெண்தான் பிறந்திருக்கான். அவனாலே குடும்பம் என்ன கெட்டுப் போச்சு?'' என்றாள் அலமேலு அம்மாள்.

''என்ன பாட்டி, பிரசவத்துக்குப் பம்பாயிலிருந்து பேத்தி வந்திருக்காப் போலிருக்கு'' என்று கேட்டுக் கொண்டே வீட்டினுள் பிரவேசித்தாள் பக்கத்து வீட்டுக் கமலம்.

''ஆமாம்! நாளை எண்ணிக்கொண்டிருக்கிறோம்'' என்றாள் காமாட்சி.

''பேத்தியை எந்த ஆஸ்பத்திரியில் சேர்க்கப் போறேள்? எழும்பூர் ஆஸ்பத்திரிதான் இருப்பதற்குள் நல்லதுன்னு எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் கமலம்.

''நம்ம இத்தனை பேர் இருக்கிறபோது ஆஸ்பத்திரியிலே கொண்டு போய்ச் சேர்க்கிறதாவது? நன்றாக இருக்குடி நீ சொல்றது!''

'இல்லே பாட்டி, இந்தக் காலத்திலே ஆஸ்பத்திரிதான் சௌகர்யம். வீட்டிலே வச்சிண்டா, ஆபத்து சமயத்துலே ஒரு டாக்டரும் வர மாட்டார்கள்.''

''என்னமோம்மா, நீ சொல்றது விசித்திரமாகத்தான் இருக்கு. நானும் பேரன் பேத்தி எடுத்தாச்சு. ஒரு பிரசவத்துக்கும் ஆஸ்பத்திரிக்குப் போகல்லே.''

"தங்கச்சனுகையினுலே ஆஸ்பத்திரியிலே சேர்த்துடுங்கோ. அதுதான் நல்லது."

"பாட்டி, காமிரா உள்ளே என் பெட்டிக்குப் பின்னுலே குளவி கூடு கட்டியிருக்கிறது!" என்று பரபரப்புடன் கூறிக் கொண்டே வந்தாள் லக்ஷ்மி.

"அலமேலு பாட்டி, உங்க பேத்திக்குப் பெண்தான் பொறக்கப் போகிறது. குளவி கூடு கட்டினுல் பெண் பிறக்கும்னு சொல்லுவா. குளவிக் கூடைக் கலேச்சா குடும்பமே கலேஞ்சு போயிடுமாம்" என்றுள் கமலம்.

**தா**ன் பெண்ணுய்ப் பிறந்து, வளர்ப்பதற்கும் கலியாணம் செய்து வைப்பதற்கும் தன் பெற்றேர்கள் அடைந்த கஷ்டங்களே எண்ணிப் பார்த்து, தனக்குப் பெண் பிறக்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி. ஆகவே கமலத்தின் வார்த்தைகளேக் கேட்டபோது லக்ஷ்மிக்கு அழுகையும் கோபமும் பொத்துக் கொண்டு வந்தன. அதற்கு மேல் லக்ஷ்மியினுல் அங்கு நிற்க முடியவில்லே. 'விர்'ரென்று காமரா அறையினுள் பிரவேசித்தாள். குளவிக் கூடைப் பார்க்கும் போதெல்லாம் அவள் சஞ்சலம் அதிகரித்தது. தனக்குப் பெண் பிறக்கப் போகிறது என்பதை அறிவித்துக் கொண்டிருக்கும் அந்தக் குளவிக் கூடைக் கலேத்து விட வேண்டுமென்று துடித்தாள். ஆனல் குடும்பம் கலேந்து விட்டால்?

"என்ன லக்ஷ்மி? ஒரு மாதிரியாக இருக்கிருய்?" என்று கேட்டுக் கொண்டே வீட்டினுள் பிரவேசித்தான் ராகவன்.

"அந்தப் பெட்டிக்குப் பின்னல் குளவி கூடு கட்டியிருக்கு. குளவிக் கூடு கட்டினுல் பெண்தான் பிறக்குமாம். பக்கத்து வீட்டுக் கமலம் சொன்னுள்" என்றுள் லக்ஷ்மி.

"இதெல்லாம் சுத்தப் பைத்தியக்காரத்தனம்" என்று கூறிக் கொண்டே ராகவன் அக்கூடைக் கலேக்க முயன்றான்.

"ஐயோ, அதை ஒன்றும் செய்யாதீர்கள். குளவிக் கூடைக் கலேச்சா குடும்பமே கலேஞ்சு போயிடுமாம்" என்றுள் லக்ஷ்மி.

"நல்ல பைத்தியக்கார ஜனங்கள். இன்னும் இந்த மூட நம்பிக்கையெல்லாம் போகவில்லேயே!" என்று கூறிக் கொண்டே உள்ளூறச் சிரித்துக் கொண்டான் ராகவன்.

அன்று இரவெல்லாம் குளவிக் கூடைப் பற்றித்தான் எல்லோருக்கும் பேச்சு.

மறுநாள் காமிரா அறையினுள் சென்ற லக்ஷ்மி, "ஐயோ, பாட்டி! யாரோ குளவிக் கூடைக் கலேச்சுட்டாளே" என்று பதறிக் கொண்டே வெளியே ஓடி வந்தாள்.

"ரொம்பப் பாவமாச்சே! குடும்பமே கலேஞ்சு போயிடுமாமே! அதை யார் கலேச்சது?" என்றுள் அலமேலு அம்மாள்.

"நான் இன்றைக்கெல்லாம் அந்த அறையின் பக்கம் போகல்லே. மாப்பிள்ளேயோ, காலேயிலேயே வெளியே போயிட்டார். அந்த ரகுதான் மத்தியானமெல்லாம் அந்த அறையிலே என்னவோ பண்ணிக்கொண்டிருந்தான்" என்றுள் காமாட்சி.

பள்ளிக்கூட மைதானத்தில் விளேயாடி விட்டு இருட்டும் சமயத்தில் வீடு திரும்பிய ரகுவை எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு விசாரணை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். 'நான் அந்தக் குளவிக் கூடைப் பார்க்கவுமில்லே; கலேக்கவுமில்லே. எனக்கு ஒன்றுமே தெரியாது' என்று சாதித்து விட்டான் ரகு. அலமேலு அம்மாள் சங்கரய்யரிடம் ரகுவைப் பற்றிப் புகார் செய்தாள். சங்கரய்யர் இதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லே. லக்ஷ்மி ராகவனிடம் குளவிக் கூடு கலேந்து விட்டதைப் பற்றிக் கூறி வேதனேப் பட்டாள். ராகவன் அவளேத் தேற்றி அனுப்பினுன். ஆனல் அன்று இரவெல்லாம், லக்ஷ்மி, காமாட்சி, அலமேலு அம்மாள் ஆகிய மூவரும்தான் குளவிக் கூடு கலேந்து விட்டதைப் பற்றி நினைத்து வேதனேப்பட்டுக் கொண்டிருந்தனர்.

## 3

**ம**று நாள் காலே பத்து மணி சுமாருக்கு லக்ஷ்மிக்கு வலி கண்டது. வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று அலமேலு

அம்மாள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். ஆனால் ராகவன் அவளுடைய பேச்சை லட்சியம் செய்யாமல் 'டாக்ஸி' ஒன்றை ஏற்பாடு செய்து லக்ஷ்மியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றான். அவனுடன் காமாட்சியும் அலமேலு அம்மாளும் சென்றனர்.

"வலி இப்போதுதான் ஆரம்பித்து இருக்கிறது. முதல் பிரசவமாகையினால் கொஞ்சம் கஷ்டமான கேஸாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. அநேகமாக இன்றைக்கே பிரசவமாகி விடலாம். எதற்கும் சாயந்திரம் வந்து பாருங்கள்" என்றாள் டாக்டர்.

காமாட்சியின் மனம் சஞ்சலமடைந்தது. லக்ஷ்மிக்குச் சுகப்பிரசவமாக வேண்டுமென்று எல்லா தெய்வங்களையும் வேண்டிக் கொண்டாள் அலமேலு அம்மாள்.

**மா**லை நாலு மணி சுமாருக்கு எல்லோரும் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினார்கள். ஆஸ்பத்திரியின் முன் வராண்டாவில் போடப்பட்டிருந்த மேஜைகளுக்கு முன் அமர்ந்து ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருந்தாள் 'என்குயரி' நர்ஸ். ராகவன் அவளிடம் சென்று, "காலையில் பிரசவத்துக்கு வந்திருந்தாளே லக்ஷ்மி, அவள் எங்கே இருக்கிறாள்; பிரசவமாகி விட்டதா?" என்று கேட்டான்.

"லக்ஷ்மியா? அவளுக்குப் பெண் குழந்தை பிறந்தது. ஆனால் பிரசவமான உடனேயே இறந்து விட்டது. ஆயுதக் கேஸாகையினால் அவளுக்கு மயக்க மருந்து கொடுத்தார்கள். இன்னும் அவளுக்கு மயக்கம் தெளியவில்லை. அவளை சிகிச்சை அறைக்குக் கொண்டு போய் இருக்கிறார்கள்" என்று தலை நிமிர்ந்து பார்க்காமல் பதில் சொல்லி விட்டு வேலை செய்து கொண்டே இருந்தாள்.

"ஐயோ!" என்று அலறினாள் காமாட்சி.

"எனக்கு அப்பவே தெரியும். ஆஸ்பத்திரியிலே சரியாகக் கவனிக்க மாட்டா, வீட்டிலேயே பிரசவத்தை வைச்சுக்கலாம்னு தலையிலே அடிச்சுண்டேன், கேட்டாளா? அந்தக் குளவிக் கூடைக் கலைச்சபோதே எனக்குத் தெரியும். பகவானே, நீதான் லக்ஷ்மியைக் காப்பாத்தணும்" என்று பதறினாள் அலமேலு அம்மாள்.

"இது என்னம்மா ஆஸ்பத்திரியா, வீடா? உன் அழுகையை வெளியே போய் வைச்சுக்கோம்மா" என்று கண்டித்தாள் நர்ஸ்.

'ஐயோ! குழந்தை இறந்து விட்டதா? லக்ஷ்மி சாகப் பிழைக்கக் கிடக்கிறாளா?' என்று எண்ணி மனம் துடித்தான் ராகவன்.

லக்ஷ்மியைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் எல்லோரும் சிகிச்சை அறைக்குச் சென்றார்கள்.

சிகிச்சை அறையினுள் தலைமை டாக்டரும் நர்ஸுகளும் மும்முரமாக இருப்பதை வெளியில் நின்று கவனித்த ராகவன், லக்ஷ்மி அபாயகரமான நிலைமையில் இருக்கிறாள் என்பதை உணர்ந்து புழுப் போல் துடித்தான். அலமேலு அம்மாளும் காமாட்சியும் அழுகையை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு உள்ளத் துடிப்புடன் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது தன் பெண்ணைப் பார்க்க ஆபீஸிலிருந்து ஆஸ்பத்திரிக்கு வந்த சங்கரய்யர், ராகவன் மூலம் விஷயத்தை அறிந்து உள்ளம் துடித்துப் போனார்.

சுமார் பத்து நிமிஷ நேரத்துக்குப் பிறகு சிகிச்சை அறையிலிருந்து வெளியே வந்த நர்ஸைப் பார்த்து, "எப்படி இருக்கிறது? மயக்கம் தெளிந்து விட்டதா?" என்று மிகுந்த பதட்டத்துடன் கேட்டான் ராகவன்.

"'கேஸ்' போய்விட்டது" என்று துயரத்துடன் கூறிவிட்டுச் சென்றாள் அவள்.

'ஐயோ' என்று அலறினாள் அலமேலு அம்மாள். 'லக்ஷ்மி' என்று வாய் விட்டுக் கத்தி விட்டாள் காமாட்சி. அச்சமயம் காலையில் லக்ஷ்மியை ஆஸ்பத்திரியில் சேர்த்த பெண் டாக்டர் அங்கே வந்தாள். அவளிடம் சங்கரய்யர் விஷயத்தை அழமாட்டாத குறையாகக் கூறி விட்டுக் கண்ணீர்த் துளியைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

அந்தப் பெண் டாக்டர் அவர்களைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்து விட்டு, "அந்த 'என்குயரி' நர்ஸ் கூறியது உண்மை தான். ஆனால் அந்த லக்ஷ்மி உங்கள் பெண் இல்லை. அது வேறு ஒரு கேஸ். உங்கள் பெண்ணுக்குச் சுகப் பிரசவமாகிப் பிள்ளைக் குழந்தை பிறந்து இருக்கிறது. 'ஏ' வார்டில் இருக்கிறாள். கவலைப்படாமல் போய்ப் பேரனைப் பார்த்து விட்டு வாருங்கள்" என்றாள்.

அடுத்த கணம் எல்லோர் முகமும் மலர்ந்தது. எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு டாக்டர் குறிப்பிட்ட 'வார்டு'க்கு ஓடினார்கள்.

லக்ஷ்மி கட்டிலில் படுத்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் படுத்திருந்த தங்க விக்ரகம் போன்ற குழந்தை தன் குட்டிக் கால்களை அசைத்துக் கொண்டிருந்தது.

"மாப்பிள்ளையை அப்படியே உரிச்சிண்டு வந்திருக்கான்" என்றாள் அலமேலு.

"நான் மட்டும் அந்தக் குளவிக் கூடைக் கலைக்காமே இருந்திருந்தா அக்காவுக்குப் பெண்தான் பிறந்திருக்கும்!" என்றான் ரகு.

"அட, படவா! நீயா அந்தக் குளவிக் கூடைக் கலைச்சே? அப்போ இல்லேன்னு சாதிச்சியே?" என்றார் சங்கரய்யர்.

"அக்கா சதா அந்தக் குளவிக் கூடைப் பார்த்துப் பார்த்துத் தனக்குப் பெண் பிறந்து விடப் போறதேன்னு கவலைப் பட்டுண்டு இருந்தாளாம். அதனாலே அத்திம்பேர்தான் அந்தக் குளவிக்கூடைக் கலைக்கச் சொன்னார்."

"போடா போக்கிரி, பொய் சொல்லாதே" என்று கூறிக் கொண்டே ராகவன் அவன் காதைப் பிடித்துத் திருக முயன்ற போது அவனுடைய பிடியிலிருந்து விடுபட்டுச் சிட்டாகப் பறந்தான் ரகு.


டிசம்பர் 4வ முதல்
சென்னை கெயிட்டி லக்ஷ்மி (பெரம்பூர்)
மற்றும் தென்னாடெங்கும்
ரேவதி புரொடக்ஷன்ஸ்
மனிதனும் மிருகமும்
கதை வசனம் பாட்டு S.D.சுந்தரம்
டைரக்ஷன் K.வேம்பு · S.D.சுந்தரம்
ஸ்டூடியோ · ரேவதி ·
RIGHTS CONTROLLED BY : PENACHANA BROS, MADRAS.
டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சென்னை நகரத்திற்கு: கேபிட்டி பிக்சர்ஸ் சர்க்யூட், சிந்தாதிரிப் பேட்டை, சென்னை. ★ வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு & சித்தூருக்கு: கமலா பிக்சர்ஸ் சர்க்யூட், 41, அண்ணாபிள்ளை தெரு, சென்னை. ★ சேலம்: விஜயா பிலிம்ஸ் லிட்., புதுக்கோட்டை. ★ திருச்சி & தஞ்சாவூர்: கே. என். பிக்சர்ஸ், 2, 2வது தெரு, கோபாலபுரம், சென்னை. ★ மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலி: ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி. ★ மைசூர், தென் கனரா & கூர்க்: பெங்களூர் சிட்டி. ★ சிலோன்: முருகன் டாக்கீஸ் லிமிடெட், கொழும்பு. ★ எப். எம். எஸ். & சிங்கப்பூர்: ஷியாங் ஸிங் கோ., லிமிடெட், சிங்கப்பூர்.

# எதிரொலி

### எஸ். டி. ஸ்ரீனிவாசன்

"இந்த விஷயத்தில் நான் உனக்கு விட்டுக் கொடுக்க முடியாது! என் இஷ்டப்படிதான் நீ நடக்க வேண்டும்!"—அவன் குரலில் கண்டிப்புத் தொனித்தது. மேஜையின் மேல் இருந்த கைக் கடியாரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டு அவன் வெளியே போகக் கிளம்பினான்.

கலங்கிய கண்களுடன் நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்றாள் பங்கஜம். அவள் கண்ணீருக்குக்கூட அந்தச் சமயத்தில் அவன் உள்ளத்தில் கனிவை உண்டாக்கும் சக்தி அற்றுப் போயிருந்தது. இந்த ஆறு வருஷ தாம்பத்திய வாழ்க்கையில் அவள் கண்ணீர் விட்டு, அவன் பார்த்துக் கொண்டிருந்தது இதுதான் முதல் தடவை. சாதாரண சமயங்களிலேயே அவள் மனம் வருந்தப் பார்க்கச் சகியாத அவன் இந்தத் தருணத்தில்—அவள் தாய்மை ஸ்தானத்தை அடைந்த பதினொன்றாம் நாள், அவளை இவ்வளவு தூரம் வருத்தத்துக்கு உள்ளாக்கி அவள் மனத்தைப் புண்படுத்தியது அவளுக்குத் தாங்க முடியாத வேதனையாயிருந்தது.

அவளைத் தாண்டி அறையை விட்டு வெளியே சென்று விட்டான் அவன். அவனுடைய மௌன வெளியேற்றம் அவள் நெஞ்சில் குமுறிக்கொண்டிருந்த ஒரு வேதனை விசும்பலாகப் பிரதிபலித்தது.

இப்படிப் பட்ட ஒரு பெருத்த ஏமாற்றத்தை அடையவா அவள் இத்தனை நாட்கள் என்னென்னவோ கோட்டைகளெல்லாம் கட்டினாள்? கணவனுடன் குடித்தனம் நடத்த வந்து ஐந்து வருஷங்கள் ஓடி, அவள் கருத்தரித்தபோது, அவள் அடைந்த இன்பம் என்ன, இப்போது அவள் அடைந்த சஞ்சலம் என்ன? கேவலம் தன் சாதாரண அபிலாஷை ஒன்றை நிறைவேற்றிக் கொள்ளக் கூட ஒரு பெண்ணுக்குச் சுதந்திரம் இல்லையா?

உருண்டு விழுந்த கண்ணீரைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு மெதுவாகக் கீழே இறங்கினாள் அவள்.



**ப**ங்கஜத்துக்குப் புத்தி தெரிந்த போது அவள் தந்தையை இழந்தவள் என்பதையும் தாயார்தான் தன்னையும் தன் அண்ணன் தங்கை ஆகிய இருவரையும் எப்படியோ கஷ்டப் பட்டுக் காப்பாற்றுவதையும் அறிந்து கொண்டாள்.

சிறு வயதிலேயே ரொம்ப சாமர்த்தியசாலி பங்கஜம். படிப்பு, பாட்டு எல்லாவற்றிலும் கெட்டிக்காரி. நல்ல அழகி. அவளுடைய தாய் ஊரிலிருந்து தனக்குக் கிடைத்த ஏதோ சொற்ப வரும்படியை வைத்துக் கொண்டு குடித்தனத்தை நடத்தி வந்தாள்.

அவள் அண்ணன் ரங்கராஜன் எஸ். எஸ். எல். ஸி. முடித்ததும் ஒரு கம்பெனியில் வேலைக்கமர்ந்தான். சில நாட்களில் ராகவன் அவனுக்குச் சிநேகமானான். ராகவனும் அந்தக் கம்பெனியிலேயே வேலை பார்த்து வந்தவன். அவனுக்கு ஒரு அண்ணனைத் தவிர வேறு உறவினர் யாரும் கிடையாது. அவனும் நாகபுரியில் இருந்தான்.

ராகவனை ரங்கராஜனின் குடும்பத்தார் எல்லோருக்குமே பிடித்திருந்தது. முக்கியமாக அவனுடைய அழகிய முகம், இனிமையான பேச்சு, பெருந்போக்கான நடத்தை எல்லாம் பங்கஜத்தை அவன் பால் ஈர்த்து விட்டன. அவனும் பங்கஜத்தை மிகவும் விரும்பினான். ரங்கராஜனின் தாயும் தன் பெண்ணை அவனுக்குக் கொடுப்பதென்று திட்டம் போட்டு விட்டாள்.

ராகவன் ரங்கராஜன் வீட்டிலேயே வந்து தங்கினான். தன்னால் ஆன உதவியைப் பணத்தாலும், மற்றும் எல்லா வகையிலும் ராகவன் ரங்கராஜன் குடும்பத்துக்குச் செய்தான். அருகே இருந்து நெருங்கிப் பழகப் பழக ராகவன்—பங்கஜம் உள்ளங்கள் ஒன்று கலந்தன. ஒரு நாள் முழுவதும் ராகவனைப் பாராமல் இருந்து விட்டால் பங்கஜத்துக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல் இருக்கும்.

ரங்கராஜனின் தாய்—ஜானகி—பங்கஜத்தின் கல்யாணத்தை முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டிக் காஞ்சீபுரம் சென்றாள். அங்குதான் அவள் அண்ணா ஒருவர் இருந்தார். அவரிடம் எல்லா விஷயத்தையும் சொல்லி விட்டுச் சென்னைக்குத் திரும்பினாள் அவள்.

ஒரு வாரம் கழித்து அவர் காஞ்சீபுரத்திலிருந்து வந்தார். மெதுவாக ஜானகியிடம் "ஜானு! நான் சொல்றேன்னு வருத்தப் படாதே! நான் சில இடத்திலே விசாரிச்சேன். அந்தப் பிள்ளையாண்டானுக்கு அண்ணன் நாகபுரியிலே இருக்கானே அவனுக்குக் குஷ்டரோகமாம். பரம்பரையிலேயே இந்த வியாதி உண்டாம். அவனுக்கு இது தெரியாமல் யாரோ பெண் கொடுத்து விட்டார்கள். அந்தப் பெண் பாவம், அப்படிக் கஷ்டப்படறதாம்" என்றார்.

பங்கஜத்தின் மண்டையில் யாரோ சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது.

ராகவனை மறக்க மறுத்தது அவள் உள்ளம். ராகவனை மணப்பதால் தான் எப்படிப் பட்ட கஷ்டத்தை அனுபவிக்க நேரிட்டாலும் தான் சந்தோஷத்துடன் அவைகளை ஏற்பதாகப் பங்கஜம் சொல்லித் தன் தாயிடமும் மாமாவிடமும்

## முயற்சி வேண்டும்

நீங்கள் 5—7—53 கல்கி இதழில் 'புண்ணியவான்கள் கவனிக்கட்டும்' என்ற தலைப்பின் கீழ் வெளியான கடிதம் எழுதிய அணக்குடி என். கண்ணன் வணக்கம்.

நீங்கள் செய்த உதவியின் பயனாக எனக்கு வேலை கிடைத்து விட்டது. நான் மத்திய ரயில்வே அலுவலகத்தில் வேலை செய்கிறேன். இந்த உதவிக்கு என்னுடைய நன்றி தங்களுக்கு என்னாளும் உரித்தாகுக. நிற்க.

எனக்கு 'உண்மை சகோதரி' என்று கையொப்பம் இட்டுக் கடிதமும் பணமும் அனுப்பிய சகோதரியாருக்கு இந்தச் சந்தோஷமான செய்தியைத் தெரிவிக்க முடியாமல் இருக்கிறேன். அவர் இருமுறை வேலை கிடைத்து விட்டதா என்று கேட்டு எழுதி இருந்தார்.

தாங்கள் தயை கூர்ந்து எனக்கு வேலை கிடைத்த விவரத்தை உங்கள் கல்கி இதழில் ஒரு ஓரத்தில் பிரசுரம் செய்தால் என்றென்றும் தங்களுக்குக் கடமைப் பட்டவனாவேன்.

பம்பாய் எம். கண்ணன்
13—11—53 அணக்குடி.

[தமிழ் நாட்டில் இன்று வேலை கிடைக்காமையால் அவதிக் காளாகியிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அணக்குடி ஸ்ரீ கண்ணனைப் போல் முயற்சி செய்து வேலை சம்பாதித்துக் கொண்டு சந்தோஷமாக வாழும்படி அருள் புரிய இறைவனை வேண்டுகிறோம். —ஆசிரியர்]

---

மன்றாடினாள். காதல் ஒரு புறமும், ராகவன் தங்கள் குடும்பத்துக்குச் செய்துள்ள உபகாரங்கள் காரணமாக அவள் உள்ளத்தில் எழுந்திருந்த நன்றி செலுத்த வேண்டும் என்ற எண்ணம் மற்றொரு புறமும் அவள் மீது அவனைப் பைத்தியம் கொள்ளச் செய்து விட்டன. ஆனால் அவள் வார்த்தைகள் பெரியோர் காதில் கொஞ்சமும் ஏறவில்லை.

ஜானகியும் அவள் அண்ணன் சௌந்தரராஜனும் வேறு விதமாகத் திட்ட மிட்டனர். பங்கஜம் பெங்களூரில் இருந்த லக்ஷ்மி நாராயணனுக்கு மனைவியானாள்.

கணவனுடன் குடித்தனம் செய்ய வந்தாள் அவள். தன் வாழ்க்கையைப் புதிய பாதையில் வகுத்துக் கொண்ட பின் அவள் ராகவனை மறக்க முயன்றாள்; மறக்கவும் செய்தாள். ஆயினும் சிற்சில சமயங்களில் ராகவனுடன் அவள் குடும்பத்தாரும் அவளும் ஆனந்தமாகப் பேசிக் களித்த நாட்களை நினைவு படுத்திக் கொண்டு விட்டால் அவள் இதயம் விம்மும். அந்த நாட்கள் அப்படியே நிரந்தரமாக இருந்திருக்கக் கூடாதா, தான் கன்னியாகவே என்றும் இருந்து ராகவனுடன் பேசிக்கொண்டே இருந்திருக்கக் கூடாதா என்று கூடப் பங்கஜம் பல தடவைகள் நினைத்து, நினைத்து வேதனைப்பட்ட துண்டு.

லக்ஷ்மி நாராயணன் பங்கஜத்திடம் தன் உயிரையே வைத்திருந்தான். அவனுடைய அன்பு மழையிலே, தாம்பத்ய வாழ்க்கையின் புதுமையின் பிடிப்பிலே, இல்லறத்தின் இனந் தெரியாத இன்ப ஊற்றிலே அவளைத் திளைக்கச் செய்தான் அவன். ஆயினும் அவள் இதயத்தின் மூலையில் அந்த இடையறாத ஏக்கம் இருக்கத்தான் செய்தது.

சென்றவாரம் அவள் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

தன் மனைவியின் மேல் இருந்த ஆசை காரணமாக லக்ஷ்மி நாராயணன் பங்கஜத்தின் பிறந்தகத்தின் நிலைமையையும் மனத்தில் கொண்டு அவளைப் பிரசவத்துக்குத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டான்.

அன்றுமாலை தொட்டில் போட்டுக் குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டும்.


மத்தியானம் மூன்று மணிக்கு மாடிக்கு வந்தாள் பங்கஜம். லக்ஷ்மி நாராயணன் சிரித்துக் கொண்டே, ''இன்னிக்கு நம் செல்வத்துக்குப் பெயர் வைக்கணும், இல்லே?'' என்று கேட்டான்.

''ஆமாம், நான் ஏற்கெனவே தீர்மானிச்சுட்டேன்...''— முறுவலித்தாள் பங்கஜம்.

சட்டென்று அவன், ''பங்கஜம்! நான் சொல்லும் பெயரைத்தான் நீ வைக்கணும்... நீ உன் இஷ்டப்படி ஒன்றும் வைக்கக் கூடாது'' என்று கண்டிப்பாகச் சொன்னான்.

இந்தத் தகராறு முற்றி அவன் வெளியேற்றத்தில் முடிந்தது. கடைசியாக அவன் என்ன பெயரிட வேண்டும் என்று விரும்புகிறான் என்று பங்கஜம் தெரிந்து கொள்ள வில்லை. பங்கஜத்தின் மனத்தில் உள்ளதையும் அவன் அறிந்து கொள்ள முயல வில்லை.






பாகிஸ்தானும் அமெரிக்காவும் தங்களுக்குள் எந்தவித இரகசிய ராணுவ ஒப்பந்தமும் செய்து கொள்ள உத்தேசமில்லை என்று செய்தி விடுத்திருக்கின்றன.

---

நான்கு மணிக்குத் திரும்பி வந்தான் அவன். மாடிக்குச் சென்ற அவன் பங்கஜத்தைக் கூப்பிட்டான். அவள் மௌனமாக அவன் முன் போய் நின்றாள்.

"பங்கஜம்! நான் உன் மனசை ரொம்பப் புண்படுத்தி விட்டேன்... எனக்குக் காலேஜ் நாட்களில் ஒரு நண்பன் இருந்தான். அவனுடன்தான் நான் ஹாஸ்டலில் தங்கி இருந்தேன். அவனுக்கு ஒரு சகோதரன் இருந்தான். இருவருக்கும் அவர்களுடைய தகப்பனார் ஒவ்வொரு வீடு வைத்து விட்டுச் சென்றார். என் நண்பனுடைய அண்ணன் மணம் செய்து கொண்டு நாகபுரிக்குப் போய் விட்டான்... என் நண்பனுக்கு வேறு உறவினர் கிடையாது. எங்கள் படிப்பு முடிந்ததும் நாங்கள் இருவரும் ஒரே ஆபீஸில் உத்தியோகத்தில் அமர்ந்தோம். நான் 'காஷியராக' இருந்தேன். நம் கல்யாணம் நிச்சயமாகிய அடுத்தவாரம், பணப் பெட்டியிலிருந்து ஆபீஸ் பணம் ரூ 2000 எப்படியோ காணாமல் போய் விட்டது. உடனே என் நண்பன் தன் வீட்டை விற்று, அந்தப் பணத்தை எனக்குக் கொடுத்து, என் மானத்தைக் காப்பாற்றினான். இந்தப் பெருந் தொகையை அவன்—நான் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுக்கிறேன் என்று எவ்வளவோ மன்றாடிக் கூறியும்—ரோசம் காரணமாக வாங்க மறுத்து விட்டான்... அவனால்தான் நான் இந்த நிலைமைக்கு வர முடிந்தது. கொஞ்ச நாள் கழித்து நான் வேறு உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டு பெங்களூருக்கு வந்து விட்டேன். அவன் சென்னையிலேயே இருந்தான்... சமீபத்தில் அவன் பம்பாய்க்குப் போய் விட்டதாகக் கேள்வி. அவனை என் குல தெய்வத்தின் ஸ்தானத்தில் நான் வைத்திருக்கிறேன். அவனுக்கு ராகவன் என்று பெயர். அவன் ஞாபகம் மறவாமல் இருக்க நம் குழந்தைக்கு அந்தப் பெயரை வைக்க வேண்டும் என்பது என் ஆசை. இப்போது நீ ஆட்சேபிக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்..." என்றான்.

தன் ராகவனேதான் அவன், தன் மனத்தில் இருந்த பெயரேதான் தன் கணவன் உள்ளத்திலும் எதிரொலித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள் பங்கஜம்.

"உங்க இஷ்டப்படி அந்தப் பெயரையே வைச்சுடறேன். உங்களுக்கு எது விருப்பமோ அதுதான் எனக்கும் விருப்பம். நான் உங்களோடு பிடிவாதம் பிடிக்கிற மாதிரி சற்று நேரம் விளையாடியதற்கு என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள் அவள்.

லக்ஷ்மி நாராயணனின் முகம் மலர்ந்தது. அதே சமயத்தில் பங்கஜத்தின் அகமும் மலர்ந்து மகிழ்ச்சியால் விரிந்தது.

# ரீயின்போர்ஸ்டு சிமெண்ட்
# காங்க்ரீட் குழாய்கள்

○●○

"டால்மியா" தயாரிப்பு மிகவும் உயர்தரமானது என்பதற்கு உத்தரவாதம். எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும். துரிதமாக டெலிவரி செய்யப்படும்.

○●○

## டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
### டால்மியாபுரம் - திருச்சி

*இந்தியன் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட், கவர்ன்மெண்ட், ரயில்வேக்கள், முனிசிபாலிடிகள் முதலிய ஸ்தாபனங்களுக்கு சப்ளை செய்வோரின் அங்கீகரிக்கப்பட்ட ஜாபிதாவிலுள்ளது.*

AIAB

---



# வெடிப்பும் நோயும் கொண்ட பாதத்திற்கு விரைவில் இதமளிக்கும்

வலியுள்ள பாதத்திற்கு ஜாம்-பெக் மூலிகை களிம்பைப் போடுங்கள். அதன் துரிதமான இதமளிக்கும் தன்மையை நீங்களே அறிந்து கொள்ளலாம். அதிலிருக்கும் நோய்க் கொல்லும் மருந்துக்கலப்புள்ள தைலங்கள், நோய், தன்னாமை ஆகியவற்றைப் போக்கி வெடிப்புக்களை ஆற்றி, வீக்கம் புண் ஆகிய வற்றைக் குணப்படுத்தும். ஜாம்-பெக்கின் ஊடுருவிப்பாய்ந்து வேலை செய்யும் குணம் எப்போதும் இதமளிப்பதாகும். இன்றே ஜாம்-பெக் வாங்குங்கள். சருமம் மண்டை நோய்களுக்கும், வெட்டுக்காயம், நெருப்புப்புண், கருங்கிக் கொப்பளம், விஷப்புண்கள், ரணங்கள், சேற்றுப்புண், பூச்சிக் கடி, மூல உபத்திரவம் ஆகியவற்றிற்கும் ஜாம்-பெக் உலகப் பிரசித்தி பெற்ற நிவாரணியாகும்.




மிருகக் கொழுப்பற்றது என்பதற்கு உத்திரவாதம்

## Zam-Buk

ஜாம்-பெக் உலகத்தின் தலைசிறந்த சரும ஆயின்ட்மென்ட்

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்.




"இன்றைக்கு ஏதேனும் விசேஷம் உண்டோ!" என்று வழக்கப்படி ஆபீசிலிருந்து வந்த தன் கணவனை அதி ஆவலுடன் விசாரித்தாள் அபிதா.

"இனிமேல் அப்படி கேட்கவே போகிறதில்லை என்று சொன்னாயே!" என்றான் கண்ணன்.

"தினமும் ஒரு விசேஷமும் இல்லாமல் இருக்கிறதே என்று அப்படிச் சொன்னேன். இருந்தாலும் மனசு கேட்கிறதா!" என்றாள் அபிதா.

"நீ இன்றைக்குக் கேட்காமல் இருப்பாய். நானே சொல்ல வேணும் என்று இருந்தேன்" என்று சொல்லிக் கொண்டே தன் கோட்டுப் பையிலிருந்து ஒரு 'கவரை' யெடுத்தான் கண்ணன். அபிதாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. "அப்படியென்றால் உத்தரவு வந்துவிட்டது என்று சொல்லுங்கள்" என்று சொல்லி வெடுக்கென்று கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டாள்.

"ஆமாம். ஐந்நூறு ரூபாய் டிபாசிட் கட்டிவிட்டு இன்னும் நான்கு நாட்களுக்குள்ளே வேலையை ஒப்புக் கொள்ள வேண்டும்" என்றான் கண்ணன்.

சட்டென்று அபிதாவின் முகம் குவிந்தது. பணத்துக்கு எங்கே போவது என்ற கவலை அவளுக்கு.

அதை அறிந்த கண்ணன் "அப்பா வாங்கின பிராவிடண்ட் பணம் என்ன ஆச்சு......" என்று ஆரம்பித்தான். அந்த வாக்கியத்தை அவன் சரியாகக் கூட முடிக்கவில்லை. அதற்குள் அவன் வாயைப் பொத்திச் சமையலறைப் பக்கம் அழைத்துக் கொண்டு போய் விட்டாள் அபிதா.

"என்ன! என்ன!" என்றான் கண்ணன்.

"சற்று மெதுவாகப் பேசுங்கள். உள்ளே அறையிலே தான் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார். இன்னும் மடத்துக்குப் போகவில்லை. உடம்புகூட ஏதோ சரியில்லை என்று என்னை மிளகு கஷாயம் வைக்கச் சொன்னார்" என்று சொல்லிக்கொண்டே அடுப்பிலிருந்த கஷாயத்தை இறக்கிவடிகட்டினாள்.

பிறகு கஷாயத்தைத் தம்ளரில் ஊற்றி அறையில் உள்ள மேஜையின் மேல் கொண்டுபோய் 'ணங்'கென வைத்தாள். அந்தச் சப்தத்திலேயே பெரியவர் எழுந்து விட்டார். உடனே அதை யெடுத்து 'மடக் மடக்'கென்று குடித்துவிட்டு மடத்துக்குப் புறப்பட்டு விட்டார்.

கிழவர் போனதும் அபிதா "நீங்கள் பேசினது அவர் காதில் விழுந்திருக்குமோ!" என்று கண்ணனைப் பார்த்துக் கேட்டாள்.

"நீதான் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னாயே!"

"முதலில் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் கஷாயத்தைக் கொண்டு போய் வைத்ததும் எழுந்து விட்டாரே!"

"உம். அப்படித்தான் இருக்கட்டுமே! இது என்ன இரகசியமா! என்றைக்கிருந்தாலும் நான் கேட்டு வாங்கப் போவது தானே!"

"நினைத்துக் கொண்டிருங்கள். உங்களுக்குத் தான் கொடுக்கப் போகிறாராக்கும்" என்று தன் மோவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள் அபிதா.

"எனக்கு இல்லாமல் வேறு யாருக்காம் அது!"

"சரி, சரி. நீங்கள் இன்னும் அவரைச் சரியாய்த் தெரிந்து கொள்ளவில்லை!"

"நீ தெரிந்து கொண்டிருக்கிறாயோ, இல்லையோ! அதுவே போதும்!" என்றான் கண்ணன்.


* * *

பெரியவர் தேவநாதனுக்குக் கண்ணன் சொந்தப் பிள்ளையில்லை. அவருக்கு வெகு நாட்களாகப் பிள்ளையில்லாமலிருக்கவே, அவர் மனைவி, தன் தங்கையின் பிள்ளை கண்ணனைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டாள். அப்பொழுதே தன் அண்ணன் மகன் கோபாலனை எடுத்துக் கொண்டால் என்ன என்று தேவநாதன் சிறு சலசலப்பு ஏற்படுத்திப் பார்த்தார் குடும்பத்தில். ஆனால் அம்மாவின் கைதான் சற்று ஓங்கியிருந்தது!

அதோடு கண்ணன் அழகான பையன். நல்ல புத்திசாலி, படிப்பிலும் முதற் பையன்.

தேவநாதனுக்கு ரயிலில் வேலை. நல்ல சம்பளம். கண்ணன் மிகச் செல்லமாய் வளரக் கேட்பானேன்! அதனால் பையன் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. கவனமாய்ப் படித்து ஒவ்வொரு வகுப்பிலும் தங்காமல் தேறி மேல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த கோபாலனையே போய்ப் பிடித்து விட்டான். தேவநாதனுக்குத் தம் பையனைப் பற்றி அளவில்லாத சந்தோஷம். அடிக்கடி கண்ணனைப் பற்றித் தம் சிநேகிதர்களிடத்திலெல்லாம் சொல்லிப் பூரிப்படைவார்.

ஆனால் கோபாலனுக்கும் கண்ணனுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. கோபாலன் என்ன சிறு பையனா! இந்தப் பையன் நம்மை வந்து பிடித்து



"முதலியாரே, இவன் உங்க சின்னப் பையனா? பேஷ், தேவலையே! இப்பொழுதே பையன் உங்க உயரம் வளர்ந்துவிட்டானே!"

விட்டானே என்ற வருத்தத்தோடு, 'தம் சித்தப்பாவின் சொத்துக்கும் வாரிசாக வந்து விட்டானே!' என்ற கோபமும் சேர்ந்து கொண்டது அவனுக்கு. கண்ணன் மாத்திரம் இளைத்தவனா, என்ன! இருவருக்குள் கட்சி பிரதி கட்சியும், சண்டையும் சச்சரவுமாகக் கிடந்தது. தேவநாதன் ஒரு நாள் கோபாலனைக் கண்டித்தார். "போ, சித்தப்பா! உன்னைத் தெரியும்!" என்று அவரையே எதிர்த்துப் பேசினான் அவன்.

பிறகு கண்ணனை மேற்படிப்புக்காகத் தனியே வெளியூருக்கு அனுப்ப அம்மாவுக்கு மனம் இல்லை. "படித்தது போதும், பையனுக்கு வேலையைப் பாருங்கள்!" என்று சொல்லி விட்டாள். கண்ணனும் ஓய்ந்த வேளையில் சுருக்கெழுத்தும் 'டைப்'பும் கற்றுக் கொண்டு வந்தான்.

அந்த ஊரில் அம்பலத்தாடையான் மடம் ரொம்பப் பிரசித்தம். தேவநாதனுக்கும், மடத்தாருக்கும் ஆதிநாளையிலிருந்தே பரிச்சயம் உண்டு. எந்த விசேஷக் காரியங்களும் மடத்தில் தேவநாதன் இல்லாமல் நடைபெறாது. அவரும் மிகுந்த பக்திமான். தினம் ஆபீஸ் நேரம் போக எஞ்சிய வேளையில் மடத்தில்தான் இருப்பார். அந்த ஊர் தாசில்தாரும் சத்விசாரணை செய்ய அடிக்கடி அந்த மடத்துக்கு வந்து போவதுண்டு. அவர் மூலமாகத்தான் அந்த ஊர் தாலுக்காபீசில் கண்ணனுக்கு ஒரு தற்காலிகக் குமாஸ்தா வேலை கிடைத்தது.

பையனுக்குச் சீக்கிரத்தில் உத்தியோகம் கிடைத்தது பற்றி அம்மாவுக்கு அளவில்லாத சந்தோஷம். அதுவும்தான் தற்காலிகம் என்ற பெயரில் வருஷக் கணக்காய் ஓடிக் கொண்டிருந்ததே!

ஒரு நாள் சாதாரண தலைவலி ஜுரமாய்ப்படுத்த கண்ணனின் அம்மா மீண்டும் எழுந்திருக்கவேயில்லை. தான் கண் மூடுவதற்கு முன் கண்ணனுக்குக் கலியாணம் செய்து பார்க்க ஆசைப்பட்டாள். அடி நாளிலேயே புள்ளி போட்டு வைத்திருந்த தன் தம்பி பெண் அபிதாவின் ஜாதகத்தைக் கொண்டு வரச் செய்து ஒத்திட்டுப் பார்த்தாள். ரொம்பவும் பொருத்தமாயிருந்தது. ஆனால் கல்யாணம் முடிவதற்குள்ளாகவே அவள் கண் மூடி விட்டாள்.

அதனால் கண்ணன் கலியாணம் ஏதோ நின்று விட்டாற்போல் தோன்றியது. இருந்தாலும், பெண்ணைப் பெற்றவர்கள் சும்மா இருப்பார்களா? கலியாணத்தை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம் என்று தேவநாதனிடம் பேச்சை யெடுத்தார் அபிதாவின் தந்தை.

"ஏன்! என் தங்கையின் பெண் தமயந்தியின் ஜாதகங்கூட ரொம்பப் பொருத்தமா யிருக்கிறதே!" என்று வெருண்டார் தேவநாதன். ஆனால் கண்ணன் என்னவோ அபிதாதான் வேண்டும் என்று ஒற்றைக் காலால் நிற்கவே, அதிலும் அவருக்குத் தோல்விதான். பிறகு ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, பெரிய மனிதராயிருந்து அபிதாவுக்கும் கண்ணனுக்கும் கலியாணத்தை முடித்து வைத்தார்.

அந்த வீட்டில் அடி யெடுத்து வைத்த நாளிலிருந்தே அபிதாவுக்கும் மாமனார்மேல் இலேசான மனத்தாங்கல் இருந்தது. தன்னையே வேண்டாமென்று சொன்னவராயிற்றே என்ற வருத்தம் இல்லாமலிருக்குமா! ஆனால் மனத்திலிருந்தாலும் அதை அவள் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. பெரியவருக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் தவறாமல் செய்து வந்தாள்.

தம் இஷ்டப்படி நடக்காமற் போகவே, தேவநாதனுக்கும் சற்று மன வருத்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் சத் சங்கத்தின் காரணத்தால் 'இதெல்லாம் அக்ஞானம், மாயை' என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு விட்டார். வீட்டிலும் 'வெட்டிப் பேச்சொன்றும் வைத்துக் கொள்வதில்லை. ஆபீசுக்குப் போய் வருவதும், மடத்துக்குப் போய் வருவதுமாக அவர் நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

கண்ணனின் உத்தியோகம் தற்காலிகம் என்று தெரிந்ததும் அபிதாவுக்குச் சப்பென்றாகி விட்டது. அதற்கு மனுப் போடுங்களேன், இதற்கு மனுப் போடுங்களேன் என்று அடிக்கடி அவனை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தாள். 'நீங்கள்தான் அடி நாளிலிருந்தே அம்மா பிள்ளையாய் இருந்து விட்டீர்கள். இல்லா விட்டால் உங்கள் அப்பாவுக்குத் தானாகட்டும், இத்தனை வருஷங்களாய் வேலை பார்த்து வருகிறாரே. அந்த இலாக்காவிலேயே உங்களையும் இழுத்துப் போடணும் என்று தோன்றியிருக்காதோ!' என்று சமயம் கிடைத்தபோதெல்லாம் மாமனார் மேல் பாணம் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில்தான் எப்பொழுதோ மனு போட்டிருந்த ரயில்வே டிபார்ட்மெண்டிலிருந்து 'இண்டர் வியூ'வுக்கு உத்தரவு வந்தது. சந்தோஷமாய்ச் சென்றான் கண்ணன். அவனைப்போல் அங்கு அநேக ஆயிரம் பேர்கள் வந்திருந்தார்கள். எல்லோரையும் கூப்பிட்டு ஏதோ கேள்வியைக் கேட்டுவிட்டு 'சரி, நீங்கள் போகலாம். தேர்தெடுத்தவர்களுக்குத் தபாலில் உத்தரவு வரும்' என்று சொல்லியனுப்பி விட்டார்கள்.

மறு நாளிலிருந்து தினம் தபால்காரனை ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன். அதைவிட ஆவலாய்க் கிடந்தாள் அபிதா.

இதற்கிடையில் தேவநாதன் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார். அதுமுதல் கொண்டு வீட்டில் சாப்பிடும் நேரம் போக, மற்ற நாழிகையெல்லாம் மடத்தில்தான் இருப்பார் தேவநாதன். சீக்கிரத்திலேயே வழக்கப்படி கணக்கு ஒன்றும்

பார்க்காமல் பிராவிடண்ட் பண்டுப் பணத்தில் ஒரு பகுதி அவர் கைக்கு வந்தது.

அப்பொழுதுதான் கண்ணன் இரண்டு மாதங்களாக அந்த ஆவலாய் எதிர்பார்த்திருந்த அந்த ரயில்வே உத்தரவு அவனைத் தேர்ந்தெடுத்திருப்பதாக வந்தது. ஆனால் ஐந்நூறு ரூபாய் டிபாசிட் கட்ட வேண்டுமே! அதற்கு என்ன செய்வது!

மறு நாள் ஞாயிற்றுக் கிழமை. கண்ணன் வீட்டில்தான் இருந்தான். அன்றைக்குச் சாப்பிடும்பொழுது அப்பாவை அவசியம் கேட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். அபிதாவிடமும் சொல்லி வைத்தான்.

அதன்படியே அன்று மத்தியானம் அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது, கதவின் மறைவிலிருந்து கொண்டு 'கேளுங்களேன்' என்று கண் ஜாடை செய்து காட்டினாள் அபிதா. கண்ணனும் கேட்க வாயெடுத்தான்; வாயில் வார்த்தைகள் வரவில்லை. எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டு தடுமாறினான். அதற்குள் தேவநாதன் தயிர் சாதம் சாப்பிட ஆரம்பித்து விட்டார். மறுபடியும் அபிதா ஜாடை காட்டவே, கண்ணன் தைரியமாய் வாயைத் திறந்து "அப்பா, எனக்கு ரயில் வேலைக்கு உத்தரவு வந்திருக்கிறது" என்றான்.

"சந்தோஷம். என்றைக்கு வந்தது?" என்று தயிரை உறிஞ்சிக் கொண்டே கேட்டார் தேவநாதன்.

"நேற்றே வந்தது. இன்னும் இரண்டு தினத்தில் ஐந்நூறு ரூபாய் டிபாசிட் கட்டிவிட்டு வேலை ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று கூறி அவர் வாயைப் பார்த்தான் கண்ணன்.

ஆனால் அவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. சாப்பிட்டுக் கையலம்பிவிட்டு அலம்பிய ஈரம் கூடக் காயாமல் மடத்துக்குச் சென்று விட்டார்.

"ஏன்! எத்தனை நூறு ரூபாய் கொடுத்தார். கையைத் திறந்து கொஞ்சம் காட்டுங்களேன், பார்ப்போம்" என்று ஏளனம் செய்தாள் அபிதா. கண்ணன் கையை யலம்பிக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தான். "நீங்கள்தானாகட்டும். டிபாசிட் கட்ட ஐந்நூறு ரூபாய் பணம் வேண்டும் என்று நேரடியாய்க் கேட்கிறதற்கென்னவாம்!" என்றாள்.

"அப்படித்தான் கேட்பதற்கிருந்தேன்" என்று இழுத்தான்.

"இருங்கோ, இருங்கோ, அப்படியே இருந்தண்டிருங்கோ" என்று தன் விரல்களை கட்டை முறித்துக்கொண்டே அபிதா சாப்பிடச் சென்றாள். "இரு. இரு. இப்பொழுதே மடத்துக்குப் போய் இரண்டில் ஒன்று தெரிந்து கொண்டு வருகிறேன்" என்று வேகமாகப் புறப்பட்டான் கண்ணன்.

அபிதா இன்னும் சரியாகக் கூடச் சாப்பிட்டு முடிக்கவில்லை. அதற்குள் திரும்பி விட்டான் கண்ணன். முகம் ஜில் வென்றிருந்தது. "என்னவாம்!" என்றாள் அபிதா.

"என்னத்தைச் சொல்ல! மனுஷன் கம்பி நீட்டி விட்டார். ஏதோ கோபாலவிடம் போகணும் என்று சொல்லிக் கொண்டிருந்தாராம். பஸ் ஏறிப் போயிருக்கிறாராம்!" என்றான்.

"பார்த்துக் கொள்ளுங்கள். பார்த்துக் கொள்ளுங்கள். அவர் மனத்தை இப்பொழுதாவது அறிந்து கொண்டீர்களா!" என்று எழுந்து எச்சில் கையைக் கழுவினாள் அபிதா.


"அவர் திரும்பி வந்து நம் வீட்டு வாசல் குத்துப் படி ஏறுகிறதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று தேவநாதனைக் கறுவிக் கொண்டே தன் அறைக்குப் படுக்கப் போய்விட்டான் கண்ணன்.

அன்று மாலை அபிதாவுக்குக் காப்பி போட மனம் ஓடவில்லை. 'இப்படிச் சரியான சமயத்தில் பண உதவியில்லாமல் கைக் கெட்டியது வாய்க்கு எட்டாமல் போகிறதாவது!' என்று நினைக்க நினைக்க அவள் நெஞ்சு வலித்தது. அவள் அப்பா மட்டுமிருந்தாலும் அவசியம் பணம் சாய்ந்துவிடும். குடும்பத்துடன் பிரார்த்தனையைச் செலுத்தத் திருப்பதிக்குப் போயிருந்தார். அவளும் கூடவே போயிருக்க வேண்டியவள்தான். ஆனால் அவள் நாலு மாதங்களாய் ஸ்நானம் பண்ணாமலிருந்ததால் அழைத்துப் போகவில்லை. ஏதோ ஞாபகம் வந்து தன் கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். அப்பொழுதுதான் தன் இரட்டை வடச் சங்கிலியை அம்மாவின் கழுத்தில் போட்டு அனுப்பியது ஞாபகம் வந்தது. ஆனால் அவள் இரு கரங்களிலும் அப்பொழுது மூன்று ஜதை வளையல்கள் இருந்தன.

மறுநாள் காலை கண்ணன் ஆபீசுக்குப் புறப்பட்டான். "போய் ஒரு வாரத்துக்கு லீவு போட்டு விட்டு வந்து விடுங்கள்; பணத்துக்கு ஏதாவது வழி பண்ணுவோம்" என்று சொல்லியனுப்பினாள்.

"உம். அது பற்றி என்ன! இந்தத் தற்காலிக வேலையே ஓடுகிறவரை ஓடட்டும்" என்று சலிப்புடன் சொன்னான் கண்ணன்.

"அவசியம் வந்து விடணும்" என்று கண்டித்து அனுப்பினாள் அபிதா.





குடந்தை அன்னதான சிவன் சிசு நல விடுதிக்குச் சென்னை ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு கே. ராஜாராம் சென்ற வாரம் விஜயம் செய்து, விடுதியின் நற்பணிகளைச் சிலாகித்தார். படத்தில் மந்திரியையும், உதவி பெறும் குழந்தைகளையும், இப்பணியைத் திறம்பட நடத்தி வரும் சகோதரிகளையும் காணலாம்.

பிறகு அவன் கண்ணன் ஆபீசிலிருந்து வந்ததும் தன் கை வளையல்களைப் பற்றிச் சொன்னாள். அதற்கு அவன் துளிக்கூடச் சம்மதிக்கவில்லை. 'சரக்' கென்று வெளியே புறப்பட்டுத் தன் நண்பர்களை யெல்லாம் போய்ப் பார்த்தான். திடுதிப்பென்று ஐந்நூறு ரூபாய் பணம் யார் வைத்திருந்தார்கள்! ஒருவன் ஐம்பது இருக்கிறது என்றான். இன்னொருவன் நூறு இருக்கிறது என்றான். இப்படி அவரவர்களிடம் இருப்பதை வாங்கிச் சேர்த்தால்கூட நானூறுக்கு மேலாகவில்லை. வெறுங்கையுடன் மனமுடைந்து இரவு வெகு வெகு நேரம் கழித்துத் தன்னுடைய வீடு திரும்பினான் கண்ணன்.

அன்றுதான் டிபாசிட் கட்ட வேண்டிய கடைசி நாள். அபிதா சந்தோஷமாய்த் தன் கை வளையல்களைக் கழற்றிக் கொடுத்தாள், அதை வாங்குவதற்கே கை நடுங்கிற்று அவனுக்கு. அவன் பண்ணிப் போட்டதா என்ன!

"இது பத்துச் சவரன் என்கிறாயே, வைத்து வாங்குவதற்குக் கூட காணாதே!" என்று கேட்டான் கண்ணன்.

"அது எப்படிக் காணும்! அப்படியே விற்று விடுங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கு ஐந்நூறு ரூபாய் கிடைக்கும்" என்றாள் அபிதா.

"உங்கப்பா என்ன நினைப்பார்!" என்று தயங்கினான் கண்ணன்.

"என்ன நினைத்தால் உங்களுக்கு என்ன! நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள்!" என்று வழியனுப்ப வாசல்வரை வந்தாள் அபிதா.

அப்பொழுதுதான், "நீங்கள்தானே கண்ணன்!" என்று கேட்டுக் கொண்டே ஒரு பெரியவர் உள்ளே வந்தார். கழுத்தில் ருத்திராட்சம் கட்டிக் கொண்டு ஏதோ மடத்தார் வகையறாப் போல் தோன்றினார் அவர். "ஆமாம்!" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே, தம் மடியிலிருந்து ஒவ்வொன்றாய் ஆறு புத்தப் புதிய நூறு ரூபாய் நோட்டுகளை யெடுத்துக் கண்ணன் கையில் வைத்தார். "ஏது இது, யார் கொடுத்தது!" என்று பரபரப்புடன் கேட்டான் கண்ணன். அபிதா அதைக் கண்டு அப்படியே ஆச்சரியத்தில் ஆழ்ந்தாள்.

"நான் ஊரிலிருந்து வருகிறேன். தேவநாதன் அனுப்பி வைத்தார். அவருக்குப் பிராவிடண்ட் பண்டுப் பணம் வந்தது தெரிந்து போய்க் கோபாலன் ஒரு நாள் மடத்துக்கு வந்து அவர் காலைப் பிடித்துக் கொண்டானும். ஏலத்தில் வரும் அவன் சொத்துக்களை மீட்டுக் கொடுக்கும்படி மன்றாடினும். உங்களுக்குத் தெரிந்தால் கொடுக்க வேண்டாம் என்று சொல்வீர்கள் என்றறிந்து இரகசியமாய் அத்தனை பணத்தையும் எடுத்துக் கொடுத்தனுப்பி விட்டார்.

"அதற்கப்புறம் இரண்டு நாள் கழித்து உங்களுக்கு உத்தரவு வந்ததாம், ஐந்நூறு ரூபாய் டிபாசிட் கட்டச் சொல்லி. கையில்தான் ஒற்றைச் சல்லி யில்லையே! உங்களிடம் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் விழுந்தடித்துக் கொண்டு அங்கு வந்திருக்கிறார். கோபாலன் ஊரிலில்லை. நேற்று மாலைதான் வந்தான். நல்ல காலத்துக்கு அவனிடம் கடன்காரர்களுக்குக் கொடுத்தது போக அறுநூறு ரூபாய் பாக்கியிருந்ததாம். உடனே அதை வாங்கிக் கொடுத்து என்னை நேரிலேயே அனுப்பினார்.

"ஐந்நூறு ரூபாய் டிபாசிட் கட்டிவிட்டு, மீதிக்கு உங்களை நல்ல உடுப்புகளாய் இரண்டு 'ஸெட்' தைத்துக் கொள்ளச் சொன்னார். இந்தக் குழந்தைக்கும் நல்ல பட்டுப் புடவையாய் ஒன்று எடுத்துக் கொடுக்கச் சொன்னார். அங்கு காலையிலிருந்து திருப்பாவை – திருவெம்பாவை மகாநாடு ஆரம்பமாகிறது. அவரும் உபந்யாசம் செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார். ஊர் திரும்ப ஒரு வாரமாகும்" என்று சொன்ன பெரியவர் "ஒன்று மறந்து விட்டேனே! கொடுத்திருக்கும் பணத்துக்கு ஈடாகக் கோபாலனின் சொத்தை உங்கள் பெயருக்கே பத்திரம் எழுதச் சொல்லியிருக்கிறாராம்" என்று கூறி அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.

அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் அவ்விருவருடைய உள்ளத்திலும் புகுந்து, இல்லாத உணர்ச்சிகளை யெல்லாம் எழுப்பிக் கொண்டிருந்தன. அவர்களால் வாய் திறந்து பேசக்கூட முடியவில்லை.

அப்பொழுது "மாமாவை நான் இத்தனை நாளாய் ரொம்பத் தப்பிதமாக நினைத்து விட்டேனே!" என்றாள் அபிதா. அவள் குரல் தழுதழுத்தது; கண்களிலிருந்து நீரும் வழிந்தது.

கண்ணன் நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டான். அவன் கண்களும் கலங்கிச் சிவந்தன.

# அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா

சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத்தினால் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

○●○

4 மாத்திரைகள் ஒரு புட்டியில் இருக்கின்றன. (7 முழு அளவுகள்)

## பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

ஏஜண்டுகள்:


என். தேசாய் கௌண்டர் & கோ.

41, பந்தர் தெரு - சென்னை


---

பிரசித்தி பெற்ற ஸ்விஸ் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்ட கைக் கெடிகாரங்கள்

கைக் கெடிகாரம்
பாக்கெட் கெடிகாரம், டயம் பீஸ் ஒவ்வொன்றும் 5 வருஷ உத்தரவாதம்



| | ஒரிஜினல் விலை | தற்போது விலை |
|---|---|---|
| பாக்கெட் வாட்ச (ஆஸ்ட்ரியா) | 24 | 10/- |
| அயல் நாட்டு அலாரம் டயம்பீஸ் | 30 | 14/- |
| உயர் ரகம் அலாரம் டயம்பீஸ் | 35 | 16/- |

No. 501  Size 7½

| | | |
|---|---|---|
| 15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 75 | 36/- |
| 15 ஜுவல்ஸ் ,, 20 மைக்ரோன்ஸ் | 90 | 40/- |


No. 502  Size 10½

| | | |
|---|---|---|
| 15 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 80 | 38/- |
| 17 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 90 | 44/- |
| 21 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 130 | 60/- |

No. 503  Size 6½

| | | |
|---|---|---|
| 5 ஜுவல்ஸ் க்ரோம்கேஸ் மிராஜ் | 42 | 20/- |
| 5 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 52 | 25/- |
| 15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 70 | 32/- |

குறைந்த விலையில் பவுண்டன் பேனாக்கள்



ஸ்வான் கோல்ட் நிப் பவுண்டன் பேனா ரூ. 14/-
கோல்ட் கேப் ரூ. 18/- பிளாக் பேர்டு ரூ. 13/-
ராஜா (ஜெர்மன்) ரூ. 10/- வைஸ்ராய் மாடல் ரூ. 6/-
விக்டர் ரூ. 5/-, பார்க்கர் ஜூனியர் மாடல் (ஜும்போ) ரூ. 7/-

**PIONEER WATCH CO.,**
Post Box No. 11428, CALCUTTA - 6

# கால்கேட் குளோரோபில் டூத்பவுடர்




## குளோரோபிலின் பூரண நன்மைகளை நீங்கள் உபயோகிக் கையில் தருகிறது!

## வீரிய குளோரோபில்தான் பலன் தரும்!

வீரிய குளோரோபிலின் நன்மைகளை எல்லாம் புதிய கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் தருகிறது. வீரிய குளோரோபில் தான் வாய் நாற்றம், கிரிமிகளை நீக்கி ஈறுகளைப் பலப்படுத்துகிறது. கால்கேட் முறையில் குழந்தைகளுக்கு குளோரோபில் கவனிப்பை அளியுங்கள்—அரிய சந்தர்ப்பம்.




### வாய் நாற்றத்தை அழிக்கிறது

ஒரு விசேஷ சூத்திரம் காரணமாக கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் துரிதமாக, திருத்தமாக வேலை செய்கிறது. உங்கள் வாய் அதிகநேரம் புதுமை, இனிமையுடன் இருக்கிறது. அதன் வாசனை ஜோரானது!

### கிருமிகளை ஒழிக்கிறது



சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் பற்களைச் சிதைக்கும் அமிலங்கள் ஒழிகின்றன.



### ஈறுகளை பலப்படுத்துகிறது

ஈறுகளை குளோரோபில் பலப்படுத்துகிறது. தினசரி கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் குளோரோபிலின் பூரண நன்மைகளைப்பெற்று ஈறுகளைப் பாது காக்கலாம்.




CTP68



ரமண்லால் வஸந்தலால் தேசாய் :: மொழி பெயர்ப்பு : ரா. வீ.

## 26. உள்ளம் உடைந்தது!

மாதவப் பிரஸாத் இரண்டாம் தடவையும் தோள்மீது கைவைத்து விடவே, மனோரமாவுக்கு என்ன செய்வது, என்ன சொல்வது என்று புரியவில்லை. அவர் தன் தோள் மீது கை வைத்தது சிறிதும் அவளுக்குப் பிடிக்கவில்லை; அருவருப்பாகவேதான் தோன்றியது. அப்படிப் பிடிக்காத அருவருப்பான கையை அவள் பிடித்திருக்கக் கூடாதல்லவா? கையைப் பிடித்துக் கல்யாணம் செய்து கொண்டபின் அவள் அவ்விதம் அருவருப்பைக் காட்டலாமா?

கணவன் என்றால் மனைவியின் தோள்மீது கை வைக்க அவனுக்கு அதிகாரம் கிடையாதா? உரிமை கிடையாதா? கிடையாது என்று அவள் எங்கே சொன்னாள்? அதிகா

ஒடுக்கி நசுக்கி மாதவப் பிரஸாதின் கையில் தன்னை ஒப்படைத்திருப்பாளா?

அவள் மாதவப் பிரஸாதின் கையைத் தோளிலிருந்து அகற்றவில்லை. ஆனால் அதே சமயம் அவள் மனக்கண் முன்பு சுதாகர் காட்சி அளிக்கத் தொடங்கி விட்டான். தனிப் பூஜைக்கு அவள் சென்ற பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அத்தனையும் நினைவு வந்தன. சுதாகர் தன் கரம் பற்றி யிருந்தால் எப்படி யிருக்கும் என்ற கற்பனையில் ஈடுபட்ட மனோரமாவின் மெய் சிலிர்த்தது. அந்த மெய்ம்மறந்த நிலையில் மாதவப் பிரஸாதின் கையை அவள் அகற்றவில்லை. அப்படியே தோளின்மீது இருக்க விட்டு விட்டாள். ஆனால் அவள் உள்ளம் உடைந்து விட்டது. கண்கள் 'குபு குபு

இத்தனை அன்பும் அநுதாபமும் தவழத் தன் சிரமத்தைக் கேட்டு அறிய விரும்பும், கண்ணீரைத் துடைத்து விடும் கணவருக்கு அவள் என்ன பதில் சொல்லுவாள்? இவ்வளவு ஆசையுடன் 'ஏன் அழுகிறாய்?' என்று காரணம் கேட்கும் கணவரிடம், "உன்னுடன் கல்யாணம் நடந்ததே, அதற்காகத் தான் இப்படி அழுகிறேன்!" என்று அவள் எப்படிச் சொல்லுவது?


மனோரமாவின் கண்ணீரை மாதவப் பிரஸாத் துடைத்து விட்டார். இருந்தாலும் அவள் அழுகையை நிறுத்தவில்லை; அழுது கொண்டே தான் இருந்தாள். தான் மாதவப் பிரஸாதுக்குத் தீங்கு இழைப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. மாதவப் பிரஸாதுக்கு மட்டும் என்ன, சுதாகருக்கு மட்டும் அவள் என்ன நியாயத்தை வழங்கி விட்டாள்? அவனுக்கும்தான் அவள் தீங்கு இழைத்து விட்டாள்! அப்படியிருக்கும் பொழுது அவள் அழாமல் என்ன செய்வாள்?

அழுது அழுது அவளுடைய கண்ணீர் வற்றத் தொடங்கியதும், "மனோரமா! என்ன விஷயம்? எதற்காக அழுகின்றாய்?" என்று மறுபடியும் கேட்டார் மாதவப் பிரஸாத்.

மாதவப் பிரஸாத் அநாகரிகம் வாய்ந்தவர் அல்ல, காட்டு மிராண்டித்தனம் கொண்டவர் அல்ல என்பதை மனோரமா கண்டாள். ஏனெனில் அவர் மனோரமாவிடம் கோபித்துக் கொள்வதற்குப் பதிலாகச் சுமுகமாக நடந்து கொண்டிருந்தார். அப்படியிருக்கும்பொழுது அவள் அவரை எப்படி வேறுவிதமாக நினைக்க முடியும்? ஆனால் அவர் கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை; பேசாமலே உட்கார்ந்திருந்தாள். ஆயினும் விழிகளிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

"நான் மனத்துள் என்ன என்னவெல்லாமோ கற்பனைக் கோட்டைகள் கட்டியிருந்தேன். என்ன என்ன வெல்லாமோ ஆசைகளை வளர்த்திருந்தேன். உன்னைப் போன்ற அழகும் அறிவும் படைத்த மனைவி நமக்கு வாய்த்தது பெரும் பாக்கியம் என்று எண்ணி இறுமாந்திருந்தேன். ஏன்? இப்பொழுதுங்கூட அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஏனோ தெரியவில்லை, எப்பொழுதும் நீ என்னை விட்டு விலகியே இருக்கிறாய். என்னை அணுகாமல் இருப்பதற்கான வழிகளையே எப்பொழுதும் தேடிக் கொண்டிருக்கிறாய். அயலான் வீட்டில் இருப்பதுபோல் சங்கோசப் பட்டுக் கொண்டிருக்கிறாய்; பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாய். இதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே வந்த மாதவப் பிரஸாத் அவள் தோள் மீதிருந்த கையை எடுத்து முதுகைத் தடவிக் கொடுக்கலானார்.

மனோரமா எத்தனையோ கதைகள் படித்திருந்தாள். கணவனுக்கும் மனைவிக்கும்



இடையே நிகழும் இனிய சுவாரஸ்யமான சம்பாஷணைகள் பலவற்றைப் படித்திருந்தாள். ஆனால் அந்தக் கற்பனை நிகழ்ச்சிகள் எல்லாம் இதுவரை கண்ணுக்கு நேரே நிகழவில்லை. இன்று பிரத்யக்ஷமாகக் கணவன் அன்பு காட்டும் கற்பனைக் காட்சியைக் கண்ணெதிரேயே கண்டாள். தன் காதுகளாலேயே கணவன் கூறும் காதல் மொழிகளைக் கேட்டாள். கதைகள் கற்பனையில் மட்டும் முளைப்பதில்லை. அனுபவத்திலும் புனையப்படுகின்றன என்பதில் அவளுக்குப் பரிபூரணமான நம்பிக்கை உண்டாயிற்று.

"மனோரமா! நான் உனக்குச் சொந்தமானவன், உன்னுடையவன். இந்த வீடும் உன்னுடையது!" என்று கூறித் தம்மையும் தம்முடையது என்றுள்ள அனைத்தையும் அந்தக் கணமே ஆத்ம சமர்ப்பணம் செய்யத் தயாராகி விட்டார் மாதவப் பிரஸாத்.

கணவரின் அம்மொழிகளின் உள் அர்த்தத்தை மனோரமா நன்கு புரிந்துகொண்டு விட்டாள். இதுதான் கணவன் – மனைவி இருவரின் ஐக்கியத்துக்கும் முதற்படி என்பது பெண் உள்ளம் படைத்த அவளுக்குத் தெரியாமல் இருக்குமா? ஆனால் அவள் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்கவில்லை. தன் அழகையும் அறிவையும் ஆற்றலையும் பற்றிக் கணவன் வாயாரப் புகழ்ந்தால் எந்த மனைவிக்குத்தான் புளகாங்கிதம் ஏற்படாது? 'நான் உன்னுடையவன்!' என்று சொல்லிக் கணவன் தன்னையே ஆத்ம சமர்ப்பணம் செய்து விட்டால், மனைவி என்றென்றும் இன்பம் அளிக்கும் சொர்க்க பூமிக்கே சென்று விட்டதாக எண்ணி இறும்பூது எய்தவேண்டியவள் தானே? ஆனால் மனோரமாவுக்குத் தன்னைப் பற்றிய புகழ் மொழிகள் பிடிக்கவில்லை. மாதவப் பிரஸாதும் அவருடைய வீடும் அவளுடையவை என்று சொல்லப்படாமல் இருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்போல அவளுக்குத் தோன்றியது.

மனைவியின் கோபத்தையும் பிணக்கையும் தணிப்பதற்கு மாதவப் பிரஸாதின் வார்த்தைகள் ஏதேஷ்டமானவை. இதைவிட மேலான வார்த்தைகள் இருக்கவே முடியாது என்றுகூடச் சொல்லலாம். ஆனால் மனோரமா அவ்வளவுக்கும் பிறகு கூடப் பேசாமல் இருக்கவே, மாதவப் பிரஸாதுக்கு மறுபடியும் கோபம் வந்து விட்டது. ஆனால் மனோரமாவின் அருகில் உட்கார்ந்திருந்ததனால் அவருடைய கோபம் அதிகமாகக் கூடவில்லை; தணியத்தான் செய்தது. யந்திரத்தின் அருகில் மின்சார விசிறி சுழன்று கொண்டிருந்தால் அதன் சூடு தணியத்தானே செய்கிறது? அதுபோல் அருகில் இருந்த மனோரமா அவர் கோபத்தை குறைக்கத்தான் செய்தாள். ஆயினும் கோபப்படுவது போலக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், "மனோரமா! நீ பேசமாட்டாயா, என்ன?" என்று கேட்டார் அவர். ஆனால் அடுத்த கணமே அவருடைய குரலில்



"ஒரு மாது தன்னை ஏன் சிங்காரித்துக் கொள்ள வேண்டும்? அவள் கணவனைத் திருப்தி செய்து கொள்வதற்காகவா?"

"இல்லை! மற்ற ஸ்திரீகளை அதிருப்தி செய்வதற்காகத்தான்."

தொனித்த கடுமை குறைந்து மென்மையாக மாறி விட்டது.

அவர் அதோடு நிறுத்திக் கொள்ள வில்லை. கடுமை தணிந்து விட்டது என்பதைக் காட்டிக் கொள்ளும் முறையில் "நான் என்ன அப்படிக் குற்றம் செய்து விட்டேன்!" என்று அடங்கிய குரலில் கேட்டும் விட்டார்.

பிச்சை கேட்பது போன்ற எளிமை தாண்டவமாடும் அந்தக் குரலைக் கேட்ட மனோரமாவின் மனத்தை வேதனை குடைந்தது. இருதயத்தில் இரக்கம் கனிந்து கசியவே, தலை நிமிர்ந்து அவள் மாதவப் பிரஸாதை ஒரு முறை பார்த்தாள். மாதவப் பிரஸாதுக்குத் தமது புது மண வாழ்க்கையில் அதைக் காட்டிலும் மணியான சந்தர்ப்பம் வேறு ஒன்று இருப்பதாகவே தோன்றவில்லை. ஏனெனில் இன்றுவரை மனோரமா மாதவப் பிரஸாதைக் கண் எடுத்துப் பார்த்ததேயில்லை. மனோரமா தம்மைப் பார்த்துவிடவே, மாதவப் பிரஸாத் மனம் நெகிழ்ந்து விட்டார். இம் முறையில் சென்றால்தான் நமக்கு வெற்றி கிட்டக் கூடும் என்ற நம்பிக்கை மாதவப் பிரஸாதுக்கு ஏற்பட்டு விட்டது. மனோரமாவின் மனத்திலே இம்மாதிரி இரக்கத்தையும் கனிவையும் கசியச் செய்தால்தான், தமக்கு மகிழ்ச்சி கிட்டக் கூடும் என்பதை உணர்ந்த அவர், அதைத் தொடர்ந்தாற் போலவே, "என்னைப் பார்த்தால் பிடிக்கவில்லையா? நான் நன்றாயில்லையா?" என்றும் கேட்டார்.

மனோரமாவின் மனத்தில் இரக்கத்தை உண்டு பண்ணும் நோக்கத்துடன்தான் மாத

வப் பிரஸாத் அந்தச் சொற்களைக் கையாண்டார். 'பிடிக்கவில்லையா, நன்றாயில்லையா?' என்ற அந்தச் சொற்களைக் கேட்டதும் மனோரமாவின் மனக்கண் முன்னே சுதாகர் வந்து நின்று விட்டான். மாதவப் பிரஸாதின் வேண்டுகோள் நிறைந்த பரிதாபமான குரலைக் கேட்டு மனோரமாவுக்கு இரக்கம் உண்டாயிற்று. அவள் அவரைப் பார்க்கவும் செய்தாள். ஆனால் மாதவப் பிரஸாத் கண்ணோடு கண் நோக்கி அந்தக் கேள்வியைக் கேட்டதும், அவளுடைய இருதயத்திலே சுதாகர் வந்து புகுந்து கொண்டான். காலை யிளஞ் சூரியனின் கனக கிரணங்களைக் கண்டு மகிழ்ந்து மலரும் மலர் போன்ற சுதாகரின் முகத்துக்கு எதிரே, வெய்யிலில் வாடி வதங்கி மகரந்தத்தை இழந்து நிறமிழந்த மலரைப் போல் மாதவப் பிரஸாதின் முகம் தோன்றிற்று. அன்றலர்ந்த மலருக்கும் வாடி வதங்கிய மலருக்கும் ஈடுகட்ட முடியுமா?

மனோரமா நிமிர்த்திய முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு, "எனக்கு இங்கே ஒன்றுமே பிடிக்கவில்லை!" என்றாள்.

"உனக்கு ஏன் ஒன்றுமே பிடிக்கவில்லை? எல்லோருடனும் நீ ஏன் கலகலப்பாகப் பேச மாட்டேன் என்கிறாய்? உனக்கு இங்கே என்ன குறை? நீ விரும்பும் பொருள் எதுவும் சரியாகக் கிடைப்பதில்லையா? உனக்குப் பிடித்த ஆடைகளை உன் இஷ்டப்படி வாங்கிக் கொள், உடுத்திக் கொள். எந்த எந்த மோஸ்தரில் என்ன என்ன நகைகள் செய்து போட்டுக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறதோ, அந்த அந்த மோஸ்தரில் அந்த அந்த நகைகள் பண்ணிப் போட்டுக் கொள். வீட்டில் ஆர்மோனியம் இருக்கிறது, வீணை இருக்கிறது. உனக்கு எது பிடித்தமோ, அதை வாசி. உன் ருசிக்கு ஏற்றபடி உணவு தயார் செய்து சாப்பிடு. இது வேண்டாம், அது வேண்டாம் என்று சொல்லி உன் கையைப் பிடித்துத் தடுப்பவர் இந்த வீட்டில் யார் இருக்கிறார்கள்? இது உன் வீடு. நீ இதன் எசமானி. உன் இஷ்டப்படி இரேன்!"

மாதவப் பிரஸாத் மனத்துக்குப் பிடிக்கக் கூடிய உபாயங்களாகச் சொன்னார். மனோரமாவின் மனம் மாறி அந்த வீட்டில் அவள் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்பது அவர் ஆசை. ஆனால் அவர் சொன்ன ஒரு உபாயமும் மனோரமாவுக்குப் பிடித்ததாகத் தோன்றவில்லையே, என்ன செய்வது?

மனைவி பிடிக்கவில்லை என்றால் கணவன் ஏதாவது ஒரு உபாயத்தைக் கைக்கொள்ள முடியும்; கைக்கொள்ளவும் செய்யலாம். ஆனால் கணவனே பிடிக்கவில்லையென்றால் அதற்குக் கணவன்தான் என்ன செய்ய முடியும்? அல்லது அந்தக் கணவனைப் பிடிக்காத மனைவிதான் என்ன செய்ய முடியும்? இது சம்பந்தமாகச் சாஸ்திரக் காரர்களோ, அறிவாளிகளோ என்ன செய்ய வேண்டும் ஏது செய்ய வேண்டும் என்று எதுவுமே சொல்லவில்லையே! அவர்கள் ஏதாவது ஒரு வரன் முறையோ சட்ட திட்டமோ வகுத்து வழி காட்டியிருக்க வேண்டாமா?

இத்தனை தூரம் படித்துப் படித்துச் சொன்ன பிறகு மனோரமாவைத் தனியே விட்டுவிட வேண்டும் என்று மாதவப் பிரஸாத் எண்ணினார். அவர் உள்ளத்தில் உண்டாயிருந்த ஆசை அழியாதது. நசிக்கக் கூடாதது. களைந்தெறிய நினைத்தாலும் களைந்தெறிய முடியாதது. மனோரமாவை எப்படியும் தம் இஷ்டத்துக்குச் சம்மதிக்க வைத்து விடலாம். அதற்கு இடைவிடா முயற்சிதான் தேவை என்று அவர் நம்பியிருந்தார். அந்த நம்பிக்கையுடனேயே அவர் அப்பொழுது வெளியே போவதற்காக எழுந்தார். அதே சமயத்தில் அவருடைய மகள் சாந்தா விழுந்தடித்துக் கொண்டு கூச்சலிட்டவாறே உள்ளே ஓடி வந்தாள்.

"இதோ பார்! இதோ பார்! அண்ணா என்னை அடிக்க வருகிறான்!"

இவ்விதம் கூவிக் கொண்டே ஓடி வந்தவள் மனோரமாவின் மடியில் வந்து புகுந்து கொண்டாள். அவளுக்கு மனோரமா அன்னியமாகத் தோன்றவில்லை. தனக்கு மிகமிக வேண்டியவளாகவே தோன்றினாள். மனோரமா கூட அந்த வீட்டில் உள்ள அத்தனை பேர்களைக் காட்டிலும் சாந்தாவிடத்தில்தான் அதிகப் பட்சம் கொண்டிருந்தாள். அவளுடன்தான் அதிகமாகச் சிரித்துப் பேசிப் பழகி வந்தாள். சாந்தாவிடம் மட்டும் என்ன? அந்த வீட்டில் உள்ள மற்ற குழந்தைகளிடமும் அவள் உயிராகத்தான் இருந்தாள். அவர்களுக்கு விளையாட்டுக் காட்டித் தானும் மகிழ்ந்து அவர்களையும் மகிழ்விப்பாள். மற்றபடி பெரியவர்கள் யாரிடமும் அவள் பேச்சே வைத்துக் கொள்வதில்லை. அவளுடைய இருதயம் அப்படிப் பேச்சு வைத்துக் கொள்வதற்குச் சிறிதும் இடம் கொடுப்பதும் இல்லை.

மடியில் வந்து விழுந்த சாந்தாவை மனோரமா மிகவும் அன்புடன் அணைத்துக் கொண்டாள். மாதவப் பிரஸாத் அந்தக் காட்சியை முதன் முதலாக அப்பொழுதுதான் கண்டார். ஆனந்தமும் ஆச்சரியமும் ஒன்றை ஒன்று உந்தித் தள்ளவே, அவர் உள்ளத்து நம்பிக்கை உயிர் பெற்றெழுந்தது. 'நமக்கு வெற்றி நிச்சயம்!' என்ற இறுமாப்பும் இருதயத்தில் இடம் பெற்றது.

"என் குழந்தைகளிடத்தில் இப்படி உயிரையே வைத்திருப்பவள் என்னிடம் உயிரை வைக்கவில்லை என்று நான் ஏன் தப்பாக எண்ண வேண்டும்? என்னிடமும் இவள் எல்லையற்ற அன்பு கொண்டுதான் இருப்பாள்!" — இந்த உணர்ச்சி உள்ளத்தில் எழுந்ததுதான் தாமதம், அவருடைய உடல் புல்லரித்தது; புளகாங்கிதம் அடைந்தது. எனவே, நம்பிக்கை நிறைந்து வழிந்த உள்ளத்துடன் அவர் மனோரமாவைப் பார்த்து,

# சிக்கனத்திற்கும் பந்தோபஸ்துக்கும்

சூப்பர் இந்தியா டயர்களினால் உள்ள இரட்டிப்பு ஆதாயம்

**கார்களுக்கு**

சுகமான சவாரி
மற்றும்
பந்தோபஸ்து

**லாரிகளுக்கும்
பஸ்களுக்கும்**

உறுதியான உழைப்பு
மற்றும்
சிக்கனம்

*"டயர்களில்
மிகச் சிறந்தவை"*




# சூப்பர் இந்தியா

IT. [illegible]

"இன்று மாலை நீ என்னுடன் உலாவ வர வேண்டும், என்ன?" என்று கேட்டார்.

இதைச் சொல்லி முடித்ததும் அவர் எழுந்து நின்றார், மனோரமாவின் பதிலைக் கேட்டதும் அந்த மகிழ்ச்சியிலேயே மிதந்து தம்முடைய வேலையைக் கவனிக்கப் போகலாம் என்ற நினைப்பில்.

ஆனால் மனோரமா வாய் திறந்து ஒன்றும் பதில் பேசவில்லை. மடியில் படுத்திருந்த சாந்தாவின் தலையைத் தன் கைகளால் இலேசாக வருடத் தொடங்கினாள்.

அதைக் கண்ட மாதவப் பிரஸாதுக்குத் தமது மனோபீஷ்டம் சித்தியடைந்து விட்டதாகவே தோன்றியது. மனத்தில் மகிழ்ச்சி பொங்கவே, அங்கிருந்து தரையில் சரியாகக் கால்கூடப் பாவாமல் புறப்பட்டு விட்டார்.

அத்தனை நேரமும் மனோரமாவின் மடியில் படுத்திருந்த சாந்தா எழுந்து அவள் எதிரே உட்கார்ந்தாள். பிறகு வைத்த கண் வாங்காமல் மனோரமாவின் முகத்தையே பார்க்கலானாள்.

அவள் அப்படிப் பார்ப்பதைக் கண்ட மனோரமா "என்ன, என்னை அப்படிப் பார்க்கிறாய்?" என்று கேட்டாள்.

"நீ அழுதாயா, என்ன?" என்று மனோரமாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமலேயே எதிர்க் கேள்வி போட்டாள் சாந்தா.

"உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் மனோரமா.

"எனக்குத் தெரியாதா? உன் கண்கள் தான் வீங்கிச் சிவந்து போயிருக்கிறதே! அழுதால் கண் வீங்கிச் சிவந்து போய் விடுமே! இது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டாள் சாந்தா.

மனோரமா இலேசாகச் சிரித்தாள். ஆனால் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"ஆமாம், நீ ஏன் இப்படிப் போய் விட்டாய்? நானுந்தான் தினம் பார்க்கிறேன். முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே உட்கார்ந் திருக்கிறாயே! ஏன்?" என்று பெரிய மனுஷி போல் கேட்டாள் சாந்தா.

"என் முகமே அப்படி. நான் என்ன செய்ய முடியும்? நான் ஒன்றும் வேண்டுமென்று தொங்கப் போட்டுக் கொள்ளவில்லை" என்றாள் மனோரமா.

"உன் முகமே அப்படியென்றால் எப்படி? உன் முகந்தான் நன்றாயிருக்கிறதே! நிஜமாகச் சொல்லுகிறேன். உன் முகம் நல்ல அழகு. எனக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருக்கிறது! தெரியுமா?" என்றாள் சாந்தா.

"அப்படியா? அப்படியானால் நீ என்னையே கல்யாணம் செய்து கொள்ளேன்!" என்று பதில் சொல்ல வேண்டும் என்று மனோரமாவுக்குத் தோன்றியது. ஆனால் மனத்தில் எண்ணிய பதில் மனத்திலேயே தங்கி விட்டது. சாந்தா மட்டும் இன்னும் கொஞ்சம் பெரியவளாயிருந்தால், பெண் உள்ளத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் அடைந்திருந்தால், மனோரமா கட்டாயம் அந்தப் பதிலைத்தான் சொல்லியிருப்பாள். ஆனால் சாந்தாதான் விவரம் அறியாத சின்னஞ் சிறு பெண்ணாக இருந்தாளே! மனோரமா அந்தப் பதிலைச் சொன்னால் சாந்தா புரிந்து கொள்ள வேண்டாமா? எனவே, மனோரமா ஒன்றும் பதில் சொல்லாமல் சாந்தாவின் கன்னத்தில் இலேசாகத் தட்டினாள். அதில் தாயின் அன்பு தாண்டவமாடுவதாகத் தோன்றவே, சாந்தா மறுபடியும் மனோரமாவின் மடியில் ஏறி 'ஜம்' மென்று உட்கார்ந்து கொண்டாள்.

அதே சமயம் கீழே தபால்காரன் குரல் கொடுத்தான். மனோரமாவின் முகபாவம் மாறியது. ஏன்? முகத்தின் நிறமேகூட மாறியது.


அடுத்த விநாடி சாந்தாவுக்குச் சாதம் ஊட்டும் சாக்கை வைத்துக்கொண்டு லக்ஷ்மி அந்த அறையில் நுழைந்தாள்.

லக்ஷ்மி வெகு நாட்களாகவே மனோரமாவின் மனத்துயரை மாற்றக்கூடிய மருந்து கண்டு பிடிப்பதில் ஈடுபட்டிருந்தாள். மறைமுகமாக மனோரமாவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணித்து வந்தாள். ஒவ்வொரு நாளும் தபால்காரன் கடிதங்களைக் கொண்டு வந்து போட்டு விட்டு 'தபால்!' என்று கூவும் பொழுது மனோரமாவின் முகம் பச்சோந்திபோல் அடையும் மாறுபாட்டையும் அவள் கவனிக்கத் தவறவில்லை. ஆனால் அவளுடைய அந்த முக மாற்றத்துக்குக் கார



"பலகாரம் சாப்பிட்டதிலிருந்து தொண்டையில் விக்குகிறது!"

"முதலில் அப்படித்தான் விக்கும்; பிறகு தானே வாங்கிவிடும், பேசாமல், இருங்கள்."



"ஏதுக்கடி கண்ணைக் கசக்கறே? நீபாவனிக்குத் தான் ஜசந்த புடவையா எடுத்துக் கொடுத்தேனே!"

"ஜசந்த புடவையுமில்லே, ஒண்ணுமில்லே! அதை அடுத்த விட்டு அம்புஜத்திடம் காண்பித்தேன். அவள் அதைப் பார்த்துப் பொருமையே படவில்லை!"

ணம் என்ன என்பதைத்தான் அவனால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மனோரமா தபால்காரனின் குரல் கேட்டதும் துணுக்குறுவாள். அவள் முகத்தில் வருத்தமும் வேதனையும் கவிந்து கொள்ளும். அதைத் தொடர்ந்தாற்போலவே ஒரு வித விசித்திரமான பரபரப்பும் புத்துணர்ச்சியும் பனிச்சிடும். அவளுடைய வெளிறிய வதனம் சிவப்பேறி அழகுற்று விளங்கும். இம்மாதிரி வர்ண ஜால விசித்திரங்கள் இந்திர வில்லின் வர்ணங்கள்போல அவள் முகத்தில் மாறி மாறிப் பிரதி பலிப்பானேன்? இதற்கெல்லாம் அடித்தலத்தில் என்ன புதை பொருள் புதைந்து கிடக்கக் கூடும்?

தினம் தபால் வரும். மனோரமாவின் பெயருக்கும் கூடப் பிரத்தியேகமாகப் பல தபால்கள் வருவது உண்டு. அப்படியிருக்கும் பொழுது – அதாவது கடிதங்கள் வருவது தினசரி வழக்கமாயிருக்கும்பொழுது அவளுக்கு அவ்வளவு பரபரப்பும் புத்துணர்ச்சியும் உண்டாவானேன்?

ஆனால் வந்த கடிதங்களைப் படித்து முடித்தபின் மனோரமா பழையபடியே சோர்ந்து வருத்தமே உருவாகி விடுவாள். தனக்கு வரும் கடிதங்களைப் பத்திரப்படுத்தி ஓரிடத்தில் வைக்காமல் கண்ட கண்ட இடங்களில் அப்படி அப்படியே போட்டு விடுவாள். தனக்கு வந்த கடிதங்களை வேறு யாராவது படித்து விட்டால் என்ன ஆவது என்ற கவலையோ, சிந்தனையோ அவளுக்குச் சிறிதும் உண்டாவதே இல்லை.

லக்ஷ்மி யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக ஒரு தடவை மனோரமாவுக்கு வந்த கடிதங்களைப் படித்துப் பார்த்தாள். ஆனால் அவள் எந்த எண்ணத்துடன் படித்தாளோ, அந்த எண்ணம் ஈடேறவில்லை. படித்து முடித்த பின் ஏமாற்றம்தான் எஞ்சிநின்றது. எந்தக் கடிதத்திலும் மனோரமாவின் மனத் துயரைப் போக்கக் கூடிய மாற்று மருந்து அவளுக்குக் கிடைக்கவில்லை. கடைசியில் அசகாய சூரத்தனம் வாய்ந்த லக்ஷ்மியேகூட நம்பிக்கை இழந்து விட்டாள்.

மனோரமாவின் நிலைமை எப்பொழுதும்போல ஒரே மாதிரியாக இருந்தது. உட்கார்ந்திருக்கும் பொழுதே அவள் துணுக்குறுவாள். திக்பிரமை பிடித்தவள்போல் நிலைக் குத்தலிட்டு நிற்பாள். வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதே யோசனையில் ஆழ்ந்து விடுவாள். புஸ்தகம் படித்துக் கொண்டேயிருக்கும் பொழுது, அவள் கண்கள் மேலேயுள்ள எழுத்துக்களையோ வார்த்தைகளையோ வாக்கியங்களையோ பார்க்க மறுத்துவிடும்: மனம் படிக்க மறுத்து விடும். சூழ்ந்த விஷயங்களை வாங்கிக் கொள்ள மறுத்து விடும். எதையோ பறிகொடுத்து விட்டவள்போல் எப்பொழுதும் வேதனையே உருவாக உட்கார்ந்து விடுவாள். மனோரமாவின் ஒவ்வொரு செயலையும் உன்னிப்பாகக் கவனிப்பவர்கள், கடிதம் வரும் நேரத்தில் மட்டும் அவள் நிலைமை வெகு விசித்திரமாகி விடுகிறது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்வார்கள்.


அன்றும் மனோரமாவின் மனப்போக்கை லக்ஷ்மி கூர்ந்து கவனித்தாள். சாந்தாவுடன் விளையாடிக் கொண்டேயிருந்தவள் 'தபால்!' என்ற குரலைக் கேட்டதும் அப்படியே விளையாட்டைப் பாதியில் விட்டு விட்டாள். கடிதங்களைப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு அவளுக்கு ஏகமாக அதிகரித்து விட்டது. ஆவலுடன் ஒவ்வொரு கடிதமாக விலாசத்தில் எழுதியிருக்கும் கையெழுத்தைக் கூர்ந்து கவனித்தாள். அடுத்த விநாடியே அவளுடைய அத்தனை ஆவலும் அடங்கி விட்டது. அவள் பல கடிதங்களைப் படிக்காமலேயே — ஏன்? — பிரித்துக்கூடப் பார்க்காமலேயே ஒருபுறம் வீசியெறிந்து விட்டுக் கட்டிலின்மீது போய்த் தொப்பென்று உட்கார்ந்து விட்டாள்.

லக்ஷ்மி அதைக் கவனித்தாள். "அம்மா! கடிதங்களைப் படிக்கவில்லையா? படியுங்களேன், அம்மா!" என்று அவள் மனோரமாவைத் தூண்டினாள்.

"எல்லாம் என் தோழிகளின் கடிதங்கள் தான். தனிமையாகப் படித்துக் கொள்கிறேன்!" என்றாள் மனோரமா. (தொடரும்)

# உயர்தரமான லன்ஸ்...பாஸ்ட் ஷட்டர் விலை ரூ.160/-மட்டுமே!

## புது ஸிக்ஸ்-20 "கோடக்" மாடல் A காமரா






**அருமையான படங்கள் —எப்பக்கமிருந்தும்.**

ஸன்ஸெட்டின் படம் பிடிக்கப் பதிலாருந்து உங்களுக்கு வேண்டாமா? பாலுட்லென்ஸ் f/4.5 வரை விரிகிறது. அதிப்ரகாசமான ஒளிகளிலும், மிதமான இருட்டான வாராண்டாக்களிலும் ஒரே போல. அதிசயிக்கத்தக்கது. சோம் சென்ற பாதி வரை, விரும்பிய காட்சிகள் எடுத்துக்கொள்ளலாம்.



**இரவிலும் கூட.**

சூரியன் மறைந்த பிறகோ அல்லது, பகலொளி இல்லாத கூடத்திலுள்ளோ படம் பிடிக்க வேண்டுமா? ஒரு "கோடக்" ப்ளாஷ் ஹோல்டரை சேர்த்துக்கொள்ளுங்கள், ப்ளாஷ் மிக எளிதானது — ப்ளாஷ் பல்புகளுக்கு வேண்டும் பணம் அவைகள் மின் போர்டிங் செய்த்துதரும் பில்மங்களிலிருந்தே! உங்களுக்கு கிடைத்து விடும்.



**ப்ரயோஜனமுள்ள வேகய ஷட்டர் ஸ்பீடுகள்.**

சாதா ஆட்டோமாடிக் செட்டிங்ஸ் 1/25 விருந்து பாஸ்ட் 1/150 செகண்டுவரை, ப்ரூப் இணைதும் கூட எக்ஸ்போஷர்களுடன். எந்த காமராக்களிலும் மிக நூதனமானவைகளுக்கு ஸ்பீடுகள் இணையான—துரிதமான ஆக்ஷன் (செயல்) படங்களுக்கும் சாதாரணமாக எடுக்கும் விருப்ப காட்சிகளுக்கும் ஒரே போல உத்தமமானது.



**மிகப் பெரிய படங்கள்**

உங்களுக்கு பிரியமான 2¼ x 3¼ அங்குலம் வரை. ஒரே ரோலில் எட்டு படங்களுடன் உங்கள் போட்டோ ஆல்பத்தில் அவை எவ்வளவு கவர்ச்சிகரமாக இருக்கும்.

**அழகான தோற்றக்காட்சிகளிலிருந்து— சித்திரங்கள்**

எதையும் படம்பிடியுங்கள். 3½ அடியிலிருந்து, அடி வானம் வரை எந்த தூரத்திலும் கூர்மையான போகஸில். சிக்கன பிடிக்கும், மெய்தோற்றம் கொடுக்கும் க்ளோஸ்-அப் படங்களைப்பார்த்து உங்கள் நண்பர்களும் குடும்பத்தினரும் பெருமைப்படுவார்கள்.



**நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த காமரா நீங்கள் விரும்புவதற்கு தயாராக இருந்த விலைக்கு**

"கோடக்" டைப் K A ப்ளாஷ் ஹோல்டர்— ரூ. 22/12/-
பதிமிட்ட அசல் தோல் கேஸ் ரூ. 22/-

மேலே தந்திருக்கும் விலைகளில் செயில்ஸ் டாக்ஸ் சேராது

**இன்னும் ஏராளமானவை!** வெவ்வேறு போட்டோ காரர்களுக்கும் விதவிதமான காமராக்கள் "கோடக்" டைப் ... ரூ. 17-8/-லிருந்து மேல் இருக்கிறது—ஏராளமான வகைகள். இன்றே உங்கள் "கோடக்" வியாபாரியிடம் சென்று உங்களுக்கு பிரியமான காமராவை பொறுக்கியெடுங்கள்!

உங்கள் "கோடக்" வியாபாரியை இன்றே பாருங்கள்.

**கோடக் லிமிடெட்**
(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

K. 9014



இந்த நவீன சிகிச்சை

## ஜலதோஷத்தை 2 விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.

இப்பொழுது நீங்கள் ஜலதோஷத்தை முன்னைக்காட்டிலும் அதிக சீக்கிரத்தில் நிறுத்தலாம். படுக்கப்போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை உங்கள் குழந்தையின் மார்பின் மேலும், தொண்டையின் மேலும், முதுகின் மேலும், தடவித் தேயுங்கள். இந்த நவீன ஒளஷதம் பல தேசங்களில் பிரக்யாதி பெற்றுள்ளது. ஏனெனில் அது ஜலதோஷத்தை இரண்டு விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.



1. அதன் குணப்படுத்தும் உஷ்ணம் மார்பிலுள்ள வலியை அகற்றுகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சக்திவாய்ந்த மருந்துச் சத்து சருமத்தின் வழியாக உட்சென்று மார்பிலுள்ள சளியை வெளியேற்றுகிறது. மேலும், அதே சமயத்தில்...



2. அதன் நல்ல வாசனை சுவாசக் குழாய்களைச் சுத்தம் செய்கிறது.

நல்ல வாசனையுள்ள விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்துக்கு மிகவும் சக்தி வாய்ந்த மருந்தாகும். உங்கள் குழந்தை இந்த வாசனையை இரவு முழுவதும் சுவாசிக்கிறது. அடைசலாயிருந்த அவனுடைய மூக்கு சுத்தமாகிறது. தொண்டைப்புண்ணுக்கு ஆறுதலளிக்கப்படுகிறது. இருமல் நிறுத்தப்படுகிறது. அநேகமாக மறுநாள் காலையில் ஜலதோஷத்தின் கொடுமை மறைந்துவிடுகிறது.

தடவித் தேயுங்கள்...

# விக்ஸ் வேபோரப்




"விக்ஸ்" மற்றும் "வேபோரப்" டிரேட் மார்க்குகள்.




புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலில் கரணையுள்ள இடங்களிலும் பவுடரை நன்றாக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.

நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம். அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.



# சார்மிஸ்

## டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோஹரமான நறுமணமுள்ளது.

# இலங்கைத் தமிழரும் இன்பத் தமிழும்

பண்டிதர் கா. போ. இரத்தினம்

## முன்னுரை

டெல்லியில் நடந்த தமிழ் விழாவில் கலந்து கொள்ளுவதற்காக இந்தியாவுக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது சென்னையிலும் பம்பாய், காசி, டெல்லி முதலிய இடங்களிலுமுள்ள தமிழ்ப் பெருமக்கள் சிலருடன் கலந்து உரையாடும்வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டொரு நிமிடம் யான் பேசுவதைக் கேட்டபின் அவர்களிற் பலர் என்னை நோக்கித் 'தாங்கள் மலையாளமா?' என்று வினவுவார்கள். இதற்கு இலங்கைத் தமிழர் தம் உச்சரிப்பு முறையே பெரும்பாலுங் காரணமாகும். தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் சென்றுள்ளேன். சென்னையில் இரண்டு வருடங்கள் வாழ்ந்துள்ளேன். ஆகையாலும் இவ்வினா எனக்குப் புதிதாகத் தோற்றவில்லை. இவ்வினாவுக்கு விடை கூறிய பின்னர் அந்த அன்பர்கள் கேட்ட வினாக்களே எனக்கு ஆச்சரியத்தையும் வியப்பையும் அளித்தன.

இலங்கையைப் பற்றியும், இங்கு வாழும் தமிழ் மக்களின் வரலாறு, அவர்கள் வாழ்க்கை முறை முதலியன பற்றியும் கல்வியறிவும் கேள்வி ஞானமும் உடைய தென்னிந்தியத் தமிழ் மக்கள்கூட நன்கு அறியாதிருக்கின்றனர்.

"மலையாளமா!" என்ற வினாவுக்கு "இல்லை, என் ஊர் இலங்கை" என்றதும் "சிலோனா" என்று கேட்டுத் தம் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வர். பின்னர் 'சிலோனைப் பற்றிப் பல வினாக்கள் எழும். 'யாழ்ப்பாணம் கொழும்பிலா இருக்கிறது! கொழும்பிலும் தமிழர்கள் இருக்கிறார்களா! நீங்கள் எப்பொழுது இலங்கைக்குச் சென்றீர்கள்! இலங்கையில் தமிழ் உண்டா! உங்களுக்கு இலங்கையில் பிரஜா உரிமை உண்டா!...... இவை போன்ற இன்னும் சில வினாக்கள்.

இவற்றைக் கேட்கும் பொழுதெல்லாம் இலங்கைத் தமிழரையும் அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டுகளையும் விரிவாக எழுதி இலங்கைக்கு வெளியில் உள்ள தமிழ் மக்கள் யாவரும் அறியச் செய்தல் இன்றியமையாதது என்று எண்ணினேன். அந்த எண்ணத்தின் காரணமாக எழுந்ததுதான் இந்தக் கட்டுரை.

## இந்தியாவும் இலங்கையும்

இக் காலத்தில் பல நாடுகளிலே தமிழ் மொழி பேசப்படுகிறது. தென்னிந்தியாவிலும், வட இந்தியாவிலுள்ள கல்கத்தா, டெல்லி பம்பாய் முதலிய நகரங்களிலும், இலங்கை, பர்மா, மலாயா, பீஜித்தீவுகள், தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளிலும் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவற்றுள்ளே தென்னிந்தியா பண்டு தொட்டுத் தமிழகமாக விளங்குகிறது. ஏனைய நாடுகளில் இலங்கை மாத்திரமே மிகப் பழைய காலம் தொடக்கம் தமிழகத்துடன் தொடர்புடையதாயிருக்கிறது. பாரதம் இராமாயணம் முதலிய இதிகாசங்களும் புராணங்கள் பலவும் இருநாட்டையும் பல துறைகளிலே இணைத்துள்ளன. பழந் தமிழ் நூல்களிலும் இலங்கையைப் பற்றிய செய்திகள் பலவுள. அவை இலங்கையை ஈழம் எனவுங் கூறுகின்றன. கடல் கொண்ட பழந் தமிழ்க் கண்டமாகிய குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஈழம் இலங்கியது. சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் ஈழநாடும் சேர்ந்து மிகப் பெரிய தமிழகமாக விளங்கியது. கடல் கோளினால் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னரும் ஈழநாடு தென்னிந்தியத் தமிழ் நாடுகள் போலத் தமிழினை வளர்த்து வந்துளது; தமிழ்ச் சங்கங்களை நிறுவியுளது; தமிழரசும் பெற்றிருந்தது. தமிழ் மன்னர்களை அன்றிச் சிங்கள மன்னரும் தமிழினை அரசியல் மொழியாகக் கொண்டுளர். தென் தமிழ்ப் பாவையாக விளங்கிய கண்ணகிக்குத் தமிழ் நாட்டிலே கோயில் எடுத்த காலத்தில் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் ஈழத்திலே கோயில் கட்டிப் பத்தினித் தெய்வத்தை வழிபட்டான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. தேவாரம் பெற்ற திருகோண மலை, திருக்கேதீஸ்வரம் எனும் தலங்களினாலும் திருப்புகழ் கதிர்காமத்தினாலும் இலங்கை சிறப்படைந்து விளங்குகிறது.

## இலங்கையின் பூர்வ குடிகள்

இத்தகைய இலங்கையின் தொல்குடிகள் நாகர் என்பதே சரித்திர ஆராய்ச்சி வெளிப்படுத்தும் உண்மையாகும். நாகர்கள் தமிழறிவிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய பழந் தமிழர்களேயாவர். தென்னிந்திய நாட்டிலும் நாகர்கள் வாழ்ந்தனர். நாகர் வம்சத்தைச் சேர்ந்த பல புலவர்களையும் வீரர்களையும் பற்றிப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. முரஞ்சியூர் முடிநாகராயர் எனும் புலவர் முதற் சங்க காலத்தில் வாழ்ந்தார். நன்னாகனார் மதுரை மருதன்ன நாகனார் முதலிய புலவர்கள் கடைச் சங்க காலத்தவர்கள். நாகப் பட்டினம், நாகர் கோவில் முதலிய இடங்கள் இன்றும் நாகர்களை நமக்கு நினைவூட்டுகின்றன.

இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடா நாடு முன்னர் நாக தீபம் எனப் பெயர் பெற்று விளங்கியதென்பது மகாவம்சம் முதலிய நூல்களால் நன்கு புலப்படுகிறது. நாகர்கள் நாகரிகமாக வாழ்ந்த இந்த நாக தீபத்தினையே மணிமேகலையும் மணிபல்லவமெனக் கூறுகிறது. இந்த நாக தீபத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த நாகரிற் பெரும்பாலானோர் சிங்களவராக மாறினர். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விசயன் எனும் அரச குமாரனையே தமது முதல் அரசன் எனச் சிங்கள மக்கள் கொண்டாடுகின்றனர். இந்த விசயனுடன் வந்த சுமார் ஐந்நூறு வீரர்களும், நாகர்களும் பிற தமிழர்களுங் கலந்து தோன்றிய சாதியினரே சிங்களவராவர்.

## தமிழர் ஆட்சி

இவ்வாறு சிங்களவர் தோன்றுவதற்கு முன்னரும் இலங்கையிலே தமிழர் வாழ்ந்தனர்; விசயன் காலத்துக்குப் பின்னரும் தமிழர்கள் பலர் இலங்கைக்கு வந்து குடியேறியுள்ளனர். இக் குடியேற்றம் இன்று வரையும் இடையிடையே நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. தமிழ் வீரர்களும் சோழ, பாண்டிய மன்னர்களும் படையெடுத்து இலங்கையை வென்று ஆண்ட காலங்களிலும் தமிழர் பலர் இங்கு வந்து குடியேறினர். இவ்வாறு ஈழம் புக்குப் பெருகிய தமிழ் மக்கள் இப்பொழுது

இலங்கையின் பல பகுதிகளிலும் வாழுகின்றனர். இலங்கையின் மத்தியப் பகுதியாகிய மலைநாட்டுப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தேயிலை ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்வதற்காகச் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் வந்து குடியேறியவர்கள். இவர்களில் சிலர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்டனர். பலருக்கு இன்னும் பிரஜா உரிமை கிடைக்க வில்லை. அவர்கள் பிரஜா உரிமையினைப் பெறு தற்கு இப்பொழுது முயற்சிகள் பல செய்கிறார்கள்.

வட மாகாணத்திலும் கீழ் மாகாணத்திலும் உள்ள தமிழர்கள் மிகப் பழைய காலந் தொடக்கம் வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் முன்னோர் யாழ்ப்பாணத்திலே கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே தமிழ் அரசு நடாத் தினர். இதற்கு முன்னரும் தமிழர்கள் இலங்கை முழுவதையும் இடை யிடையே ஆண்டிருக் கிறார்கள். கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இலங்கை முழுவதையும் ஆண்ட எல்லாளன் எனும் தமிழ் மன்னன் தன் முறை தவறா நீதியினால் பெரும் புகழ் படைத்தவன்.


யாழ்ப்பாண அரசர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் என வழங்கப்பட்டனர். இவர்கள் பதினேழாம் நூற்றாண்டு வரையும்—அதாவது போர்த்துக்கீசர் இலங்கையில் தம் ஆட்சியை நிறுவின காலம் வரையும்—யாழ்ப்பாணத்தையும் வட இலங்கை யையும் அவர்கள் ஆண்டு வந்திருக்கிறார்கள்.

## புலவர்களும் பாவலர்களும்

இந்த அரசர்களுடைய காலத்திலும் அதற்கு முன்னரும், மேல் நாட்டாராகிய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் இலங்கையை ஆண்ட காலத்திலும் ஈழத் தமிழர் தமிழ் மொழி யினை நன்கு வளர்த்து வந்திருக்கின்றனர். தமி ழரசர்களும் வள்ளல்களும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். இடை யிடையே சிங்கள அரசர் களுடைய ஆதரவுங்கூடத் தமிழ்ப் புலவர்களுக்குக் கிடைத்தது. தமிழகத்திலிருந்து புகழேந்தியார், அந்தகக் கவி வீரராகவர் முதலிய புலவர்கள் இங்கு வந்து பரிசில்கள் பெற்றுச் சென்றனர். யாழ்ப் பாணம் என்னும் நாடு தொண்டை நாட்டிலிருந்து வந்த யாழ்ப் பாணனுக்குப் பரிசிலாக அளிக்கப் பட்டதாலேயே இப் பெயர் பெற்றதென்பர். ஈழ நாட்டவர் புலவர்களுக்கு வரையாதீந்த இந்தப் பெருஞ் சிறப்பினைச் சின்னத் தம்பிப் புலவர்,

"பண்ணிற் றேயப் பொருள்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க்கு ஈந்திட என்றே
எண்ணிப் பொன்முடிப்புக் கட்டி வைத்திடும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே"

எனும் பாட்டினால் புலப்படுத்தினார். இவ்வாறு புலவர் போற்றும் புகழ் படைத்த இலங்கையிலே வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் செய்த தமிழ்ப் பணிகளும் இயற்றிய நூல்களும் பலவாகும்.





## ஆதி காலம்

கடைச் சங்க காலத்திலே தோன்றிய எட்டுத் தொகை நூல்களிலே ஈழத்துப் பூதன் தேவனார் பாடிய ஏழு பாடல் காணப்படுகின்றன. இவர் ஈழ நாட்டிலிருந்து தமிழ் நாடு சென்று அங்கே மதுரையில் தங்கித் தமிழ்ப் பாடல்கள் பாடி யுள்ளார். கடைச் சங்க காலத் திலே இலங்கையில் தமிழ்ப் புலமை யுடையார் இருந்தனர் என்பதை இவர் வரலாறு கூறும்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரும் ஒன்பதாம் நூற்றாண்டினராகிய சுந்தரும் திருகோணமலை, திருக்கேதீஸ் வரம் எனும் தலங்கள் மேல் தேவாரம் பாடியுள்ளார். இத னால் அவர்கள் காலங்களிலே இத்தலங்கள் மிகப் புகழ்படைத் திருந்தன என்பதும் சைவசமயம் இலங்கையிற் பொலிந்த தென் பதும் வெளிப்படை.

பத்தாம் நூற்றாண்டின் இறுதி யில் முதலாம் இராஜராஜன் எனும் சோழ மன்னன் இலங் கையை வென்று பொலனறு வையைத் தலைநகராக ஆக்கிக் கொண்டு ஆண்டான். பொல னறுவையில் ஒரு சிவாலயத் தைக் கட்டுவித்தான். இவ் வாலயத்தில் சோழ மன்னர்கள் இருவருடைய கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. பதினோராம்

## பழங் கதைதானு?




காகம் நரியின் பேச்சில் மயங்கி ஏமாந்த கதையை நினைவு கூர்ந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி குழப்பக்காரர்களின் வலையில் விழுந்து விடாம லிருக்குமா?

---

நூற்றாண்டிலும் இலங்கை முழுவதும் 'மும்முடிச் சோழ மண்டலம்' எனும் பெயருடன் சோழர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

### யாழ்ப்பாண அரசர் காலம்

**ப**தின்மூன்றும் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத் தனியரசு தொடங்கியதால் இந்நூற்றாண்டிலும் அடுத்த நூற்றாண்டிலும் தமிழ் வளர்ச்சி சிறப்பெய்திற்று. தமிழ்ச் சங்கமும் சரஸ்வதி மகாலயம் என்னும் நூல் நிலையமும் யாழ்ப்பாணத்துக்குப் பெருமை யளித்தன. பராக்கிரமவாகு என்னும் சிங்கள மன்னனுடைய அவையில் போசராச பண்டிதர் என்னும் புலவர் சரசோதிமாலை என்னும் சோதிட நூலை அரங்கேற்றினர். பதினன்காம் நூற்றாண்டில் செகராசசேகரம் எனும் வைத்திய நூலும், கணக்கதிகாரம் எனும் கணித நூலும் தோன்றின. கவிராசர் பாடிய கோணேசர் கல்வெட்டும் இக்காலத்ததே.

பதினைந்தாம் நூற்றாண்டில் அரசகேசரி இரகுவம்சம் என்னும் நூலை இயற்றினர். பராசசேகரம், பராசசேகரனுலா முதலிய நூல்களும் இக்காலத்திலே தோன்றின. அடுத்த நூற்றாண்டாகிய பதினறும் நூற்றாண்டில் கதிரைமலைப் பள்ளுப் பாடப்பட்டது. இந் நூற்றாண்டின் இறுதியில் அந்தகக் கவி வீரராகவ முதலியார் யாழ்ப்பாணம் வந்து அரசனிடம் பல பரிசில்கள் பெற்றுச் சென்றனர்.

### ஐரோப்பியர் ஆட்சிக் காலம்

**ப**தினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் போர்த்துக்கேசர் ஆட்சிக்கு உட்பட்டது; இந்நூற்றாண்டின் கடைப் பகுதியில் ஒல்லாந்தர் ஆளத் தொடங்கினர். சந்தியோகுமையார் அம்மானை, ஞானப் பள்ளு முதலிய கத்தோலிக்க சமய நூல்கள் தோன்றின. இந்நூற்றாண்டிலே திருநெல்வேலியி லிருந்த ஞானப்பிரகாசர் என்பார் அந்நியர்தம் கொடுங்கோலுக்கு அஞ்சி இந்தியாவுக்குச் சென்று பல நூல்களையுங் கற்றுப் புகழ் பெற்றார். இவர் வடமொழியில் பல நூல்களையும் சிவஞான சித்தியார் சுபக்கத்துக்கு ஓர் உரையினையும் எழுதியுள்ளார்.

பதினெட்டாம் நூற்றாண்டிலே தமிழ்மொழி கண்டி ராச்சியத்தின் அரசாங்க மொழியாக விளங்கிற்று. 1815-ஆம் ஆண்டில் சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் தமிழிலேயே கையெழுத்திட்டனர். இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே சின்னத்தம்பிப் புலவர், வரத பண்டிதர், மயில் வாகனப் புலவர், சிற்றம்பலப் புலவர், புலவன் விநாயகர் முதலியோர் விளங்கினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த காலத்தில் சமுத்திலே

தோன்றித் தமிழ் வளர்த்து இறக்கும் இறவாப் புகழ் பெற்றோர் பலராவர். தமிழ் மொழியின் வளர்ச்சி கருதிப் பல்வேறு புதுப் புதுத் துறைகளிலும் இந்தக் காலத்தில் இருந்த புலவர் பெருமக்கள் உழைத்துள்ளனர் தமிழ் நாட்டுக்குப் பல துறைகளிலே வழிகாட்டிகளாகவும் அமைந்தனர். இவர்கள் செய்த தமிழ்ப் பணிகள் பலவாகும்.

### நாவலரும் பிறரும்

“யாழ்ப்பாணத் தமிழ், செந்தமிழ், நற்றமிழ், இலக்கணத் தமிழ், யாழிசைத் தமிழ்” எனப் பலவாறு தென்னிந்தியத் தமிழறிஞர்கள் புகழும் பெருமையினை யாழ்ப்பாணத்துக்கு அளித்தற்குக் காரணமாயிருந்தவர்களுள்ளே மிகச் சிறந்தவர் ஆறுமுக நாவலராவர். அவருடைய காலத்திலும் இக்காலத்திலும் அவரைப் போலத் தமிழையும் சைவத்தையும் தழைத்தோங்கச் செய்தவர் ஒருவருமில்லை என்பது அறிஞர் கருத்தாகும். சி. வை தாமோதரம் பிள்ளையவர்கள், அறிஞராலே ‘தமிழ் வளர்த்த தாமோதரனார்’ எனப் போற்றப் பட்டார். சேனாதிராய முதலியார், கனகசபைப் பிள்ளை, கனகசுந்தரம் பிள்ளை, கதிரைவேற்பிள்ளை, சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், சுவாமிநாத பண்டிதர், விசுவநாத பிள்ளை, பொன்னம்பலப் பிள்ளை, வேற்பிள்ளை, குமாரசுவாமிப் புலவர், சுவாமி ஞானப் பிரகாசர், விபுலானந்த அடிகள், சோமசுந்தரப் புலவர் முதலிய பேரறிஞர் தம் புகழ் ஈழநாட்டில் மாத்திரமன்றிப் பிறநாடுகளிலும் பரவியுள்ளது. அரசியல் துறையில் மாத்திரமன்றித் தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய சேர். பொன். இராமநாதன், சேர். பொன் அருணாசலம் என்னும் இரு பேரறிஞர்களும் கலைமாச் செல்வராய் விளங்கிய ஆனந்தக் குமாரசுவாமி அவர்களும் உலகம் புகழும் சிறப்புப் பெற்றவர்கள்.

இலங்கையிலே இப்பொழுது வாழ்ந்து வரும் தமிழறிஞர்கள் செய்துவரும் தமிழ்த் தொண்டுகளை யாவரும் நன்கறிவார்களாகையால் அவற்றைப் பற்றிக் கூற வேண்டியதில்லை.

# வட்ட மேஜை

## புதுப் பஞ்சம்

“நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை” என்கிறபடி நல்லவராகிய ராஜாஜி நம் தமிழ் நாட்டில் நிரந்தரமாக இருந்து ஆட்சியையும் ஏற்றுக் கொண்டு நேர்மையாக ஆட்சி செய்து கொண்டிருப்பதால் தமிழ் நாட்டில் மழைப் பஞ்சம் நீங்கிற்று. ஆனால், எங்கள் ஊரில் ஒரு புதுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. சென்னையில் விறகுப் பஞ்சம் ஏற்பட்டு, விறகு ரேஷன் இருந்த காலத்திலும் எங்களூரில் விறகுப் பஞ்சம் கிடையாது. இப்பொழுது சுமார் எட்டு மாதகாலமாக விறகுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு தலை சுமை விறகு ரூ. 1—12—0 அளவுக்கும் விற்பனை செய்கிறார்கள். இதற்கு மூங்கில் விலை பத்து அணா தான். அதுவும்கூட சுமார் ஐம்பதாயிரம் ஜனத்தொகை உள்ள ஊரில் சுமார் நாற்பது தலைசுமைதான் விறகு மார்க்கட்டுக்கு வருகிறது. விறகு டிப்போக்களில் விறகு கிடைப்பதில்லை. சில நேரங்களில் விறகு டிப்போக்களில், புளியம் விறகு. இலுப்பை விறகு வருகிறது. ஆனால் இருபது ரூபாய்க்கு விற்ற ஒரு டன் விறகை நாற்பத்தைந்து ரூபாய்க்கு விற்கிறார்கள். அவர்களை நோவதில் என்ன பயன்! இப்படி விறகுப் பஞ்சம் ஏற்பட்டதற்குக் காரணம், காட்டில் விறகு வெட்டிக்கொள்ளச் சீட்டு கொடுப்பதில்லை என்கிறார்கள். காட்டில் சீட்டுக் கொடுப்பதில்லை என்றால் மற்ற ஊர்களுக்கும் அதாவது சென்னை போன்ற இடங்களுக்கும் விறகுப் பஞ்சம் ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா! வட ஆற்காடு ஜில்லாவுக்கு மட்டும். அதுவும் குறிப்பிட்ட எங்கள் ஊருக்கு மட்டும்தானா பஞ்சம் ஏற்பட வேண்டும். ஏழை நெசவாளிகள் வாழும் இந்த ஊரில் ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தால், யார் மிகவும் தயருறுகிறார்கள் என்பதை அறிய யாருமில்லையா! தவிர, வழக்கமாக விறகு வெட்டி ஜீவிக்கும் ஏழைமக்கள், தொழிலில்லாமல் ஜீவனத்துக்கே பசவாய் கஷ்டப்படுகிறார்கள் என்பதை எங்கள் ஜில்லா கலெக்டர் அவர்களிடம் யார் எடுத்துச் சொல்லப் போகிறார்கள்!

குடியாத்தம்
16—11—53

ஏ. சாம்பசிவம்

## உலகம் சிரிக்கும்

ராஜாஜி அவர்களை முதல்மந்திரி பதவியிலிருந்து விரட்ட நினைக்கும் காங்கிரஸ் எம். எல். ஏ.க்களை நினைக்க நெஞ்சம் குமுறுகிறது. அன்று இருந்த நிலையில் தாங்கள்தான் முதன் மந்திரி பதவியை ஏற்க வேண்டும் என்று ஏங்கித் தவித்து ஏக மனமனதாகத் தீர்மானம் போட்டு அவர் வீடு தேடிப் போய் வேண்டிக் கொண்ட தலைவர்களே இன்று அவரை விரட்ட சதி செய்யும் செய்தியைப் பத்திரிக்கைகளில் படிக்கின்றபோது மிகவும் வேதனையாக மட்டுமல்ல வெட்கமாகவும் இருக்கிறது. முன்பு 1947-ல் அவரை விரட்டினார்கள். அதன் பலன்தான் 1952 தேர்தலில் 375 பேர் கொண்ட சட்ட சபையில் 152 ஸ்தானம் காங்கிரஸிற்கு கிடைத்தது. இன்று விரட்டினால் அதன் பலன் வருகின்ற தேர்தலில்தான் தெரியும். ஆனால் விரட்டப் படுவதால் உலகமேதை ராஜாஜி அவர்களுக்கு ஒரு கஷ்டமும் கிடையாது. காங்கிரஸிற்குத்தான் நஷ்டம். ராஜாஜி பதவி ஏற்றவுடன் உணவு ரேஷனை ஒழித்தார். அதனால் கதர் வேஷ்டிக்காரர்களின் ஆறு அவுன்ஸ் என்ற பெயர் நீங்கிற்று. நியாய விலை சம்மந்தமாக அவர் கையாண்ட நடவடிக்கையில் கதர் வேஷ்டிக்காரர்களை புறம்போக்கு பேர்வழி என்றும் ஐந்து ஏக்கர் என்றும் வழங்கி வந்த இழி சொல்லும் மாறி வருகிறது. தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார். தஞ்சை ஜில்லாவில் கம்யூனிஸ்டுகளின் கொட்டம் அடங்கி அவர்கள் செல்வாக்கும் குறைந்து வருகிறது. தஞ்சை ஜில்லாவில் புயல் என்றவுடன் நேரில் வந்து பார்த்து தாராளமாக நிவாரணம் வழங்க உத்தரவு போட்டார். அது மட்டுமல்ல நமது மாபெரும் தலைவர் ராஜாஜி அவர்கள் இந்த நேரத்தில் நமது மாகாண முதல் மந்திரியாக இல்லாதிருந்தால் சென்னை தமிழர்களை சேர்ந்திருக்குமா! இம்மாதிரி நலன்கள் அனைத்தும் நமது மாகாண காங்கிரஸின் நலனும் வளர்ச்சியும் கருதி செய்தாரேயன்றி சுயநலம் கருதியா செய்தார். இதை பகுத்தறிவுள்ள யாரேனும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியுமா!


திருத்துறைப்பூண்டி
14—11—53

ஆர். கணபதி









BEFORE AFTER

# மூவர் ரகசியம்

### வசுமதி ராமசாமி

சுமதி சொல்லுகிறாள்:

**ப**ண்டிகை தினம் வந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவார். குழந்தை மாதிரி முன்கூட்டியே ஆயிரம் ஏற்பாடுகள் செய்வார். பண்டிகை பருவம் வருஷம் பூராவும் இன்பமாக இருக்கக் கொண்டாடுவது என்ற நம்பிக்கை. எங்களுக்கு நேர் விரோதமாக இருக்கிறதே.

ரவி எப்படியோ படித்துத் தேறி விட்டான். டாக்டர் வேலைக்கும் போய் விட்டான். இந்து சங்கீத விதூஷியாகி விட்டாள். நான்கு குழந்தைகளுக்குச் சிக்ஷையும் சொல்லிக் கொடுக்கிறாள். ரேடியோவிலும் பாடுகிறாள். இருவருக்கும் வரன்கள் வந்து கொண்டே இருக்கிறது. இன்று நாட்டில் உட்கார நிழல், கட்டத் துணி, படிக்கப் படிப்பு, சாப்பிட அன்னம் இவைகள் ஓரளவு இருக்க என்ன பாடுபடுகிறார்கள்! இந்தப் பிரச்னையைத் தீர்க்க எவ்வளவு அறிவாளிகள் மூளையைக் குழப்பிக் கொள்ளுகிறார்கள்! எனக்கு இவையெல்லாமே இன்று இருக்கிறது. என் வாழ்க்கையில் நிம்மதி உண்டா! எந்த ஆத்மா இவர்களைக் கண்டு சந்தோஷப்படைய வேண்டுமோ. அந்த ஆத்மா உலகில் இருப்பதும், இல்லாததும் தெரியவில்லை. எங்கள் வாழ்க்கைப் பூங்காவில் காலை நேரத்தை நினைத்து நினைத்துப் பெருமூச்சு விடுகிறேன். ஆஹா என்னை எவ்வளவு விரும்பி மணம் செய்து கொண்டார். அப்போது என் தோழிகள் சொன்னது காதிலேயே இருக்கிறது. "சுமதி அதிர்ஷ்டசாலி. மாப்பிள்ளை சென்னையில் ரயிலில் வேலை பார்க்கிறாராம். சம்பளம் குறைவு. சொத்தில்லை. ஆனால் என்ன கண் நிறைந்த கட்டழகன்" என்றாள் அம்புஜு. "நல்ல குலம். அத்திப் பலகை சாத்தின மாதிரி முதுகும் வாட்ட சாட்டமாக இருக்கிறார்" என்றாள் லச்சு. "அதைச் சொல்லுகிறாயே சுமதியை நிமிர்ந்து பார்த்து மாலை போடுவதும் பொட்டிடுவதும் என்ன கம்பீரமாக இருக்கிறது. கையைப் பிடிக்கும்பொழுதே தனி அழகாயிருக்கிறது" என்றாள் நீலா. "ரயிலில் வேலை சம்பளம் குறைவாக இருந்தால் என்ன! நினைத்த இடமெல்லாம் கட்டணமின்றி உல்லாசப் பிரயாணம் போகலாம்" என்றாள் மீனு. "இதெல்லாம் பெரிசில்லைடி! மாமியார் மாமனார் கூட நல்லமாதிரி. மாப்பிள்ளை ராமச்சந்திரன் என்ற பெயருக்கேற்றபடி குணமையாக இருக்கிறான். பெரியவாளும் சீரைக் கொண்டா, சௌகரியத்தைக் கொண்டா எனச் சீறாமல் திருப்தியாகச் செய்து கொண்டார்கள்" என்றாள் ருக்கு. என் தோழிகளும், இன்னும் ஊரார்களும், இப்படி எத்தனையோ என் அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்தது மறக்கவேயில்லை. எல்லாருக்குமே இளம் பிராயம் தான் இன்ப மயமான நாட்கள். ஆனால் என் வரையில் அந்த மிகக் குறுகிய நாட்களோடு வாழ்க்கையே முடிந்து விட்டது.

சின்ன சம்பளம்தான். ஆனால் அது எங்கள் ஆனந்த வாழ்க்கையில் குறுக்கிடவில்லை. நான் சமையல் செய்யப் புகுந்தால்கூட ஜலம் பிடித்து வைக்க வந்து விடுவார். நான் அரிசி களைந்தால் அவர் கறிகாய் நறுக்க வந்துவிடுவார். பக்கத்தில் குடித்தனம் இருக்கிறவர்கள் கேலி செய்வார்களென்று நான் சிணுங்கினால், "எங்கே, எங்கே இதுகூட அழகாயிருக்கிறது. பக்கத்து வீட்டுக்காரர்களுக்காக நம்முடைய பொன்னான நாட்களை இரும்பாக்குவதா!" என்பார். எங்கள் வாழ்க்கை மணம் கொடுக்க ரவியும் இந்துவும் பிறந்தார்கள். ஆபீஸிலிருந்து வந்ததும் குழந்தைகளை எப்படித் தான் கொஞ்சுவார். இன்று அவர் மனம் கல்லாகி விட்டதே. இவர்களைப் பிரிந்து எப்படித்தான் இருந்தாரோ அல்லது இருக்கிறாரோ! அதோ ரவி வந்து விட்டான். அந்தப் பிள்ளை வாசலில் வரும் பொழுதே அம்மாவென்று கத்துவான்.

ரவி சொல்லுகிறான்:

**அ**ன்று பரீட்சை ரிஸல்ட் வந்த சந்தோஷத்தை அம்மாவிடம் சொல்ல ஓடினேன். முற்றத்தில் சாய்ந்து கொண்டு பிரமை பிடித்தவள் மாதிரி உட்கார்ந்திருந்தாள். கண்ணீர் பெருகிக் கன்னமெல்லாம் கறைப் பட்டிருந்தது. அம்மா மனத்தில் என்னதான் இருக்கிறதோ கேட்டாலும் சொல்வதில்லை இப்படி வருந்தினால் மடக்கமாய்ப் போய்க் கட்டை ஆகிவிடுகிறாள். என் நண்பன் ராஜாராமன் வீட்டுக்குப் போயிருந்தேன். அவனுடைய அத்தையும், அம்மாவும் "ரவியின் அம்மா என்ன மனுஷி! கணவனை இழந்த பிறகு கூட அலங்காரமாக இருக்கிறாளே. அவர்கள் வீட்டுக்குப் போகாதே என்றால் இந்தப் பிள்ளை கேட்பதில்லை. அவள் கொடுக்கும் பக்ஷண, பலகாரத்தை வாங்கிச் சாப்பிடுகிறான்" என்று பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். அம்மாவிடம் வந்து இதைச் சொன்னேன். ஏன் சொன்னேனென்று ஆகிவிட்டது. பதில் சொல்லாமல் சுருண்டு விழுந்து விட்டாள். அம்மா மனத்தில் ஏதோ ரகசியம் புதைந்திருக்கிறது. ரகசியத்தின் உருவமே இருளானது. மகிழ்ச்சியான சம்பவம் என்றாவது இருளாக இருக்கமுடியுமா! அவமானம், குற்றம், வருத்தம், இவைகள் தானே மனித மனத்தில் ரகசியம் என்ற போர்வையில் மறைகிறது. அப்பா இறந்து விட்டதாகத் தான் அம்மா சொல்லுகிறாள். ஆனால் அவள் கோலம்! அம்மா, அப்பா மனம் புண்படும்படி நடந்து கொண்டிருப்பாளோ! ஊரோ அப்பா பட்டாளத்தில் சேர்ந்து உழைத்து இறந்து விட்டாரென்று சொல்லுகிறது. சேச்சே என் நெஞ்சம் எவ்வளவு கொடியது. அம்மா முகத்தில் குற்றமற்ற தெய்வத் தன்மை ததும்புகிறதே. அதைப் பார்க்கும் போது என் மனம் நடுங்குகிறது. இந்து சின்னவள். உலகம் தெரியாதவள். தட்டான் பூச்சியைப் போல் சந்தோஷமாக இருக்கிறாள்.


நான் கற்றதோ வைத்தியத் தொழில். மக்கள் நோயையும், கொடுமையையும் பார்த்து உணரும் வித்தை. நோயாளியின் முனகல், முனகல் எனக்குச் சங்கீதம். இன்றும் ஒரு சிலரின் மரணம் எனக்குச் சர்வசாதாரண நாடக நிகழ்ச்சி.

குழந்தை இந்து அவள் மனம் துன்புறாமல் இருக்கட்டும். அவள் கற்றது கலை. மெய்மறக்கச் செய்யும் சங்கீதம் மனித இதயத்தையும் ஏன் தெய்வத்தையும் இளகச் செய்யும் சடில்லாத சங்கீதம். ஆத்மாவைத் தொடும் திவ்ய கானம். தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளும் நாதம். அவளுக்காக நான் எந்தவிதமான தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறேன். அம்மா என் வித்தையைப் பிரமாதமாகப் போற்றுகிறாள். இது மக்களின் பிணியை ஆற்றுமாம். என் மனத்துக்கு எவ்வளவு உளைச்சல். எவ்வளவோ பேருடைய பிணியை ஆற்றப் போகிறேன். ஆனால் என் தாயின் பிணியை ஆற்ற முடியவில்லையே. அம்மாவின் வேதனையை; அவள் துயரத்தை இந்துவிடம் சொல்லக் கூடாது.

இந்து சொல்லுகிறாள் :

அம்மா உடம்பில் தெம்பே யில்லை. சதா வியாதியும் விசாரமுமாக இருக்கிறாள். அம்மா சிரித்துப் பேசி நான் பார்க்கவில்லை அப்பா படத்திற்குப் புஷ்பம் போடும்பொழுது மட்டும் சின்னப் பெண்ணைப் போல் நாணிக் கொள்கிறாள். உலகில் அப்பா இல்லாத பெண்ணே இருக்கக் கூடாது. நான் பாடினால் அம்மா ஏன் பெருமூச்சு விடணும்! கிரிஜாவுக்குக் கூட அப்பா இல்லை. அம்மா தான் இருக்கிறாள். ஆனாலும் அவள் அம்மா ஜீவனுடன் பலமாய் இருக்கிறாள். பெண்ணுக்குத் தலை பின்னுகிறாள். பூ வைக்கிறாள் கோவிலுக்குப் போகிறாள். ராமாயணம் கேட்கப் போகிறாள். அம்மா மட்டும் ஓரிடத்துக்கும் வருவதில்லை. நிர்ஜீவனாய் இருக்கிறாள். அன்று அண்ணாவும், நானும் பிடிவாதம் செய்து கோவிலுக்கு அழைத்துப் போனோம். இருட்டின பிறகுதான் வருவேனென்றாள். ஊர் ஓசை அடங்கின பிறகுதான் போனோம். கோபுர வாசலில் தொங்க விட்டிருக்கும் பலகையை வெறித்துப் பார்த்தாள். அப்படியே மயக்கமாய் விழுந்து விட்டாள். நானும் அண்ணாவும் பதறி விட்டோம். அந்தப் பலகையில் ஒன்றும் பேய் இல்லை. காலின் கீழ் விஷகாளி ஓடவில்லை. தேவஸ்தானத்தின் வேண்டுகோள். பலகையில் கோவிலுக்குச் செல்பவர்கள் சுத்தமாகச் செல்ல வேண்டும். கோவிலுக்குள் எச்சில் உமிழ்ந்து குப்பை போட்டு அசுத்தம் செய்யக் கூடாது. மகாரோகிகள் தயவு செய்து கோவிலுக்குள் வரக்கூடாது. இவ்வளவு தானிருந்தது. அன்று அம்மாவை வீட்டுக்குக் கொண்டு சேர்க்கப் போதும் போதுமென்றாகி விட்டது.

கிரிஜாவின் அப்பா இறந்ததைப் பற்றி அவள் அம்மா சகஜமாக எவ்வளவோ கதை சொல்லுகிறாள். உங்கப்பாவுக்குச் சாப்பாட்டில் அது பிடிக்காதென்று, இது பிடிக்காதென்று எதையாவது சொல்லுகிறாள். சிலசமயம் உங்கப்பா இருந்து உன்னைப் பார்க்கவில்லையே யென்று கண்ணைக் கசக்கிக் கசக்கி ஒரு சொட்டு ஜலம் விடுகிறாள். அம்மா மாதிரியே தனியாக இருக்கிறது. அம்மா விடமிருந்து அப்பாவைப் பற்றி ஒரு பேச்சு வருவதில்லை. வாயை விட்டு வராமல் பொங்குகிறாள். மூச்சு சண்டமாருதமாக வருகிறது. அருமையில்லாத தாயெனச் சொல்ல முடியுமா! தன் கஷ்டத்தைப் பெற்ற பெண்ணிடம் சொல்லக் கூடாதா! ஆனால் அம்மாவை விட்டுக் கொடுத்து ரவியிடம் ஒன்றும் சொல்லக் கூடாது. அவன் ஆண் மகன். நாளைக்கே அவனுக்கு மனைவி வருவாள். செய்யும் உத்தியோகமோ சமூகத்தின் கஷ்டங்களை நீக்கும் அருந் தொண்டு. மக்கள் புண்ணை ஆற்றும் பெருந் தொண்டு அவனிடம் என் வேதனையைக் காட்டிக் கொள்ள மாட்டேன். என் சகோதர வாஞ்சை, அவனுக்காக எந்த விதமான தியாகமும் செய்வதற்கு என் மனம் பின்னடையாது.



"நாங்கள் 'கார்'லே வந்தோம்; நீங்கள் எப்படி வந்தீர்கள்?"
"நாங்கள் 'கால்'லே வந்தோம்!"

சுமதி சொல்லுகிறாள் :

இரண்டு நாளைக்கு முன் பௌர்ணமி வந்தது. என் முற்காலத்தின் நினைவு வந்தது. வெளி மாடியில் எவ்வளவு நிலவுகளைக் கழித்திருக்கிறோம். குளிர்ந்த சந்திரனுடைய கிரணம் அவர் உடம்பில் படும்பொழுது தேகம் பால் வழியும். என் முகத்தையும், சந்திரனையும் ஒத்துப் பார்ப்பார். உங்கள் பெயரும் அழகும் சேர்ந்து விட்டது என்பேன். பிரம்மாவுக்குப் புதுமாதிரி முகங்கள் சிருஷ்டிக்க ஆவல் பிறந்தது. அன்று பூர்ணிமை. சந்திரனைப் பார்த்துக் கொண்டே உன் முகத்தைச் சிருஷ்டித்து விட்டார் என்பார் 'ரவியைப் பாரு. அந்த சந்திரனுக்கும் ஒளி தரும் காந்தியுடன் இருக்கிறான்' என்பார். சிறந்த ரசிகர். மனிதனுக்கு உள்ளத்தைக் கொண்டு திருப்தியும் கடவுளின் சிருஷ்டியைக் கண்டு அனுபவிக்கும் ரசிகத்தன்மையும் இருந்து விட்டால் அவனுடைய வாழ்க்கை அமரத்துவ மடையாதா! குண தோஷத்தை நிவர்த்தித்துச் சாந்தமாக இருந்தால் எது கிட்டாது. அப்படிப் பட்ட பேறுகளைப் பெற்றிருந்தார்.

அடிக்கடி சந்திரனையும், எங்கள் வாழ்க்கையும் ஒப்பிடுவார். அமாவாசை சமயத்தில் என் மனம் வேதனையுறும். "நித்தியமான நம் வாழ்க்கைக்குச் சந்திரனை ஏன் ஒப்பிடுகிறீர்கள்! தினம் தேய்ந்து, தேய்ந்து முப்பதாம் நாள் மாய்ந்து மறையும் சந்திரன் எங்கே! நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் என் சந்திரன் எங்கே!' என்று ஒரு நாள் கோபித்தேன். ஆகாயத்தைப் பார் சுமதி. அந்தச் சந்திரன்கூட என்மாதிரி கோபித்துக் கொண்டு மேகத்தில் மறைகிறான்" என்று மறுபடியும் சந்திரனைப் பிணைத்தே அவர் பேசினார்.

மார்கழி மாத பனி காலம். அதி காலையில் எழுந்து விடுவார்; பாடுவார்; பஜனை செய்வார். அன்று மாதப் பிறப்பு. எழுந்தவர் பூஜை அறைப் பக்கமே வரவில்லை. போர்வையைப் போர்த்திக் கொண்டு எங்கேயோ கிளம்பி விட்டார். அன்றுதான் என் சந்திரனைக் கிரகணம் பிடித்தது போலும். என்னுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. அன்று முதல் சொக்காயை ஒரு நிமிஷம் அகற்றுவதில்லை. ஏன் குளிரா! காய்ச்சலா என கேட்டால் என்னை உற்றுப் பார்த்து விட்டுப் போய் விடுவார். அந்தப் பார்வையில் கோபமா, வெறுப்பா, தாபமா ஒன்றும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னிடம் மட்டும் இந்தப் பராமுகமில்லை. குழந்தைகளையும் கூப்பிடுவதில்லை, கொஞ்சுவதில்லை. அப்பா! அப்பாவென இந்துமதி



ஓடி வருவான். கடிக்கும் நாய் துரத்துவதுபோல் குழந்தையைத் திரும்பிப் பார்க்காமல் ஓடி விடுவார். அவர் செய்கையும், மனமும் என்னைச் சித்திரவதை செய்தது. அழுது அழுது முகம் வீங்கினேன். ஒரு மாதத்தில் தாடியும் மீசையும் யோகிமாதிரி காட்சி அளித்தார். உடனே சாப்பிட்ட தட்டு, பாத்திரங்களைக் கழுவி வைத்து விடுவார். அவர் செய்கை புரியாத புதிராக இருந்தது. நாளுக்கு நாள் இருள் கவ்வியது. என்ன கோபமோவென்று காலைப் பிடித்துக்கொண்டு அழப்போவேன். உதறி விட்டு வெறிகொண்டவர்போல் ஓடுவார். "எந்த காதகி வலையில் விழுந்து விட்டீர்கள்! எந்தப் பாவி உங்கள் மனத்தை இப்படி கலக்கி விட்டாள்!" என்று முகம் தெரியாத என் சிறுக் சத்துருவைச் சபிப்பேன்; விம்முவேன். பட்டினி கிடப்பேன். என்னையே நான் தண்டித்துக் கொள்வேன்.

ஒருநாள் இப்படி சபித்து நான் திட்டி அழுத போது "கமலி ஒருவர் வலையிலும் நான் விழவில்லை. அப்படி விழுந்திருந்தால் இந்தக் கோலமாகவா இருப்பேன். வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே. குழந்தைகளைப் பார்த்துக் கொள்" என்றார். கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் உதிர்ந்தது. தேனொன்று சுவைத்த அவர் உதடுகள் காய்ந்து சீலமாக இருந்தன. வேலையையும் விட்டு விட்டார் போலும். வீட்டுச் செலவுக்குக் காலணா காசுகூட இரண்டு மாதமாகக் கொடுக்கவில்லை. எது கேட்டாலும் மௌனம். ஓட்டம்.

அன்று பூர்ணிமை. இரவு ஏழு மணிக்கு வருகிற வழக்கம் எட்டு ஒன்பதென்று மணி ஓடியது. அவர் வரவேயில்லை. வேதனையும் கலக்கமும் அதிகரித்து விட்டது. வாசலில் கேட்கும் சைக்கிள் கார் ஓசை எல்லாமே ஏதோ அவரைப் பற்றிய கெட்ட செய்தியைத்தான் சொல்ல வருகிறதென்று திடுக்கிடுவேன். எண்ண அலைகள் என்னைப் புரட்டிப் புரட்டி அடித்தன. பிறகு அவர் வரவேயில்லை. சரத்காலம் வசந்த காலம் எல்லாம் வந்து மாறின. என் வாழ்க்கை மாறவில்லை. எவ்வளவோ விசாரித்துப் பார்த்தும் ஒன்றும் புலனாகவில்லை. என் சகோதரன் என் வருத்தத்தை ஆற்ற ஒரு மாதமிருந்து விட்டு என் செலவுக்காக ஒரு தொகையையும் கொடுத்து விட்டுப்போனான். என் மனம் என் எதிர் காலத்தின் பயங்கரத்தை விசுவரூபமாகக் காட்டியது. உடம்பின் அணிகலங்களை விற்றுச் சில மாதங்கள் தள்ளினேன். 'அப்பா எங்கே!' 'எப்போ வருவார்' என்றெல்லாம் நச்சு செய்த குழந்தைகளுக்கு 'அப்பாவை ஆபீஸில் வெளி நாட்டுக்கு அனுப்பி விட்டார்கள்; சில வருஷத்தில் வந்து விடுவார்' என்று சொல்லி வைத்தேன். அக்காலத்தில் அந்த இளம் மனங்கள் எவ்வளவு கற்பனை செய்யும்! அப்பா வரும் பொழுது தங்களுக்கு விதம்விதமான விளையாட்டுச் சாமான்களெல்லாம் வாங்கி வருவதைப் பற்றி அவர்கள் அளாவுவார்கள்.

உடன் பிறந்தவன் தெய்வம்தான். ரவியின் படிப்புச் செலவுக்கு மட்டும் மாதம் தவறாமல் உதவி செய்தான். எப்படியாவது அவன் வீட்டுக்கு நான் மக்களுடன் வருவதை அவன் விரும்பவில்லை. அதைத் தடுக்க உதவி செய்தாலும் உதவி உதவிதானே. ஆம் இருவருக்கும் நல்லதுதானே. எனக்குத் தெரிந்த பாட்டும் படிப்பும் பெண்களுக்குச் சொல்லிக் கொடுத்து ஊதியம்பெற உதவியாக இருந்தது. கல்லாய்க் கனத்த நாட்கள் ஆமை வேகத்தில் சென்றன. அவர் குடும்பத்தை விட்டுப் போகத்தான் போனாரே காரணத்தைச் சொல்லி விட்டுப் போனால் சற்று ஆறுதலாக இருக்கும் என்றெல்லாம் மூளையைக் குட்டையாகக் குழப்பிக் கொள்வேன். இரவெல்லாம் அழுவேன். என் உயிரை மாய்த்துக் கொள்ள நினைப்பேன். ஆனால் குஞ்சலம் போன்ற குழந்தைகளை நினைத்துப் பொறுத்துக் கொள்வேன். மூன்று வருஷங்கள் நான் இப்படித் தவித்த பிறகு அந்தக் கடிதம் வந்தது. ஆம்! எந்த ஊரிலிருந்து வந்ததென்று என்னால் அறிய முடியவில்லை. என் கணவர்தான்

# உடலுழைப்பும் புதிய கல்வியும்

சில தினங்களுக்கு முன் அமெரிக்காவின் ஒரு பிரசித்தி பெற்ற இந்தியானா பால் யுனிவர்ஸிடியின் தலைவரும் பலர் மதிப்புக்கும் பாத்திரருமானவர். ஜான் எம்மன்ஸ் என்பவர் விவேகானந்தா கல்லூரியில் ஒரு அரும் சொற்பொழிவு ஆற்றினர்.

அப்பொழுது அவர் கூறியதாவது, "இந்தியர்கள் உடல் உழைப்பின் மகத்துவத்தைச் சரியாய் உணர்ந்து கொள்ளவில்லை. இதைப் பற்றி நான் பல இந்தியர்களின் கூட்டங்களில் வற்புறுத்தி வருகிறேன். அமெரிக்காவில் இத்தகைய நிலைமை, நல்ல வேளையாகக் காணப்படுவதில்லை.

"என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என் தந்தைக்கு ஒன்பது குழந்தைகள் உண்டு. அவர்களில் மூத்தவனான நான் கல்லூரிக்குச் செல்லும் வயதடைந்த பொழுது என் தந்தையின் பொருளாதார நிலை என் படிப்புக்கு இடம் கொடுக்கவில்லை.

"என் தந்தையிடம் சில ஆடுகள் இருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டும், ஹோட்டல்களில் 'வெய்ட்டர்' ஆக இருந்தும், புல் அறுத்தும் மற்றும் பலவாறு உழைத்தே நான் என் கல்லூரிப் படிப்புச் செலவுக்குப் பணம் சேர்க்கவேண்டியிருந்தது. நான் கல்லூரியில் படிக்க வேண்டுமானால் உழைத்தே ஆகவேண்டியிருந்தது. இவ்வேலைகளைச் செய்தே நான் என்னுடைய எம். ஏ., டாக்டர் முதலிய பட்டங்களைப் பெற்றேன்.

"இவ்வாறு கல்லூரி மாணவன் உழைப்பதென்பது எங்கள் நாட்டில் சர்வ சாதாரணமான விஷயம். நாங்கள் உழைத்தது போலவே எங்கள் குழந்தைகளும் உழைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அவ்வாறு உழைத்துத் தங்கள் கல்விச் செலவைத் தாங்களே சம்பாதித்துக் கொண்டு தங்கள் தந்தைக்கும் உதவி செய்ய வேண்டுமென்று எண்ணுகிறோம்.

"என் மகனும் வீடு கட்டும் தொழிலில் அமர்ந்து தன் கல்லூரிப் படிப்புச் செலவின் ஒரு பகுதியைச் சம்பாதித்து வருகிறான். அதே போன்று எல்லா மாணவர்களும் ஏதேனும் ஒரு தொழில் செய்தே வருகிறார்கள். என் மகனை நான் உழைக்கச் சொன்னதற்காக என்னைப் பலர், 'அப்படியானால் உன்னையும் உன் மகனையும் பிறர் தாழ்ந்தவர்கள் என்று எண்ண மாட்டார்களா?' என்று கேட்கிறார்கள். 'ஒருவன் உழைக்கிறான் என்பதற்காக அவனை ஏன் தாழ்ந்தவனாக மதிக்க வேண்டும்? அதற்குப் பதிலாக அவன் உழைக்கிறான் என்ற காரணத்தால் பிறர் அவனை உயர்ந்தோனாகவே மதிக்க வேண்டும்' என்று இவர்களுக்கு நான் பதில் கூறி வருகிறேன்."

இவ்வாறு, சூட்டும் டையும் அணிந்த பொறுப்பான பதவி வகிக்கும் அமெரிக்கர் வாயிலிருந்து இம்மொழிகள் வந்தன என்பதை நாம் இங்கு நினைவு கூரவேண்டும். அமெரிக்காவில் மக்கள் நிலை இவ்வாறிருந்தால் அது ஏன் இன்று உலகின் முன்னணியில் இராது! அமெரிக்கர்களுடைய நாகரிகத்தையும் மற்ற வேண்டாதவற்றையும் பின்பற்றும் நாம் அவர்களுடைய நற்பண்புகளையும் பின்பற்றக் கூடாதா? அவர்களைப் போல் தமிழ் நாட்டுத் தம்பி தங்கைகளுக்கும் உடல் உழைப்புக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் ராஜாஜியின் உயரிய கல்வித் திட்டத்தை ஆதரிப்பது நமது கடமை யல்லவா!

ச. கணேசன்.

விவேகானந்தா கல்லூரி மாணவன்


எழுதி இருந்தார். முத்துப் போன்ற அவருடைய அழகிய கையெழுத்துத்தான்.

அதே அன்பு வார்த்தையில் "என் உயிரே" என ஆரம்பித்து விஷயத்தை எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்து முடியும் வரை கண்கள் மாலையாகச் சொரிந்து கடிதத்தை அர்ச்சித்தது. மூச்சு உஷ்ணக் காற்றாக இருந்தது. இப்படி ஒரு காரணத்துக்காக என்னைத் துறக்க வேண்டுமா! நளாயினி, சீதை, மண்டோதரி பிறந்த நாட்டில் நான் பிறக்கவில்லையா! என் கஸ்தூரிபா பிறந்து அடிசாற்றின இந்த மண்ணில் நான் பிறக்கவில்லையா! என்னை இப்படி குறைவாக மதிப்பிட்டு விட்டாரே யென்று அழுதேன். இதைக் குடும்ப ரகசியமாகக் காப்பாற்ற வேண்டுமாம் பாழாய்ப் போன ரகசியம். என் மடமையை என்ன சொல்வது! அவருடைய மாறுதலில் ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லையே! அவருக்குப் பெற்ற குழந்தைகளுக்குச் செய்யப் பொறுப்பில்லை. எனக்குத்தான் அந்தப் பொறுப்பு என அவரைத் தவறாய் எவ்வளவு நாட்கள் நினைத்திருக்கிறேன். அவருடைய வாழ்க்கை தெய்வீகமானது. எப்படியோ மலைபோன்ற நாட்களைத் தள்ளி விட்டேன். ரவியும் இந்துவும் முன்னுக்கு வந்து விட்டார்கள். அடுத்த வெள்ளிக்கிழமை அவர்கள் திருமணமும் நடக்கிறது. அன்றே அவர்கள் தந்தையின் கடிதத்தைக் கொடுத்துவிட வேண்டியதுதான். ரவியின் வெள்ளை உள்ளம் என்னைக்கூட குற்றமாகக் கொள்வது என்பதை அறிவேன். அடுத்து வரப்போகும் தீபாவளிப் பண்டிகைக்குள் அவர்கள் மனம் தெளியட்டும். இப்பொழுது ரவியின் மனத்தில் ஒரு குழப்பம் இருந்து கொண்டே இருக்கிறது.

ரவி சொல்லுகிறான்:

அம்மா 'பௌர்ணமியன்று விவாகம் வேண்டாம். இரண்டு நாட்களுக்கு முன்பே முகூர்த்தம் வைத்துவிடு' என்றாள். தினமும் அம்மாவின் முகத்தில் சோகத்திரை படர்ந்திருக்கும். பூர்ணிமையன்று இன்னும் கஷ்டப் படுவாள். தெய்வம் போன்ற தாயை நான் சிலசமயம் எவ்வளவு தவறாக நினைத்தேன் ஆனால் வாயை விட்டுச் சொல்லாமல் இருந்தேன். என் ஆயுள் பூராவும் அதை நினைத்து அழ வேண்டியதுதான். அன்று நிலவில் படுத்துக் கொண்டால் சிலருக்குப் பைத்தியம், குஷ்டம் முதலிய வியாதிகள் வருகிறதென்று வைத்தியக் கல்லூரியின் பேராசிரியர் சொன்னாரென்று சொன்னேன். அன்னை சாப்பிட்டுக் கொண்டே இருக்கவள் தொண்டையில் ஏதோ மாட்டிக் கொண்டு விட்டதென்று எழுந்தாள். அதெல்லாம் இந்தக் கடிதத்தைப் பார்த்த பிறகு தானே புரிகிறது. கல்யாணமான மறுநாள் நான் என் புது மனைவியுடன் வெளி மாடியில் பேசிக் கொண்டிருந்தேன். அன்னை 'ரவி! ரவி!' என அதட்டலாகக் கூப்பிட்டாள் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனோ அம்மா என் மனைவி முன்னால் இப்படி அநாகரீகமாகக் கத்துகிறாளென்று நினைத்தேன். 'வெளிக்காற்று உடம்புக்கு ஆகாது உன் அறையில் போய்ப் பேசுங்கள்' என்றாள். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அம்மாவுக்கு நான் மனைவியுடன் ஆனந்தமாகப் பேசுவது பொறாமையென்றுகூட நினைத்தேன்.

நேற்று மாலை என் அன்னை என்னையும் இந்துவையும் அவள் அறைக்கு அழைத்துப் போனாள். தடித்த ஒரு கவரை என் கையில் கொடுத்தாள். "ரவி! உன் தந்தை உரிய சமயத்தில் உனக்குக்


வின்கோலா டானிக் நீடித்த நோய்களுக்குப் பிறகும், களைப்பிலிருந்தும் சீக்கிரமாக பலத்தை மீட்டுத் தருகிறது. சாப்பிட இனிமையான இது பசியையும் ஜீரண சக்தியையும் தந்து, எடையை அதிகமாக்குகிறது.
வின்கோலா
தேர்ந்தெடுத்த
டானிக்
வைட்டமின்கள்
உள்ளதும் இல்லாததும்
ஸ்டாண்டர்ட் பார்மஸூடிகல்
ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா
PSSV-16



எழில் வாய்ந்த
கொண்டைகளையும்
பெருகும் கூந்தலையும்
கேசவர்த்தினியின்
உதவியால்
அடையுங்கள்
கேசவர்த்தினி அணா 14. ஷாம்பூ அணா 14. எங்கும் கிடைக்கும்.
தென் இந்திய ரஸாயனசாலை - கோயமுத்தூர்

கொடுக்கச் சொன்னார். என் வாழ்க்கையை இந்தக் கடிதம் சொல்லும்'' என்று விம்மினாள். என் மனம் உருகிவிட்டது. நானும் இந்துவும் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தோம். அப்பாவால் அம்மாவுக்கு எழுதப்பட்ட கடிதம்.

'என் உயிரே!' என ஆரம்பித்திருந்த அந்த கடிதத்தின் முதல் பாராவில் இணையற்ற அன்பைச் சொரிந்திருந்தார். நான் ஆயிரமாயிரம் வருஷம் உன் கையைப் பிடித்துக் கொண்டு பூரண சந்திரனைப் போல் பவனி வர நினைத்தேன். ஒருவேளை நாம் வயோதிக மடைந்து மரணம் நம்மைப் பிரித்தால் மறுபடியும் ஜனனம் நம்மைச் சேர்த்து விடுமென்று எனக்குத் தெரியும். உன் முகத்தில்தான் என்ன சாந்தம் அமைதி. ஸ்ரீராமர் சந்திரனைப் பிடித்துக் கையில் கொடு என்று குழந்தைப் பருவத்தில் அழுததாகக் கதை உண்டு. ஆனால் நான் குழந்தையாக இருந்தபோது அப்படி அழுததாக என் தாய் அடிக்கடி சொல்வாள். இளம் வயதில் நான் பூர்ணிமையன்று ஆற்றங் கரையில் மற்றப் பையன்களோடு விளையாடுவேன். குளிர்ந்த சலசலவென்ற காற்றும் தென்னை மரத்தின் அசைவும் என் மனத்தைக் கவரும். ஒரு பூர்ணிமையாவது நான் அனுபவிக்காமல் விட்டதில்லை. எனக்காகப் பிறந்தவள் நீ. நாம் நிலாவில் எவ்வளவு இன்பக் கதைகள் பேசி யிருக்கிறோம். கனவு கண்டிருக்கிறோம். உன் மதி முகத்தைப் பார்த்த பிறகு சந்திரனுடைய அழகு எனக்குக் குறைவாக தோன்றும். உன் குண அழகு உன் உடலழகுக்கு மெருகு கொடுத்தது. பிரதிமைகளைப் போன்ற குழந்தைகளை வேறு நீ பெற்றெடுத்தாய். என்ன கோட்டைகள் கட்டினேன். என் கோட்டைகளில் விதி அணுகுண்டை வீசி விட்டது. விதி என் எதிரி. காலத்தைப் புயலாக மாற்றியது.

மறக்க முடியாத அந்த நாளை நினைக்க என் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது. பூர்ணிமையில் குழந்தைகளுடன் கடற்கரையில் வெகு நேரம் உட்கார்ந்திருந்தோம். உலகில் நம்மைப் போன்ற ஆனந்த தம்பதிகள் இல்லையென பேசினோம். திடீரென்று மேகங்கள் கறுத்துச் சந்திரனை மூடிக்கொண்டு தூற ஆரம்பித்தது. அன்று ஏனோ என் மனம் கலக்கத்தை அடைந்தது. அதற்குப் பத்து தினங்களுக்குப் பிறகு ஒருநாள் காலையில் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்தேன். எனக்குத் தலை கனத்தது. என் முகம்தானா என்று சந்தேகம் வந்து விட்டது. முகவாய்க்குக் கீழ் கழுத்துக்கு மேல் சிறிது சிவப்பு கலந்த அந்த வெளுப்பு எனக்கு மிகப் பயங்கரமாகத் தோன்றியது. தைரியத்தை விடாமல் வைத்தியரிடம் காட்டினேன். ஏதோ மருந்து கொடுத்து ஊசியும் போட்டார். நீ கூட அது என்ன என்று கேட்டாய். பஸ்ஸில் ஏறும்பொழுது பட்டு விட்டதென்றேன். பிறகு ஒரு நண்பர் 'பஸ்ஸில் பட்டால் அப்படி இராதே' என்றார். அதனால் மற்றவர்களிடம் கட்டப்புண் என்றேன். ஒவ்வொருவரிடம் ஒருமாதிரி சொன்னேன். ரகசியமாக வைத்தியம் நடந்தது. சில தினங்களுக்குப் பிறகு பஸ் ஸ்டாண்டில் ஒரு பிச்சைக்காரன் காசு கேட்டான். நான் காசு கொடுக்காமல் போனேன். ''என் மாதிரி சீக்குத் தானே ஐயா உனக்கும் வந்திருக்கிறது. மனமிரங்கிக் காலணா போடேன்'' என்றான். நான் தீயை மிதித்தவன் போல் துள்ளினேன். பக்கத்திலிருந்தவர்கள் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். ஆம்! டாக்டர் மழுப்பினார். ஏதோ வைட்டமின் குறைவு என்று ஊசி போட்டார். அவர் படித்துப் பட்டம் பெற்றவர். சொல்லத் தைரியமில்லை. இந்த எளிய பிச்சைக்காரன் உண்மையைச் சொல்லி விட்டான். அன்று எட்டிக் காயாகக் கசக்கும் உண்மையை நான் எப்படிச் சொல்வது! இன்று சொல்லுகிறேன். உன் அன்பு கணவன் சந்திரன் ரோகி, எவ்வளவு தரம் நீ அழும்போதெல்லாம் நான் சொல்ல நினைத்தேன். என் நா எழவில்லை வைத்தியத்தில் மறையுமோ என்ற சபலத்தில் என் களங்கத்தை மறைக்கத் தாடி வளர்த்தேன். பௌர்ணமிக்குப் பிறகு மறையும் சோலையைப் போல் என் முகப்பொலிவு மறையத் தொடங்கின. உன்னையும் என் கண்மணிகளையும் பிரியத் துணிந்தேன். நான் மேலும் உங்களோடு வாழ்ந்தால் குழந்தைகளின் வாழ்வு அமாவாசையைப் போல் இருண்டு விடுமென உணர்ந்தேன். இளம் தளிர்கள், ஆயிரம் காலம் வாழப்போகும் பயிர்கள். அவர்கள் திருமணத்தில் துன்பம் வரும். வாழ்வில் கிரகணம் பிடித்து விட்டது. உன்னிடம் சொன்னால் என்னை விடமாட்டாய். உன் அன்பு, தியாகம் எல்லாம் நான் அனுபவித்தவன்.

அந்த இரவில் அழுது வீங்கின கண்களுடன் களைத்துத் தூங்கினாய். களங்கமற்ற குழந்தைகள் நிம்மதியாகத் தூங்கினார்கள். நாம் ஏனோ நம் படுக்கை அறையில் சித்தார்த்தர் படம் மாட்டியிருந்தோம். அமைதியான இரவில் மங்கலான சிவப்பு வெளிச்சத்தில் அந்தப் படம் ஒரு தேஜஸுடன் பிரகாசித்தது. அதுவே எனக்குக் குருவாக அமைந்தது. அந்தப் பெருமான் என்னைப்போன்ற ரோகி ஏழை இவர்களைக் கண்டுதானே மனமிரங்கி மனைவி மக்களைத் துறந்தார். மகா ராஜாதி ராஜனுக்கு அவ்வித துறவு இருக்கும்பொழுது எனக்கு ஏன் இந்தச் சபல புத்தி! அவருக்கும் எனக்கும் நோக்கத்தில் வித்தியாசம். என் சுயநலத்துக்காகக் கூட நான், தியாகம் செய்யக்கூடாதா! உனக்கு ஒரு முத்தம் அளித்தேன். வெளியேறி விட்டேன். ரவிக்கு வைத்தியப் படிப்பும், இந்துவுக்குச் சங்கீதத்தில் தேர்ச்சியும் அளிக்க நினைத்தேன். உன்னால்



ரசிகர்:—உங்களுக்கு 'நாதஜீவதாரா' என்ற தியாகராஜ உருப்படி பாடம் உண்டா?

வித்வான்:—இல்லையே!

ரசிகர்:—அந்த உருப்படி பாடத் தெரியாத வித்வான், ஒரு வித்வானா ஐயா?

வித்வான்:—அது சரி, நீங்கள் ஜெர்மனி போயிருக்கிறீரா?

ரசிகர்:—இல்லையே!

வித்வான்:—ஜெர்மனி போகாத மனுஷன் ஒரு மனுஷனா?

எவ்வளவு முடியுமோ செய். நீ கலங்காமல் குழந்தைகளைக் காப்பாற்று. அவர்கள் வாழ்க்கையை மலரச் செய்.

வாழ்க்கை முடிவற்ற பிரயாணமில்லை. எவ்வளவு துன்பகரமான நாட்களும் நின்று விடுவதில்லை. நாட்களின் உருண்டோடும் குணம் நம் மனப் புண்களைப் பெரிய வடுவுடன் ஆற்றும். இந்தப்பிரயாணம் முடிந்து மறு பிரயாணத்தில் நாம் ஒன்று சேருவோம். இப்பொழுது விதி சதி செய்து விட்டது. அடுத்த பிரயாணத்தில் நமக்குக் கடவுள் கருணை பூரணமாக இருக்கும். என்னை மன்னித்து விடு. பொறுப்பற்ற மனிதன் என்று எண்ணாதே. எனக்குள்ள புத்திர வாஞ்சைதான் என்னை இடச் செய்தது. உன் அன்பன், சந்திரன்.

என எழுதியிருந்தது. கண்ணீர் மாலைகள் நடுநடுவில் கடிதத்தைப் படிக்க விடாமல் மறைத்தது. இருவரும் அம்மா தோளைப் பிடித்துக் கொண்டு அழுதோம். அன்னை நிதானமாகக் கடிதத்தை வாங்கிக் கொண்டாள். இது நம் மூவருடைய ரகசியமாக இருந்து அழியட்டும். அதுதான் நீங்கள் பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமை யென்று ஆசிர்வதித்தாள். மறுநாள் தீபாவளி அன்று அன்னையை நமஸ்கரித்தேன். நிமிர்ந்தபோது அன்னை தெய்வமாகத் தோன்றினாள்.

# படித்துப் பாருங்கள்!

## மகான் துர்க்கா சரண நாகர்

பாரத தேசத்தின் ஞான வாழ்வின் மறுமலர்ச்சிக்கு ஆதர்ச புருஷராக விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஈடுபட்டு அவருக்குச் சீடர்களானவர்கள் பலர். அவர்கள் இல்லறத்தை மறந்துத் துறவறம் பூண்டு, பரமஹம்சரின் ஞான ஒளியைப் பெற்றனர்.

அந்நகைய சீடர்களுள் மகான் துர்க்கா சரண நாகரும் ஒருவர். அவர் இல்லறத்தில் இருந்து கொண்டே துறவு வாழ்க்கையை நடத்தினர்; தேகப் பற்று, உறவினரிடம் பற்று, மக்கள் மனைவியிடம் பற்று, பணத்தின்மேல் பற்று இப்படி எல்லாப் பற்றுக்களையும் அறவே ஒழித்து, பரமாத்ம சொரூபத்தை மனத்துட் கொண்டு பரம புருஷராக வாழ்ந்து வந்தார். பின்னைப் பிராயம் முதல் இறுதிநாள் வரையில் மகாசயரின் புனித வாழ்க்கையை விரிவாக இந்நூலிற் காணலாம்.

எழுதியவர்: ஸரத் சந்திர சக்கரவர்த்தி, மொழி பெயர்த்தவர்: என். எஸ். நாகராஜன்; பிரசுரம்: ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை—4; விலை ரூ. 1—8—0.

## மக்களின் மாபெருந் தலைவர்கள்

ஞானத்தில் சிறந்த மகான்கள் எந் நாட்டவராயினும், எம் மதத்தவராயினும் சரி, அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஆவல் இருப்பது இயல்பு. இந் நூலில் முப்பத்து மூன்று மகா புருஷர்களைப் பற்றிய வரலாறுகள் கூறப்பட்டிருக்கின்றன.

சாக்ரடிஸ், அப்ரகாம் லிங்கன், திருவள்ளுவர், அசோகர், ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல் முதலியவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் படிப்பதற்குச் சுவாரஸ்யமாயிருக்கிறது.

ஆசிரியர்கள்: லாயிட் லார் பீர், வி. ஜெயராஜ்; கிடைக்குமிடம்: லாயிட் லார் பீர், பசுமலை, மதுரை ஜில்லா; விலை: அணா 0—8—0.

## A Primer of Tamil Literature

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம் அருமைத் தமிழ் மொழியிருந்த நிலையை ஆராய்ந்து விளக்கி, இன்று வரையில் உள்ள அம்மொழியின் வளர்ச்சியையும் அந்நூல் குறிப்பிடுகிறது. பழந் தமிழ் இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய அபிவிருத்தி முதலிய விவரங்களைக் கால நிர்ணயக் குறிப்புகளுடன் விளக்குவதென்பது மிகவும் சிரம சாத்தியமான காரியம். பழந் தமிழ் இலக்கியத்தின் காலம் கி. மு. 1000 முதல் கி. பி. 200 வரையில் எனப் பாகுபடுத்தி, சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய நூல்களின் சிறப்பை அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார் ஆசிரியர். கி. பி. 200 முதல் 1800 வரையில் மத்தியகால இலக்கிய வரலாற்றைச் சுருக்கமாக ஆராய்ந்திருக்கிறார். அந்தப் பகுதியில் சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் இயற்றிய பாசுரங்களும், கம்ப ராமாயணமும் இடம் பெற்றிருக்கின்றன. இறுதியில் 1801-ம் ஆண்டிலிருந்து இக்காலம் வரையில் ஏற்பட்ட தமிழ் மொழியின் வளர்ச்சி விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழர்கள் மட்டும் அல்லாமல் இதர மொழியினர்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு இந்நூல் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டிருக்கிறது.

எழுதியவர்: கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்; 45, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை—14; விலை: ரூ. 2—8—0.

## கீதைப் பேருரைகள்

உலகமெல்லாம் பரவிப் பிரசித்தி பெற்று விளங்கும் பழம்பெரும் நூல் பகவத் கீதை. அது ஆத்ம ஞானத்தை அருளும் அரிய நூல்.

அந்த இணையற்ற நூலைப் பற்றி ஆச்சாரிய வினோபா பாவே நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்நூல். இந்தச் சொற்பொழிவுகள் தொண்டர்கள் முன்னிலையில், பொது மக்களைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டவை. கீதையின் ஒவ்வொரு சுலோகத்தையும், சுலோகத்தின் பதங்களையும் அலசி ஆராயும் முயற்சியில் ஸ்ரீ வினோபா இறங்கவில்லை. கீதை கூறும் விஷயங்களின் சாரம் என்ன என்பதைத்தான் ஆராய்ந்து தத்துவார்த்தங்களை வடித்து விளக்கியிருக்கிறார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் படித்துப் பாராட்டிய மராத்திய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இது.

பிரசுரம்: ஸர்வோதயப் பிரசுராலயம், (சர்வ சேவா சங்கம்) திருப்பூர்; விலை: ரூ. 2—4—0.

## அகதி

ஒன்பது சிறு கதைகள் கொண்ட இந்தத் தொகுதியில் பலதரப்பட்ட மனித வாழ்க்கையின் ரகசியங்களையும் நம் வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பார்க்க முடியாத பல சம்பவங்களையும் ஒரு புதிய கோணத்தில் பார்க்கிறார் இந்தப் புத்தக ஆசிரியர். கதைகள் எளிய தமிழ் நடையில் சிக்கல் இல்லாமல் போகின்றன.

ஆசிரியர்:- பா. கணேசன். சுமதி வெளியீடு, 78 மேலவீதி, சிதம்பரம், விலை அணா-12.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10



காலை வேளையில்
நாள் முழுவதும்
விளையாட்டின் பின்
புத்துணர்ச்சி
இரவில்
அளிக்க...
Himalaya Bouquet
குளுமையான நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே
பௌடர்களை
உபயோகியுங்கள்
ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ண நிலைகளிலும்
சருமத்தைப் பாதுகாக்கிறது.
HBP. 7-X30 TM

REGD. No. M. 4392
*Registered as a newspaper in Ceylon*